janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூன் 05 - ஜூன் 11 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 09




### உண்மைதானா?

திரு நரேந்திர மோடி அவர்கள் ஒரு சாதாரண மனிதர் அல்ல. பத்தோடு பதினொன்று என்று புறம் தள்ளக் கூடிய மனிதர் அல்ல, உலகில் சீன தேசத்திற்கு அடுத்த இடத்தில் மக்கள் தொகையில் பெரும் >>>



ப 02

### சங்கரர்

இந்திய கருத்து முதல்வாதத்தின் சிகரத்தை சங்கரர், ராமானுஜர், மத்துவர், சைவ சித்தாந்திகள் ஆகியோரிடம் காணலாம். இவர்கள் பொருளை மறுத்தவர்கள். பிரும்மம் என்பதற்கு முதலிடம் கொடுத்தவர்கள். >>>



ப 05

### வாய்தா! வாய்தா!! வாய்தா!!!

வாய்தா திரைப்படத்தை பார்த்துவிட்டு வெளிவந்தபோது ஒரு உணர்வு கொந்தளிப்பில் நான் சிக்கி இருந்தேன். இதோ தீர்வு வந்துவிட்டது என்று நம்பி ஒவ்வொரு முறையும் கிடைக்க விடாமலேயே தட்டிப் பறித்துக் கொண்டிருக்கிற சமூக அவலத்தை >>>



ப 15

## ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து

# சிபிஐ, சிபிஎம், விசிக

# தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம்



**ஒன்றிய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தும், விலைவாசி உயர்வுக்கு எதிராக, வேலையின்மைக்கு எதிராக நாடு முழுவதும் இடதுசாரி கட்சிகளின் சார்பில் 7 நாட்கள் நடைபெறும் பிரச்சார இயக்கம் கடந்த மே 25ஆம் தேதி துவங்கியது.**

அதன் ஒருபகுதியாக தமிழகத்தில் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் எழுச்சியுடன் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்று வந்தன. இந்த பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மே 27 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது:

*“இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கையால் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை எதிர்த்து இன்று சிங்களவர், தமிழர், கிறித்துவர் என அனைவரும் சாதி, மதம், இனம் கடந்து ஒற்றுமையுடன் போராடி வருகிறார்கள். மக்களின் ஒற்றுமைக்கு எழுச்சிக்கு, முன்னால் எந்த சர்வாதிகாரமும் வெற்றி பெறாது என்பதுதான் வரலாறு. அதே ஆணவத்தோடு மோடியும் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார். ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தைப்போன்று ஆகஸ்ட் 9இல் ‘மோடியே வெளியேறு’ என ஒன்றிணைந்து குரல் கொடுப்போம், சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்”* என்றார்.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், சிபிஐ(எம்.எல்) மாநிலச் செயலாளர் நடராஜன், சிபிஐ மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர் :** வத்திராயிருப்பில் சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி, வட்ட செயலாளர் கோவிந்தன், தவிச சவுந்திரபாண்டியன் உள்ளிட்டோரும், செட்டியார் பட்டியில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம், ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, வழக்கறிஞர் பகத்சிங், இராஜா உள்ளிட்டோரும், திருவில்லிபுத்தூரில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் வி.அழகிரிசாமி, ஒன்றிய செயலாளர் பலவேசம், பொருளாளர் பொன்னுபாண்டியன், துணை செயலாளர் செல்வம் உள்ளிட்டோரும், சாத்தூரில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சுவாமிநாதன், நகர செயலாளர் ஜான்ராஜா உள்ளிட்டோரும்,

சிவகாசியில் மாவட்ட பொருளாளர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா, துணை செயலாளர் கலைவாசன், நகர செயலாளர் இக்பால் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர். விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துகுமார், மாவட்ட குழு உறுப்பினர் காதர்முகையதின், தஓவாஇ முருகேசன் உள்ளிட்டோரும், அருப்புக்கோட்டையில் வட்ட செயலாளர் முனியசாமி, துணை செயலாளர் கரியமால், பொருளாளர் பாண்டி உள்ளிட்டோரும்,

திருச்சுழியில் ஒன்றிய செயலாளர் செல்வம், துணை செயலாளர் பெரியண்ணன், பொருளாளர் ஜீவானந்தம் உள்ளிட்டோரும், காரியாபட்டியில் ஒன்றிய செயலாளர் முருகன், துணை செயலாளர் ஞானகுமார், மாவட்ட குழு உறுப்பினர் வேல்ச்சாமி உள்ளிட்டோரும், சத்திரப்பட்டியில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன், இளைஞர்மன்ற மோகன் உள்ளிட்டோரும்,

ஆலங்குளத்தில் ஒன்றிய செயலாளர் நடராஜன், துணை செயலாளர் கணேசன், பொருளாளர் ஜெயபிரகாஷ் உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வி.இரவி, நகர செயலாளர் விஜயன், துணை செயலாளர் வேல்ச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி புறநகர் :** திருச்சி புறநகர் மாவட்டத்தில் திருவெறும்பூர், தா.பேட்டை, உப்பிலியபுரம், தொட்டியம், லால்குடி, மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை நகரம், ஒன்றிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவெறும்பூர் கடைவீதியில் சிபிஎம் தாலுகா செயலாளர் மல்லிகா தலைமை வகித்தார். சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.இந்திரஜித், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் நடராஜன், சிபிஐ ஒன்றிய செயலாளர் செல்வராஜ் , வி.சி.க.சந்திரசேகர் ஆகியோர் கண்ட உரையாற்றினர்.

வையம்பட்டி ஒன்றியம் வீ.பெரிய பட்டி ஊராட்சி ந.பூலாம்பட்டியில் சிபிஐ ஒன்றிய துணைச்செயலாளர் ஸ்டீபன் சேகர் தலைமை வகித்தார். வையம்பட்டி பேருந்து நிறுத்தம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஎம் ஒன்றிய செயலாளர் வெள்ளைசாமி தலைமை வகித்தார் சிபிஐ ஸ்டீபன் சேகர், கனகராஜ் முன்னிலை வகித்தனர். சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கணேசன், சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், சிபிஐ ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் விசிக ஒன்றிய செயலாளர் முருகேசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

லால்குடி ரவுண்டானாவில் சிபிஐ ஒன்றிய செயலாளர் பழனிராஜன், சிபிஎம் ஒன்றிய செயலாளர் ஜெகதீசன், விசிக ஒன்றிய பொறுப்பாளர் கமல் தலைமையில் குணா, திவ்யநாதன், மார்ட்டின் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மருங்காபுரி ஒன்றியம் துவரங்குறிச்சி பேருந்து நிலையம் முன்பு சிபிஐ ஒன்றிய செயலாளர்

தொடர்ச்சி 03ம் பக்கம் >>




**அறிவிப்பு**

நியூஸ்பிரிண்ட் பேப்பர் விலைஉயர்வுமற்றும் பல்வேறு கட்டண உயர்வுகளால் தவிர்க்க முடியாத நிலையில் ஜனசக்தியின் விலை கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது. சந்தாதாரர்களும், ஏஜெண்டுகளும் தொடர்ந்து ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம்.

ஆயுள் சந்தா - ரூ.7500.00
ஆண்டு சந்தா - ரூ.750.00
தனிப்பிரதி - ரூ.15.00

பொது மேலாளர்
ஜனசக்தி






# பிரதமர் மோடி பேசுவது உண்மைதானா?

**பேரன்புமிக்க தோழர்களே!**

## திரு நரேந்திர மோடி அவர்கள் ஒரு சாதாரண மனிதர் அல்ல.

பத்தோடு பதினொன்று என்று புறம் தள்ளக் கூடிய மனிதர் அல்ல, உலகில் சீன தேசத்திற்கு அடுத்த இடத்தில் மக்கள் தொகையில் பெரும் எண்ணிக்கை கொண்ட, நூற்று முப்பது கோடிக்கும் மேலான மக்கள் தொகை கொண்ட மாபெரும் நாட்டின் தலைமை அமைச்சராவார்.

உலகில் உள்ள சிறிய நாடாகினும், அல்லது தங்களை ஆகப்பெரிய வல்லரசு என கூறிக்கொள்ளும் நாடான அமெரிக்காவாக இருந்தாலும் அல்லது ஐக்கிய நாட்டு சபையில் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தும் வாய்ப்பை பெற்ற நாடாகினும், நமது இந்திய பெருநாட்டை அவ்வளவு எளிதாக புறந்தள்ளிவிட முடியாது !

உலகில் உள்ள நாடுகளில் எங்கே என்ன நடந்தாலும், எந்த மூலையில் நடந்தாலும் அவை குறித்து இந்தியா என்ன கருத்தைக் கூறுகின்றது என்று உலகம் நம்மை மிக உன்னிப்பாக எதிர்பார்க்கின்றது.

அத்தகைய பெருமைக்குரிய நாட்டின் தலைமை அமைச்சர் என்கிற முறையில், அவர் யாராக, எக்கட்சியை சேர்ந்தவராக இருப்பினும் அவர் மிக முக்கியத்துவம் பெற்றவராவார்.

அத்தகைய அதி முக்கியத்துவம் வாய்ந்த, மிக உயரிய இடத்தை கடந்த எட்டு ஆண்டுகளாக அலங்கரித்துக் கொண்டு இருப்பவர், மதிப்பிற்குரிய நரேந்திர மோடி ஆவார்கள்.

இடைவிடா சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள மோடி அவர்கள் உலகெங்கும் உள்ள நாடுகளுக்கு எல்லாம் சென்று வந்துவிட்டார். புதிதாக அவர் ஒரு நாட்டிற்கு செல்ல வேண்டுமெனில் புதிதாக ஒரு நாட்டை கண்டுபிடித்தாக வேண்டும் அல்லது நித்தியானந்தா சாமியாரைப் போன்று ஒரு நாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உலகில் உள்ள நாடுகளை வலம் வருவது போன்று நம் நாட்டில் உள்ள மாநிலங்களுக்கும் தனி விமானத்தில் பறந்து செல்கின்றார்.

காலையில் ஒரு மாநிலம், மதியம் ஒரு மாநிலம், மாலை ஒரு மாநிலம் என்று பறந்து பறந்து செல்கின்றார்.

மாநிலங்களுக்கு செல்லும் போது அந்தந்த மாநில மக்கள் அணியும் உடையைப் போன்று தானும் உடையணிந்து அம்மாநில மக்கள் மனதில் இடம்பெற முயல்கின்றார்.

நாடகத்தில், திரைப்படத்தில் நடிக்கும் கலைஞர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாத்திரத்திற்கு ஏற்ப உடை அணிவிக்கப்படுவார்கள்.

தொழிலாளியாக, விவசாயியாக, பிச்சை எடுப்பவராக, மன்னராக, இராணுவ வீரராக, காவல்துறையைச் சேர்ந்தவராக, வழக்கறிஞராக, நீதிபதியாக, செவிலியராக, மருத்துவராக பாத்திரம் ஏற்று நடிக்கும் போது அதற்கேற்ற உடை அணிவது போன்று நமது பிரதமரும் உடை அணிந்து நடிகர்களைக் காட்டிலும் மிஞ்சியவராகத் திகழ்கின்றார்.

தமிழ்நாட்டிற்கு வரும்போது வேட்டி, அரைக்கை வைத்த சட்டை, நீண்ட அங்கவஸ்திரம் அணிந்து அனைவரையும் அசத்துகிறார்.

தமிழகம் வருகை தந்து, அரசு பொது நிகழ்ச்சிகளில் அல்லது அவரது கட்சி சார்ந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நமது தாய் மொழியாம், தமிழின் சிறப்பை, அதன் மேன்மையை இயம்புகின்றார்.

நாம் உலக மகாகவி என போற்றும் மகாகவி பாரதியை போற்றி கின்றார். அவரது பாடல்களில் சில வரிகளை மேற்கோள் காட்டி திகைப்படைய செய்கின்றார்.

தமிழனை அறிந்திருக்கிறார், பாரதியை அறிந்திருக்கின்றார். இவை நமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது; நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்கின்றது !

தேசப்பிதா காந்தி குறித்து பேசுகின்றார். அவர் வழியை பின்பற்றி நடப்பதாக கூறுகின்றார்.

இவ்வாறு அவர் பேசுவதும், புகழ்வதும் உண்மைதானா? அவரது மனசாட்சிபடி தான் பேசுகின்றாரா?

ஆக உயர் பொறுப்பில் உள்ள பிரதமர் பேச்சுக்கும், செயலுக்கும் மிகுந்த வேறுபாடுகள் அல்லவா உள்ளது.

குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் (28.05.2022) தனது அரசின் எட்டு ஆண்டு கால சாதனை எனக் குறிப்பிட்டு பட்டியலிட்டு முழங்குகிறார்.

அம்முழக்கத்தில் தனது எட்டாண்டு கால ஆட்சியில், இந்திய மக்கள் எவரும் தலைகுனியும் படியாக தனது ஆட்சி நடைபெற வில்லை என்று அப்பட்டமான முறையில் ஒரு பெரும் பொய்யை நா கூசாமல் கூறுகின்றார் !

மிக உச்சமான பொறுப்பில் உள்ள ஒருவர் பொய் பேசுவதை நாடு தற்போதுதான் காண்கின்றது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே, பாரதியார் பாடலில் சில வரிகளைக் கூறும் பிரதமர் அவர்களே, “பொய் சொல்லக்கூடாது பாப்பா” என பாரதி பாடிய பாடலை உங்களுக்கு யாரும் சொல்ல வில்லையா?

உங்களின் எட்டு ஆண்டு கால ஆட்சியில் இந்த நாடே தலை குனிந்து நிற்கிறது.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம் என்று மதங்கள் பல இருந்த போதும், இம் மதங்களைச் சார்ந்த மக்கள் மதம் என்ற பெயரால் ஒருபோதும் பிளவுபட்டு நிற்கவில்லை.

மதங்களை கடந்து அனைவரும் சகோதரர்களாக, ஒருதாய் வயிற்று பிள்ளைகளாக கரம்பற்றி நின்ற மக்களை, மதச்சார்பின்மை என்ற மகத்தான கொள்கையை உயர்த்திப் பிடித்த மக்களை மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்தி, மதச் சிறுபான்மை மக்களை அச்சத்துடன் வாழ்ந்திட வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை எண்ணி நாடே வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

நாட்டில் வாழும் கோடிக்கணக்கான தலித் மக்கள் கொடிய துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை எண்ணி நாடே வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றது.

பெண்களுக்கு, சிறுமிகளுக்கு பாதுகாப்பற்ற நிலையை எண்ணி நாடு வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றது.

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என்று வாக்குறுதியை நம்பிய இளைஞர்களை ஏமாற்றி அதுமட்டுமல்ல, இருக்கின்ற வேலைகளையும் பறிக்கும் படுபாதக செயலை கண்டு நாடே வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் முழுவதையும் மீட்போம், அவ்வாறு மீட்கப்படும் பல ஆயிரம் கோடி கறுப்புப் பணத்தை இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும், ரூ.15 லட்சம் வங்கிக் கணக்கில் வரவு வைப்போம் என்று கூறியதை நம்பிய மக்கள் இன்று வெட்கி தலைகுனிந்து நிற்கின்றார்கள்.

**பொதுமக்களின் வங்கிகளான அரசு வங்கிகளில் இருந்து ஆயிரம் ஆயிரம் கோடி ரூபாய்களை கடன் பெற்ற பெருமுதலாளிகள் திருப்பிச் செலுத்திடவில்லை – மாறாக அவர்கள் அனைவரும் மிகுந்த வசதியோடும், செல்வாக்கோடும் மோடியின் பரிபூரண ஆசியுடனும் வெளிநாட்டில் வாழ்ந்து வருவதைக் கண்டு நாட்டு மக்கள் வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றார்கள்.**

காலங்காலமாக கட்டிக் காத்து வந்த பொதுத்துறை நிறுவனங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடிமாட்டு விலைக்கு விற்று வருவதைக் கண்டு நாடே வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள நாட்டில், வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாட்டில், இதற்காக பாடுபடும் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வில் மண்ணை வாரி இறைத்த கொடுங்கோல் ஆட்சியைக் கண்டு நாடே வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றது.

தங்களின் நூறாண்டுகால போராட்டத்தால், தியாகத்தால், இரத்தத்தால், உயிர்ப் பலியால், சிறை, சித்திரவதைக் கொடுமையால், தொழிலாளி வர்க்கம் பெற்ற உரிமைகளை பறித்த கொடூர அரசைக் கண்டு நாடு தலைகுனிந்து நிற்கின்றது.

எதிர்கால சந்ததியினரான மாணவச் செல்வங்களின் கனவுகளை தகர்த்து, குலக்கல்வி முறையைத் திணிக்கும், கல்வியை மறுக்கும் உங்கள் தேசிய கல்விக் கொள்கையைக் கண்டு நாடு வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிச குடியரசு என்பதனை மாற்றி மனுதர்மம் கொள்கையைக் கொண்ட ஆட்சியாக மாற்ற முயற்சிப்பதைக் கண்டு நாடு வெட்கி தலைகுனிந்து நிற்கின்றது.

ஜனநாயகம் மெல்ல மெல்ல தழைத்தோங்கி வந்த நாட்டில் சர்வாதி காரம் தலைதூக்குவதைக் கண்டு நாடு வெட்கி தலை குனிந்து நிற்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்ட ஹிட்லரின் பாசிசத்தை தோற்கடித்த உலகில், இந்தியா மூலம் மீண்டும் பாசிசத்தை உயிர் கொடுத்து காக்க முற்படும் செயலைக் கண்டு நாடு வெட்கித் தலை குனிந்து நிற்கின்றது.

திருவாளர் மோடிஜி அவர்களே, உங்களின் எட்டு ஆண்டுகால ஆட்சியில் நாடு எந்தெந்த வகையில் வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றது என்பதற்கு இவைகள் போதுமா? இன்னும் பல பட்டியல் வேண்டுமா?

மோடி ஜி அவர்களே, உங்களின் ஆட்சி காலம் முடிவுக்கு வர பல ஆண்டுகள் காத்திருக்க போவதில்லை.

2024 ஆம் ஆண்டு உங்களின் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவதற்கான பணிகள் தொடங்கிவிட்டன.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள் நடைபெற்று நிறைவு பெற்றுள்ளன.

இடைநிலை அமைப்புகளின் மாநாடுகள் பெரும்பாலும் நடந்து முடிந்துள்ளது மட்டுமல்ல, முழுமை பெற்று மாவட்ட மாநாட்டை நடத்திட தொடங்கிவிட்டோம்.

ஜூலை முதல் வாரத்திற்குள்ளாக, மாவட்ட மாநாடுகள் நிறைவு பெற உள்ளன.

ஆகஸ்டு 6ஆம் நாள் தொடங்கி ஒன்பதாம் நாள் வரை மாநில மாநாடு, தொழிலாளி வர்க்கம் நிறைந்துவிட்ட திருப்பூர் மாநகரத்தில் சீரும் சிறப்புமாக நடந்தேற உள்ளது.

மாநாட்டு நிறைவு நாளான ஆகஸ்டு 9 ஆம் நாள் ‘வெள்ளையனே வெளியேறு’, என்று முழக்கமிட்ட நாளில், வரலாற்றுச் சிறப்புமிக்க செம்படையின் மகத்தான பேரணி, மாபெரும் பேரணி, வரலாறு படைக்க உள்ள பேரணி, எழுச்சிமிக்க பேரணியாக நடைபெற உள்ளது. சீருடை அணிந்திட்ட பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் தொண்டரணியின் மகத்தான அணிவகுப்பை, இராணுவ வீரர்களின் மிடுக்கான அணிவகுப்பு மிஞ்சும், மிடுக்கான அணிவகுப்பு நடைபெற உள்ளது.

ஆயிரக்கணக்கான சீருடை அணிந்த இளம் பெண்களின் அணிவகுப்பும் நடைபெறவிருக்கின்றது.

இவர்கள் மட்டுமல்ல, சீருடையணிந்த பல்லாயிரக்கணக்கான தாய்மார்களும், சகோதரிகளும் அணிவகுப்பை நடத்திக் காட்ட உள்ளனர். இவர்களைத் தொடர்ந்து தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் சிவப்பாடை அணிந்து அணிவகுக்க உள்ளனர்.

ஆகஸ்டு 9ஆம் நாள் திருப்பூர் நகரம் மாபெரும் செங்கடலாய் காட்சியளிக்க உள்ளது.

மகத்தான செம்படையின் அணிவகுப்பு என்பது நாட்டிற்கான, நாட்டின் விடியலுக்கான மகத்தான அரசியல் முழக்கத்தை முன்வைக்க உள்ளது.

நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தை, துயரத்தை துடைத்தெறியும் முழக்கமாக முன்வைக்க உள்ளது.

நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் துன்பத்திற்கும், துயரத்திற்கும் காரணமான சர்வாதிகார மோடி அரசே, மக்கள் விரோத மோடி அரசே, பாசிச மோடி அரசே வெளியேறு ! என்ற முழக்கத்தை விண்ணதிர முழங்க உள்ளது.

திருப்பூர் மாநகரில் முழங்கும் முழக்கம் தமிழகத்துடன் முடங்கி விடுகின்ற முழக்கமல்ல, குமரிமுனையில் எழும்பும் ஓசை இமயம் வரை எதிரொலிக்கும்.

பொய் பேசும் பிரதமர் மோடியின் முகத்திரையைக் கிழிக்கும் முழக்கமாக எங்கெங்கும் ஓங்கி ஒலித்திடும்.

தோழர்களே ! செயல் வீரர்களே ஆயத்தமாவீர், அணிவகுக்க தயாராவீர்.

வகுப்புவாத சக்திகளை வேரறுக்க, புதிய விடியலைக் காண, பொய் முகங்களை அகற்ற ஆயத்தமாவீர் !

**மீண்டும் சந்திப்போம் – வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளகண்ணு, சிபிஎம் ஒன்றிய செயலாளர் தியாகராஜன் தலைமையில் கோவிந்தராஜூ, பாலசுப்பிரமணியன் முத்துராமன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தாப்பேட்டை கடைவீதியில் சிபிஐ ஒன்றிய செயலாளர் கந்தசாமி, சிபிஎம் ஒன்றிய செயலாளர் பாண்டியன் தலைமையில் சிபிஐ மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி கண்டன உரை நிகழ்த்தினார்.

உப்பிலியபுரம் ஒன்றியம் உப்பிலியபுரம் கடைவீதியில் அண்ணாசிலை அருகில் சிபிஐ ஒன்றிய செயலாளர் மருது சிபிஎம் ஒன்றிய செயலாளர் முத்துக்குமார், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒன்றிய செயலாளர் துரை சங்கர் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொட்டியும் ஒன்றியத்தில் வண்ணாரப் பட்டறை சிபிஐ ஒன்றிய செயலாளர் சதீஷ், சிபிஎம் ஒன்றிய செயலாளர் ராமநாதன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மணப்பாறை பேருந்து நிலையம் அருகில் சிபிஐ நகர செயலாளர் ஜனசக்தி உசேன், சிபிஎம் வட்ட குழு செயலாளர் கோபாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் நகர செயலாளர் ஆனந்தன் ஆகியோர் தலைமை வகித்தனர். சிபிஐ மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிதம்பரம் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

**பல்லாவரம்:** பல்லாவரம், அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ ஆலந்தூர் தொகுதிக்குழு செயலாளர் கே.முனுசாமி தலைமை தாங்கினார். சிபிஐ காஞ்சிபுரம் மாவட்ட துணை செயலாளர் ஜி.ஜெகதீசன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் ஜா.பூபாலன், அ.ஆபிரகாம், சிபிஐ(எம்.எல்.)விடுதலை கிருஷ்ணவேணி, அ.இ.பெ.மு.க, அன்சர் மற்றும் ரமேஷ் பாபு(எ), வி.சி.க., கன்டோன்மென்ட் நகர துணை செயலாளர் ஆதவன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்.

**பரமக்குடி:** பரமக்குடியில் சிபிஐ நகர செயலாளர் கே.ஆர். சுப்பிரமணியன், சிபிஎம் தாலுகா செயலாளர் தி ராஜா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விசிக செயலாளர் பாயும் புலி சரவணன் முன்னிலை வகித்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ். முருகபூபதி, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் என்.கே.ராஜன், பெருமாள், எஸ்.பி.ராதா, கே.ஜீவா, சி.செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சிபிஎம் சார்பில் தாலுகா செயலாளர் ராஜா, தட்சிணாமூர்த்தி, மயில்வாகனன் ஆகியோர் கலந்துகொண்டனர். விசிக சார்பில் மீரான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மதுரை :** மதுரை, யா.ஒத்தக்கடை கோதண்டராமர் கோயில் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சிபிஐ மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ், சிபிஎம் மாநிலக்குழு பொன் னுத்தாய், விசிக வடக்கு மாவட்ட செயலாளர் செல்வ அரசு, கம்யூனிஸ்ட் (எம்எல்) லிபரேசன் மல்லிகாராணி ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் சிபிஐ கிழக்கு தாலுகா செயலாளர் பூமிநாதன், மேலூர் தாலுகா துணைச் செயலாளர் க.மெய்யர் முன்னிலை வகித்தனர், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மூக்கம்மாள், சிபிஐ ஆ.மூர்த்தி, எம்.இராஜேந்திரன், அலங்கை ஒன்றிய செயலாளர் குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை, திருமங்கலம் வி.எஸ்.ஆர் மஹால் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு சிபிஐ மதுரை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.முத்துவேல், ஜி.சந்தானம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மேலும் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் சுப்புக்காளை முன்னிலை வகித்தார். சிபிஎம் மாவட்ட செயலாளர் இராஜேந்திரன், விசிக மாவட்ட செயலாளர் இன்குலாப், சிபிஐ (எம்எல்) லிபரேசன் மாவட்ட செயலாளர் மதிவாணன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மதுராந்தகம் :** மதுராந்தகம் ஒன்றியத்தில் படாளம் கூட்ரோட் டில் கேவி.சேகுவேராதாஸ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. சிபிஎம் வட்டகுழு செயலாளர் ராஜா, விசிக தெற்கு ஒன்றிய செயலாளர் முகிலன், சிபிஐ செ.இன்பராஜ், குன்னலூர் தியாகு, கொளம்பாக்கம் ஏழுமலை மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர். மதுராந்தகம் நகரம், கருங்குழி பேரூராட்சி, அச்சரபாக்கம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.மாதையன் தலைமை வகித்து பேசினார். விசிக நிர்வாகி ராஜா முன்னிலை வகித்தார். சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் எஸ். கலைச்செல்வன், விசிக தொகுதி பொறுப்பாளர் பொறியாளர் கருப்பண்ணன் ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக சிபிஐ மாவட்ட செயலாளர் தேவராஜன் கண்டன உரை ஆற்றினார். சிபிஐ வட்ட செயலாளர் முனியப்பன், துணை செயலாளர் சம்பத், நகர செயலாளர் விஜயபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.மாரிமுத்து தலைமை வகித்தார். சிபிஎம் மாவட்ட செய லாளர் ஏ.குமார், சிபிஐ மாவட்ட துணை செயலாளர் க.சி.தமிழ் குமரன், நிர்வாகி ஆர்.சுதர்சனம், விசிக மண்டல செயலாளர் பொ.மு.நந்தன் ஆகியோர் பேசினர். நல்லம்பள்ளி இந்தியன் வங்கி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஎம் ஒன்றிய செயலாளர் எஸ்.எஸ்.சின்னராஜ் தலைமை வகித்தார். சிபிஐ வட்டார





செயலாளர் கிருஷ்ணராஜ், துணை செயலாளர் பாரதி, விசிக நிர்வாகிகள் பேசினர். அரூர் ரவுண்டானா அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விசிக மாவட்ட செயலாளர் ஏ.ஜானகிராமன் தலைமை வகித்தார் சிபிஎம் மாவட்ட செயலாளர் ஏ.குமார், சிபிஐ மாவட்ட துணை செயலாளர் காசி.தமிழ்குமரன்,வட்டார செயலாளர் அல்லிமுத்து, நகர செயலாளர் ப.முருகன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி.விஸ்வநாதன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கமலாமூர்த்தி, நடராஜன், செங்கொடி ஆகியோர் பேசினர்.



**அரியலூர்:** அரியலூர் அண்ணாசிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ மாவட்ட செயலாளர் இரா.உலகநாதன், சிபிஎம் மாவட்ட செயலாளர் எம்.இளங்கோவன், வி.சி.க. மாவட்ட செயலாளர் பெ.மு.செல்வநம்பி ஆகியோர் தலைமையேற்று சிறப்புரையாற்றினர். சிபிஐ மாவட்டத் துணைச் செயலாளர் த.தண்டபாணி, திருமானூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் ஜி.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர் மு. கனகராஜ் உட்பட தோழமை கட்சியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**அம்மாபேட்டை:** அம்மாபேட்டை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார் தலைமை வகித்தார். இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பாலு, விசிக ஒன்றிய நிர்வாகி இனியவன், சிபிஐ ஒன்றிய நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தாளவாடி:** தாளவாடி பேருந்து நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.மோகன், நாகை முத்துராமலிங்கம், தாளவாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் சி.நாராயணன், தாளவாடி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.அருள்சாமி, விசிக ஒன்றியச் செயலாளர் பசவண்ணா ஆகியோர் பங்கேற்றனர்.

**ஒரத்தநாடு :** ஒரத்தநாடு பேருந்து நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ ஒன்றிய செயலாளர் வாசு இளையராஜா, சிபிஎம் ஒன்றிய செயலாளர் கோவிந்தராஜ், விசிக ஒன்றிய செயலாளர் சிவாஜி காந்தி ஆகியோர் தலைமை வகிக்க, சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சீனி.முருகையன் கண்டன உரையாற்றினார். கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் சி.ராமலிங்கம், வி.ச. ஒன்றிய செயலாளர் அ.அய்யாக்கண்ணு, ஏஐயுடிசி மாநிலத் துணைத் தலைவர் திருநாவுக்கரசு, ஒன்றிய பொருளாளர் த.கிருஷ்ணன், வி.ச. மாநிலக்குழு உறுப்பினர் சோ.பாஸ்கர், சிபிஎம் சுரேஷ் ஆகியோர் உரையாற்றினர்.



**திருவள்ளூர் :** திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியத்தில் வெள்ளானூர் வேல் டெக் ஜங்சன் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ திருவள்ளூர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ். மயில்வாகனன், வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் வெ.ஏ.ராஜீவ்காந்தி, வி.வெங்கடேஷ், பெருமாள், ஏ.சுரேஷ் சுப்பையா, சரத்ராஜ், ஜே.மணிராஜ், அன்பு மற்றும் ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**ஒசூர்:** கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அண்ணா சிலை அருகில் சிபிஐ, சிபிஎம் மற்றும் விசிக இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஆவடி:** ஆவடி மாநகராட்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு விசிக மாவட்டச் செயலாளர் எஸ்.குமணன் தலைமை தாங்கினார். ஆவடி நகர விசிக செயலாளர் நேதாஜி வரவேற்புரையாற்றினார். சிபிஎம் மாவட்ட குழு உறுப்பினர் பூபாலன், ஆவடி தொகுதி சிபிஐ செயலாளர் எஸ். மயில்வாகனன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். சிபிஐ நிர்வாகிகள் கபாலி, என்.ஜெயராமன், தஞ்சை புருஷோத்தமன், ராஜீவ் காந்தி, சுரேஷ், சுப்பையா, தேவேந்திரன், ஆறுமுகம், சிவபெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ ஜே.கமலநாதன், ஏ.மூர்த்தி, சிபிஎம் டி.ஸ்ரீதர், கே.நேரு, வி.சி.க. பாசறை செல்வராஜ், கோ. திருமாதாசன் மற்றும் கே.கிருஷ்ணமூர்த்தி பி.வி. சீனிவாசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

**ராயகிரி :** ராயகிரி பெரியார் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**குடியாத்தம்:** குடியாத்தம் பழைய பஸ்நிலையத்தில் சி.பி.ஐ. சார்பில் ஜி.தங்கவேலு, சி.பி.எம். சார்பில் பி.காத்தவராயன், வி.சி.க. சார்பில் குமரேசன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (சி பி எம்) எஸ்.டி.சங்கரி, வழக்கறிஞர் சு.சம்பத்குமார், (சி.பி.ஐ) துரைசெல்வம் டி. .ஆனந்தன், (வி.சி.க.) சிவ.செல்லபாண்டியன், கு. விவேக் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.



**தென்காசி:** தென்காசியில் சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, சிபிஐ (எம்) மாவட்ட செயலாளர் யூ.முத்துப்பாண்டியன், விசிக மாவட்ட செயலாளர், டேனியல் அருள்சிங், பார்வட் பிளாக் மாவட்ட செயலாளர், தங்கப் பாண்டியன், நகர செயலாளர் கணேசன், தாலுகா செயலாளர், எம்.எஸ்.கிட்டப்பா ஆகியோர் பங்கேற்றனர். சங்கரன்கோவிலில் சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, சிபிஐ(எம்) மாவட்டச் செயலாளர் முத்துப்பாண்டியன், பார்வர்டு பிளாக் மாவட்ட செயலாளர் தங்கபாண்டியன், ஒன்றிய செயலாளர் ஏ.கனகராஜ், மாவட்டக்குழு உறுப்பினர்கள் முருகன், மனுவேல்ராஜன், ஆகியோர் பங்கேற்றனர். வாசுதேவநல்லூரில் சிபிஐ மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, பார்வர்ட் பிளாக் மாவட்ட செயலாளர் தங்கபாண்டியன், சிபிஐ(எம்) அசோக் ராஜ், வாசு ஒன்றிய செயலாளர் ப.வேலு, பி.முருகன், நடராஜன் சிபிஐ(எம்) ஆகியோர் பங்கேற்றனர். ஆலங்குளத்தில் என்.ஐயப்பன், தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.பரமசிவம், ஆகியோர் பங்கேற்றனர்.

ஆழ்வார்குறிச்சியில் கடையம் ஒன்றிய செயலாளர் ஜீவா, ராமகிருஷ்ணன் சிபிஐ(எம்), ஹரிஹரன், சிவசுப்பிரமணியன், ஆர்.ஈஸ்வரன், கே.சட்டநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

சிவகிரியில் நகர செயலாளர் பி.பாலசுப்பிரமணியன், குருவு, ராஜேந்திரன், கருப்பையா, வேல்சாமி, கண்ணன், சிபிஐ(எம்) சக்திவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

புளியங்குடியில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, ஒன்றிய செயலாளர் ப.வேலு, சிபிஐ(எம்) மணிகண்டன், எஸ்.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செங்கோட்டையில் தாலுகா செயலாளர் எஸ்.ஆழ்வார், ஏ.சாமி, எஸ்.மாரியப்பன், சி.சிவசுப்பிரமணியன், கே.பழனிச்சாமி, உட்பட 60 தோழர்கள் கலந்து கொண்டனர்.

பாவூர்சத்திரத்தில் தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, சிபிஐ(எம்) தங்கம், என்.ஐயப்பன், மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட பொருளாளர் தி.சுப்பையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கி.பரமசிவம் ஆகியோர் பங்கேற்றனர்.

இராயகிரியில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, நகர செயலாளர் எஸ்.சமுத்திரம், கோவிந்தன் சிபிஐ(எம்), ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் சமுத்திரக்கனி, மாதர் சங்கம் கந்தம்மாள், துணைச்செயலாளர் சொரிமுத்து ஆகியோர் பங்கேற்றனர்.

திருவேங்கடத்தில் தாலுகா செயலாளர் அந்தோணிராஜ், கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டு ஒன்றிய மோடி அரசை கண்டித்து முழக்கமிட்டனர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 09

# எட்டாண்டுப் பெருமை இதுதானா?

மோடி அரசு எட்டு ஆண்டுகளை நிறைவு செய்து விட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவை நீக்கிவிட்டோம், காஷ்மீரை இரண்டு துண்டுகளாகப் பிரித்து விட்டோம், பாபர் மசூதியை இடித்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டி விட்டோம் எனத் தமது சாதனைகளை அக்கட்சி கொண்டாடி வருகிறது.

பிரதமர் மோடி, ''கடந்த 8 ஆண்டுகளில் இதற்கு முன் கற்பனை செய்து பார்க்க முடியாத உயரங்களை இந்தியா எட்டியுள்ளது. தற்போது இந்தியாவின் பெருமை உலகம் முழுவதும் அதிகரித்துள்ளது. இந்தியாவின் இந்தப் பயணத்தை இளைஞர் சக்தி முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சி அளிக்கிறது'' என்று கூறியிருக்கிறார்.

இது உண்மைதானா?

''நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி குறியீடு (ஜிடிபி) வளர்கிறது. இதுவரை இல்லாத அளவு ஜிஎஸ்டி வரி, உச்ச அளவாக மார்ச் 2022ல் ரூ.1,33,026 கோடி வசூலிக்கப்பட்டு இருக்கிறது. இது 2020ல் வசூலிக்கப்பட்டதைவிட 26% அதிகம்! மிக அதிகமாக 670 பில்லியன் டாலர் அளவுக்கு 2021–22ல் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. தொழில் தொடங்கும் ஆற்றல் இந்தியா முழுவதும் நிரம்பி வழிகிறது. 320 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள 94 நிறுவனங்கள் தொடங்கப்பட்டு இருக்கின்றன' என்று புள்ளிவிவரங்களை அரசு அடுக்குகிறது.

ஆனால் அரசு சொல்லும் வளர்ச்சி எல்லாம் இந்திய சமூகத்தின் வளர்ச்சியாக மாறியிருக்கிறதா? எனில் பரிதாபகரமாகத் தோற்றிருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு 7.83 சதவீதம் வேலையின்மை அதிகரித்து விட்டதற்காக இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் (சிஎம்ஐஇ) ஆய்வறிக்கை கூறுகிறது.

கொரோனாவுக்கு பிறகு அமைப்பு சார்ந்த பணிகளில் 60.7 லட்சம் பேரும், அமைப்புசாரா துறைகளில் ஏறக்குறைய 5 கோடி பேருக்கும் வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

உற்பத்தி கூடுகிறது, ஏற்றுமதி கூடுகிறது என்றால் வேலைவாய்ப்பும் கூடுதலாக வேண்டும்தானே! ஆனால் வேலைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. 2019–20ல் 44.18 கோடியாக இருந்த வேலைகளின் எண்ணிக்கை இரண்டு ஆண்டுகளுக்குள் 43.52 கோடியாகக் குறைந்திருக்கிறது. அதாவது 66 லட்சம் வேலை போயே போச்சு.

வேலையை தேடுவதிலேயே இளமைப் பருவத்தை தொலைத்து விடும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

வேலை வாய்ப்புகள் குறைய குறைய வேலை தேடிப் பயனில்லை என்ற விரக்தி உணர்வு வளர்ந்திருக்கிறது.

தொழில் வளர்ச்சி மற்றும் உற்பத்தி, சேவையில் உழைப்பைச் செலுத்தும் தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவற்றின் விகிதம் சிறிது ஏற்றத்தாழ்வாக இருக்கலாம். ஆனால் எதிரெதிர் திசையில் விரிந்து செல்வது அதிர்ச்சியளிக்கிறது. தொழில் வளர்ச்சி 22ம் நூற்றாண்டுக்கு விரையும் போது, தொழிலாளரின் வேலைச்சூழலும், வாழ்வாதாரமும் 19ம் நூற்றாண்டின் அடிமை முறைக்குத் துரத்தப்படுகிறது.

இது இன்றைய எரியும் பிரச்சினை. இளைஞர்களின் பிரச்சனை. ஒரு நாடு வளர்கிறது எனில் அந்த நாட்டின் மக்கள் வாழ்வாதாரமும், வளமையும் சமமாக வளர வேண்டும் எல்லோரையும் ஒருங்கிணைத்து வளர்ச்சி இருக்க வேண்டும்.

இன்று வேலையின்மை என்பது வெடிக்கத் தயாராக இருக்கும் டைம் பாம் போல ஓடிக்கொண்டே இருக்கிறது. எப்போதும் வெடிக்கலாம். இதனை இந்திய அரசால் செயலிழக்கச் செய்ய முடியவில்லை.

வேலை இல்லை என்ற நிலையை மடைமாற்ற, ஒன்றிய அரசு நூதன வழியைக் கையாள்கிறது. ஒருவர் 20 வயதில் வேலைக்குச் சேர்ந்து 60 வயது வரை வேலை செய்தால் 40 ஆண்டுகளுக்கு ஒரே ஒருவருக்குத் தான் வேலைவாய்ப்பு. ஓராண்டுக்கு மட்டுமே வேலை என்று சுருக்கி விட்டால், 40 ஆண்டில் 40 பேருக்கு வேலை கொடுத்துவிடலாம். இதற்காகத்தான், வேலைப் பாதுகாப்பைப் பறித்து, தொழிலாளரை எப்போது வேண்டுமானாலும் வேலையை விட்டு விரட்டி விட முதலாளிகளுக்கு அதிகாரம் அளித்து தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டு உள்ளன.


ஆனால் ஒரு ஆண்டு மட்டுமே வேலை செய்த ஒருவர் தனது குடும்பத்தை எவ்வாறு நடத்திச் செல்வார்?

சந்தையில் குவிந்துள்ள பொருட்களை வாங்குவதற்கு ஆள் இருந்தால்தான் உற்பத்தி அதிகரிக்கும்; பொருளாதாரம் மேம்படும். அனைவருக்கும் வேலையும், வருமானமும் இருந்தால், பொருட்களை வாங்குவர்.

வாங்குவதற்கான சக்தியை இந்திய மக்களிடம் இருந்து பறித்துவிட்டு உற்பத்தி செய்த பொருளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது என்றால், சிலர் உலகக் கோடீஸ்வரர்களில் இடம் பெறுகிறார்கள்.

அதே நேரத்தில், கடந்த ஆண்டு வெளியான உலகப் பட்டினிக் குறியீட்டில், கடும் பட்டினியில் இருக்கும் 15 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

மோடியின் 8 ஆண்டு ஆட்சி உருவாக்கியிருப்பது இதைத்தான். பெருமை கொள்ள முடியுமா?



சி.பாஸ்கரன்

நெருங்கிவரும் பூகம்பம்;

# நொறுங்கி விழும் முதலாளித்துவம்



**ஒரு மனிதனின் முதுமை உச்சத்தைத் தொட்டதும், அவன் முக்கிய அவயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக செயலிழக்கும். ஒன்றிணைந்த இயக்கம் முடிவுக்கு வரும். இது அவன் அந்திம காலத்தை அடைந்து விட்டான் என்பதன் அறிகுறி. இது போல் முதலாளித்துவ கட்டமைப்பும், அதன் முக்கிய நிறுவனங்களும் செயலிழந்து வருகின்றன.**

முதலாளித்துவத்தின் நீதித்துறை, நிர்வாகத்துறை, நிதித்துறை, சேவைத் துறை, அரசியல் துறை அனைத்தும் சீர்படுத்த முடியாத படி கெட்டு சீரழிந்து விட்டது. இதனை ஒரு சோசலிச மாற்றுக் கட்டமைப்பால்தான் தூக்கி நிறுத்த முடியும். முதலாளித்துவ முறையை நொறுக்கி அப்புறப்படுத்தி அந்த இடத்தில் சோசலிசத்தை கட்டி எழுப்பாமல் மக்கள் நிம்மதியாக வாழவே முடியாது.

முதலாளித்துவ முறையை அவ்வப்பொழுது சீர்செய்து காப்பாற்ற முடியும் என்பது ஜான் மேனார்ட் கீன்ஸ் என்ற பூர்ஷ்வா பொருளியல் மேதையின் கருத்து. இது கீன்ஸ் கோட்பாடு என்று வானளாவ புகழ்ந்து பேசப்பட்டது. முதல் உலகப்போர் முடிந்தவுடன், பெரிய பொருளாதார தேக்கமும், நெருக்கடியும் நிகழ்ந்தது. அது கீன்ஸ் கோட்பாடு முதலாளித்துவத்தை காப்பாற்றாது என்று அம்பலப்படுத்தியது.

அந்த சூழலில் அரசு முதலாளித்துவத்தை முட்டுக் கொடுத்து காப்பாற்றும். அதை ஏகபோக முதலாளித்துவம் என்ற கோட்பாடு முன்வைக்கப்பட்டு அதுவும் மண்ணைக் கவ்வியது.

உலக வங்கி, சர்வதேச நிதிய அமைப்பு, பங்குச் சந்தை என எதுவுமே வேலைக்கு ஆகவில்லை. ஐரோப்பிய பொது சந்தை – எத்தனையோ வங்கி அமைப்பு முறைகள் என அனைத்தும் சரிவையே சந்திக்கின்றன. முதலாளித்துவம் தனது சவக்குழியை நோக்கி பயணிப்பதை எதனாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

சுரண்டும் அமைப்பு சின்னாபின்னமாகத் தகரும் காலத்தை தவிர்க்க முயல்வதுதான் கார்ப்பரேட் முதலாளித்துவம். அதன் உத்தி தான் நாம் பார்த்து வரும் உலகமயம், தனியார் மயம், தாராளமயம். ஒவ்வொரு நாட்டு தேசிய முதலாளியையும் சேர்த்துக் கொண்டு தனது வீழ்ச்சியைத் தள்ளிப்போடும் முயற்சிதான் இது. இது அழிவின் விளிம்பை நெருங்குகிறது என்பதற்கு இலங்கையின் திவால் நிலையே சான்று.

மக்களின் உயிர் வாழும் தேவையின் மீதும், உரிமை மீதும் கை வைக்கும் எந்த ஆட்சியும் அடித்து நொறுக்கப்படும் என்பதே உலக வரலாறு. பௌத்தமத பெருமை, சிங்கள பேரினவாத பெருமை, தமிழர் விரோதம் எதுவும் இலங்கையில் மூண்டுள்ள பெருந் தீயின் முன்னே செல்ல முடியவில்லை. புத்த சாமியார்கள் கடந்தகாலத்தைப் போல ஆட்டம் போட முடியாமல், உயிருக்கு பயந்து பதுங்கி கிடக்கிறார்கள். மண்ணைத் தொட்டு கும்பிட்டு விட்டு தமிழனை அழித்ததை கொண்டாடிய ராஜபக்சே மானங் கெட்டு ஒளிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

மக்களின் துயரம் எல்லை மீறும் போது எந்த முதலாளித்துவ நிர்வாக முறையாலும் அதை கட்டுபடுத்த முடியாது. அடக்குமுறைகள் இன்னும் வேகத்தைத்தான் ஏற்படுத்தும். ராணுவமும், போலீஸும் மக்களின் பேரழுச்சியை கண்டு திகைத்து அதன் முன் மண்டியிடும். மக்கள் இனியும் இந்த அமைப்பை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்ற அவர்களின் கோபக்கனல் பண்பு நிலை மாற்றம் அடைவதே புரட்சியின் இயக்கவியல் இலக்கணம்.

சமூக செல்வத்தை ஒரு பக்கமாக குவிப்பது, வேலையின்மையை கட்டற்று அதிகரிப்பது, முடிவில்லா விலைவாசி உயர்வு, சமூகத்தின் தேவைக்கேற்ப ஒத்திசைவு இல்லாத உற்பத்தியின் அராஜகமுறை. இதனை கழுத்தறுக்கும் அராஜக உற்பத்தி முறை மற்றும் போட்டி முறை என்று மார்க்ஸ் வர்ணிக்கிறார். அனைத்தும் வணிக நோக்கோடும், இலாப நோக்கோடும் இயங்கும் சமூகத்தில் தனி மனித உறவு, குடும்ப உறவு, சமூக உறவு அனைத்துமே மனிதநேயமற்றே திகழும்.

சேவைத்துறை முழுவதும் தனியாரிடம் போகும்போது அந்த மக்கள் அமைதி இழந்து எப்போதும் பதட்டமாகவும், நிச்சயமற்ற தன்மையிலும் முடங்கியிருப்பார்கள். பாதுகாப்பற்ற மனநிலையில் எவரும் ஆக்கபூர்வமாகவோ, சிந்தனைத் திறனோடு செயல்பட முடியாது. பார் முழுவதும் பஞ்சமா பாதகங்கள் செழித்து வளருகிறது. கொலை, களவு, பொய், சூது, காமம் என அனைத்தும் இறக்கை கட்டி பறக்கிறது.

''வேலையற்றவன் மனம் சாத்தானின் பட்டறை'' என்பது பழமொழி. இவர்களில் கணிசமான பகுதி சமூக விரோதிகளாக மாறி விடுகிறார்கள். கூலிப்படை, செயின் பறிப்பு, இளம்பெண்களை கடத்தி சென்று பாலியல் பலாத்காரம் செய்வது, குடிபோதை ஆகியவை இவர்களின் மத்தியில் நின்று நிலைத்து வருகிறது.

உடலுக்கு அவசியமான போட்டித் திறனை வளர்த்த விளையாட்டுத்துறை, கள்ளப் பணம் புழங்கும் சூதாட்ட சந்தையாக மாறிவிட்டது.

நிர்வாகத் துறையில் இலஞ்சம் – ஊழலும் தீர்க்க முடியாத தீமையாக வளர்ந்துவிட்டது. மக்கள் இந்த நிர்வாக முறையில் வேகமாக நம்பிக்கை இழந்து வருகிறார்கள். இது மக்கள் எழுச்சியால் அனைத்தையும் வீதியில் தீர்மானிக்கும் அபாய நிலைக்கு இட்டுச் செல்லும். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து எங்கும் அமைதியற்ற சூழல் நிலவுகிறது. சட்டம் தன் மீது பாயும் என்ற பயம் சமூக விரோதிகளுக்கு கொஞ்சம் கூட இல்லை. இந்த சட்ட அமைப்பினால் தம்மை ஒன்றும் செய்ய முடியாது என்று துணிந்து அராஜகத்தில் ஈடுபடுகிறார்கள்.

நீதித்துறையில் எந்த நியாயமான தீர்ப்பும் மக்களுக்கு உடன் கிடைப்பதில்லை. சுதந்திரத்திற்குப் பின்னர் முன்னேறி வந்த மத்திய தர வர்க்கம் இன்று சூறையாடப்பட்டு வருகின்றது. முந்தியும் செல்ல முடிய வில்லை பின்னோக்கியும் செல்ல முடியாத தவிப்பு. இத்தனை சர்வாம்ச நெருக்கடிகளை மக்கள் மீது திணித்து முதலாளித்துவம் நிலைத்து நிற்க முடியாது.

**மக்கள் கவனம் ஒருமுகப்பட்டு தங்கள் பக்கம் அது கோபமாக மாறி விடாமல் கவனமாக ஆளும் வர்க்கம் பார்த்துக் கொள்கிறது. மனித சிந்தனையை உருவாக்கி அதற்கு உரமூட்டி முன்னோக்கி வழி நடத்துவது வாழ்நிலை என்பது மார்க்சிய அறிவியல் சொல்லும். எக்காலத்திற்கும், எந்த நாட்டிற்கும் பொருந்தும் தீர்க்கதரிசனம்.**

கார்ப்பரேட் உலகத்தில் மக்கள் நேரடியாகச் சுரண்டப்படுவதை அந்த அமைப்பே வெளிச்சம் போட்டு காட்டுகிறது. வேகமாக வளர்ந்து வரும் அதி தொழில் நுட்பம் மற்றும் சமூக ஊடகங்கள் மக்களுக்கு சிக்கலான விஷயத்தையும் எளிதில் புரிய வைக்கிறது. மக்களின் கோபம் திரண்டு பெரும் தீயாக மாற முடியாமல் கால தாமதமாகி வருகிறது. சமூகத்தின் அடித்தளம் ஆட்டம் காணும் போது, யாரால் என்ன செய்ய முடியும்? புவியியல் நிபுணர்கள் பூகம்பம் எப்போது வரும்? சுனாமி எப்போது வரும்? எரிமலை எப்போது அக்கினியை கக்கும்? என்று கணித்து சொல்ல முடியும்.

சமூக விஞ்ஞானிகளான மார்க்சியவாதிகளுக்கு சமூக பூகம்பம் நெருங்கி வருவது தீர்க்கமாக தெரிகிறது. மற்றவர்கள் மாயையில் கப்பலை செலுத்துகிறார்கள்.

மேல்முறையீடோ, காலதாமதமோ இனியும் செய்ய முடியாதவாறு வரலாற்றின் புதிய வளர்ச்சி கட்டம், அதாவது, சோசலிசத்திற்கு மாறும் கட்டம் முதலாளித்துவத்திற்கு மரண தண்டனை விதித்து விட்டது. எனவே, எந்த கார்ப்பரேட் தந்திரகாரர்களோ, மோடி மஸ்தான்களோ திசைதிருப்பல்களாலும் முதலாளித்துவத்தை காப்பாற்ற முடியாது. அது அபாயகரமாக சரிந்து விழும். இடிபாடுகளுக்குள் சிக்கி அவை சிதைந்து போகும்.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்ற வள்ளுவர் பசிக் கொடுமையும் வறுமையும் இருக்கக்கூடாது – ஓயாத வியாதி பீடித்திருக்கக் கூடாது – பகைமை சூழ்ந்திருக்கக் கூடாது என இலக்கணம் வகுத்தார். ஆனால் இருநூறு நூற்றாண்டுகளைக் கடந்து வந்த முதலாளித்துவம் இதில் படுதோல்வி அடைந்து நொறுங்கும் விளிம்பில் நிற்கிறது.

தொடர்புக்கு: **96007 23726**

தத்துவார்த்தம் 31



எஸ். தோதாத்ரி



# சங்கரர்

**இந்திய கருத்து முதல்வாதத்தின் சிகரத்தை சங்கரர், ராமானுஜர், மத்துவர், சைவ சித்தாந்திகள் ஆகியோரிடம் காணலாம். இவர்கள் பொருளை மறுத்தவர்கள். பிரும்மம் என்பதற்கு முதலிடம் கொடுத்தவர்கள். இந்தியத் தத்துவத்தின் பெரும்பகுதியான சிந்தனையோட்டம் தென்னாட்டில் உள்ள இவர்களாலேயே உருவாக்கப்பட்டதாகும். இவர்களில் சங்கரர் முழுமையான கருத்து முதல்வாதி. 32 ஆண்டுகள் வாழ்ந்த இவர் தத்துவத்தில் அறிய சாதனை புரிந்தவர்.**

வேதங்கள் மிகவும் விரிவானது. பிற்காலத்தில் அவற்றில் உள்ள பல கருத்துக்களை உள்ளடக்கி உபநிடதங்கள் தோன்றின. இவையும் விரிவானவை எனக்கருதி பிரும்ம சூத்திரங்கள் தோன்றின. மேலே கூறிய மூவரும் உபநிடதங்களுக்கும், பிரும்ம சூத்திரங்களுக்கும் விளக்கம் கொடுக்கும் முறையில் தங்களது தத்துவங்களை அமைத்தனர். இவர்களில் சங்கரர் காலத்தால் முற்பட்டவர். இவரை இந்தியாவின் ஹெகல் என்றும் அழைப்பார்கள். காரணம், ஹெகல் முழுமுதல் கருத்து என்பதை மையமாகக் கொண்டு தனது தத்துவத்தை உருவாக்கினார். சங்கரர் பரபிரும்மம் என்பதை தனது தத்துவத்திற்கு அடிப்படையாகக் கொண்டார். ஹெகல் சமயம் சாராதவர். சங்கரர் சமயம் சார்ந்தவர். இதுதான் இவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடு.

சாங்கியம், வைசேடிகம், மீமாம்சம் ஆகியன பொருள் முதல்வாதத்திற்கும், கருத்து முதல்வாதத்திற்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்தன. உலகாயதவாதிகள் பொருளை மட்டுமே ஏற்றுக் கொண்டார்கள். இந்த நிலையில் பொருளை முற்றிலுமாக மறுத்து கருத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டவர்கள் வேதாந்திகள். இவர்களது ஆராய்ச்சியானது உலகத் தோற்றம் பற்றியும், கடவுள் பற்றியும் இருந்தன. இதற்கு ஆதாரமாக இவர்கள் உபநிடதங்கள், பிரம்மசூத்திரம் ஆகியவற்றை கொண்டனர். உபநிடதங்களில் முரண்பட்ட கருத்துக்கள் உண்டு. உலகத்தோற்றத்திற்கு உள்ள பொருள் ஒன்றுதான் என்றும், பல என்றும் உபநிடத வாக்கியங்கள் உள்ளன. இதனால் சங்கரர், இராமானுஜர், மத்துவர், சைவ சித்தாந்திகள் ஆகியோரிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் அசித்து என்றும், மனம் சார்ந்தவை சித்து என்றும் சங்கரர் பிரித்துக் கண்டார். இந்த சித்து என்பது குறைகள் எதுவும் இல்லாதது. இதனை பகுதிகளாகப் பிரிக்க முடியாது. இது பரிபூரண நிலை எனப்படும். ஆனால், தத்துவவாதிகளுக்கு உலகம் தோன்றியது பற்றிய விளக்கம் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இதற்கு சங்கரர் ஒரு வழியைக் காட்டினார். பிரும்மம் படைப்புத் தொழிலில் ஈடுபடுவது போல தோன்றுகிறது. ஆனால், பிரும்மம் படைப்பதில்லை. அப்படியானால் எப்படி புரிந்துகொள்வது? எனும் கேள்வி எழுகிறது. ஒரு செயல் நடப்பதற்கான காரணம் உள்ளது. அதிலிருந்து தோன்றும் காரியம் உண்மை அல்ல என்று கூறும் இந்த வாதம் முக்கியமானது. இதனை சங்கரர் திரிபுக் காட்சி என்பதன் மூலம் விளக்குகிறார். உதாரணமாக சில சமயங்களில் கயிரைப் பார்த்து நாம் பாம்பு என்று எண்ணுகிறோம். உண்மையில் கயிறு கயிராகத்தான் இருக்கிறது. அது பாம்பு போல தோன்றுகிறது. அதேபோல பிரும்மம் பிரும்மமாகத்தான் இருக்கிறது. அது உலகம் போல் தோன்றுகிறது.

**சங்கரரது இந்தக் கொள்கைக்கு மாற்றாக உலகமும் உண்மை, பிரம்மமும் உண்மை என்று கூறினார். பிரும்மமானது உலகமாக மாற்றம் பெறுகிறது என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் சங்கரர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.**

பிரும்மம் மட்டுமே உண்மை என்று அவர் கூறினார். சங்கரரின் ஆசிரியர் கௌடபாதர் என்பவர் இந்த உலகம் பொய் என்பதை காட்ட கனவுக் காட்சியை எடுத்துக்கொள்கிறார். நாம் விழித்திருக்கும்போது காணும் உலகம் ஒன்று. கனவு உலகில் காணும் உலகம் ஒன்று. விழித்தவுடன் கனவு உலகம் மறைந்து விடுகிறது. கனவு காணும்போது நனவு உலகம் மறைந்து விடுகிறது. எனவே இவை இரண்டும் பொய்யான தோற்றங்கள் என்ற முடிவுக்கு அவர் வந்தார். இதன் தாக்கம் சங்கரர் மீது உண்டு.

உலகின் தோற்றத்திலும், முடிவிலும் இல்லாத ஒன்று இடையில் வந்து விட முடியாது. இந்த உலகம் இடையில் வந்த ஒன்று. இதனை உண்மை என்று கூறமுடியாது. பிரும்மம் ஒன்று என்றும், ஆன்மாக்கள் பல என்றும் வேதாந்திகள் கூறுகின்றனர். ஆனால் முடிவில் ஆன்மாக்கள் பிரும்மத்தில் ஒடுங்கி விடுகின்றன. பிரும்மம் ஒன்று மட்டும்தான் இருக்கின்றது. இதற்கு ஏகாந்தவாதம் என்று பெயர். பிரும்மம் உலக மகாத் தோற்றம் அளிக்கிறதே என்ற கேள்விக்கு அவர்கள் விடை காண முயன்றனர். இதற்கு காரணம் மாயை என்று கூறினர். இதுதான் உலகத் தோற்றத்திற்கு காரணம் என்று கூறினர். இதனால் சங்கரரது தத்துவத்திற்கு மாயவாதம் என ஏற்படலாயிற்று. மாய வாதமானது இந்திய கருத்துமுதல்வாத தத்துவத்தில் மிகப்பெரிய பங்கினை பெற்றுள்ளது.

சங்கரரது தத்துவத்தில் மாயை என்பது மிக முக்கியமான பங்கினைப் பெறுகிறது. மாயை என்பது வேதாந்திகள் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒன்று. இதன் மூலம் தான் உலகத் தோற்றத்தை அவர்கள் விளக்குகிறார்கள். மாறா நிலையில் உள்ள பிரும்மம் எந்தவிதமான குணங்களும் இல்லாதது. அது மிக உயர்ந்தது. இதற்கு நிர்குண பிரும்மம் என்று பெயர். இந்த பிரும்மம் மாயையுடன் சேரும்போது பல குணங்களைப் பெற்றதாகி விடுகிறது. இதற்கு சகுண பிரும்மம் என்று பெயர். இந்த நிலையில்தான் கடவுள் எனப்படுகிறது.

இப்பொழுது கடவுள் உலகத்தைப் படைகிறார். இந்தத் தத்துவத்தில் கடவுளுக்கு இரண்டாவது இடம்தான் உள்ளது. முதல் இடம் பிரும்மத்திற்கு உரியது. சங்கரர் ஆன்மா அல்லது பிரம்மம் ஒன்றுதான் என்று கூறுகிறார். இந்த பிரும்மத்தை அடைவது என்பது தான் முக்தி எனப்படுகிறது. இதற்கு ஞானம் என்பதை வழியாகக் கூறுகின்றனர்.

பக்தி மார்க்கத்தை வேதாந்திகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நல்ல ஒழுக்கம், நல்ல நடத்தை ஆகியவற்றை அவர்கள் வலியுறுத்தினர்.

தொடர்புக்கு: 98947 83657

# வகுப்புவாத சக்திகளை எதிர்ப்பதில் சமரசத்திற்கு இடமில்லை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் திரு.ராம்குமார் “பிரதமர் நரேந்திர மோடி” குறித்து எமது விமர்சனத்தை தரம் குறைந்ததாக மதிப்பிட்டு, இனிமேல் எமது “தந்தையின் பெயரை பயன்படுத்த வேண்டாம்” என்று ஊடகங்கள் வழியாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு.ராம்குமார் அவர்களுக்கு சிவாஜி கணேசன் உயிரியல் வழி தந்தையாவார். ஆனால் என் போன்ற கோடிக்கணக்கானவர்கள் உள்ளத்தில் இன்றும் வாழ்ந்து வரும் “நடிப்புலகின் மேதையாவார்”. எண்ணிலடங்கா பாத்திரங்களில் வாழ்ந்து வரும் அவரது நடிப்புத்திறன் எதிர்வரும் தலைமுறையும் கற்றறிய வேண்டிய கலைத்துறையின் இலக்கணமாகும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

எட்டாண்டு கால ஆட்சியின் சாதனைகளை பட்டியலிட்டு வரும் பிரதமர் மோடியின் “உண்மைகலவாத சுத்தமான பொய் மூட்டை” வியாபாரத்துக்கு திரு.ராம்குமார் அவர்களும் கூட்டாளியாகி இருப்பதை அவரது அறிக்கை வெளிப்படுத்துகிறது.

நடிகர் திலகத்தின் உயிரோடும், உணர்வோடும் கலந்து வாழ்ந்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு வகுப்புவாத சக்திகள் பிரதமர் வேட்பாளராக திரு.மோடி அறிவிக்கப்பட்ட நிலையில் “கருப்புப்பணத்தை மீட்டு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா ரூ.15 லட்சம் வைப்பு நிதியாக செலுத்துவோம்” என்று உணர்ச்சி பொங்க உறுதியளித்தார்களா? இல்லையா?

விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவதாகவும், ஆண்டுக்கு 2 கோடி மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவதாகவும் மேடைக்கு, மேடை முழங்கினார்களா? இல்லையா?

கூட்டாட்சி கோட்பாடுகளை தகர்த்து, மாநில உரிமைகளைப் பறித்து, தனிநபரை மையப்படுத்திய, சர்வாதிகார வழியில், பாசிச ஆட்சிமுறைக்கு நாட்டை நகர்த்தி செல்வதை மறுக்க முடியுமா?

இவைகள் குறித்து சிந்தனை தெளிவு ஏற்படாமல் தடுக்க ராம்குமார் போன்றவர்களை பாஜக களம் இறக்கி வருகிறது. மாநில உரிமைகளை பாதுகாக்கும் போராட்டத்தில் சாரதியாக முன்னின்று செயல்படும், திமுகழகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது என்பதை ‘அரைகுறை ஞானம்’ கொண்டவர்களும் உள்ளங்கை நெல்லிக்கனியாக அறிந்து கொள்ளும் போது ‘பேரறிஞர்’ ராம்குமார் அறியாமையில் இருப்பது வரலாற்று துயரம்தான்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், திரு.ராம்குமாருக்கு உயிரியல் தந்தையாவார் மறுக்கவில்லை. ஆனால் அந்த மாமனிதன் வாழ்ந்த வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோடு உணர்வில் கலந்து உறவில் இருந்து வந்தார். மயிலாடுதுறையில் நாடகம் நடத்தி நிதி திரட்டி கொடுத்ததையும், காவிரி நதிநீர் பிரச்சனைக்காக மனித சங்கிலி போராட்டத்தை கட்சி முன்னெடுத்த போது ஆக்கம் கொடுத்து ஊக்கப்படுத்தியதையும் என்றென்றும் நினைவு கூர்ந்து வருகிறது.

ஒன்றிய அரசின் அரசியல் செல்வாக்கின் அழுத்தங்களுக்கு ராம்குமார் வளைந்து, நெளியலாம். வகுப்புவாத சக்திகளை எதிர்த்து போராடும் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளாது என்பதை ராம்குமாருக்கும் அவர் மூலம் அறிக்கை வெளியிட்ட சக்திகளும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஊழல், முறைகேடுகள் மீது நடவடிக்கை எடுத்திடுக: பெரணமல்லூரில் ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஆணை போகி ஊராட்சியில் அனைத்து நிதி ஒதுக்கீடு செய்வதிலும் ஊழல், முறைகேடுகள் நடைபெறுகின்றன. இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி பெரணமல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மே 20 அன்று நடைபெற்றது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர். நாராயணன் தலைமை தாங்கினார். பி. முனுசாமி, பி.பிரபாகரன், எஸ்.ஆனந்தன், பி. மீனா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வே. முத்தையன், வி.தொ.ச. மாவட்டச் செயலாளர் இரா.தங்கராஜ், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் எம். வெங்கிடேசன், திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் ஏ.ரகமத்துல்லா ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் வி.சுப்பிரமணி, ஏ.ஆரிப், கே.சையது, ஆர். விஜயன், இ.சுப்பிரமணி மற்றும் 50க்கும் மேற்பட்டோர் பங் கேற்றனர்.

எச்.டி.எப்.சி. வங்கி விவகாரம் குறித்து

## நிதியமைச்சருக்கு கே.சுப்பராயன் எம்.பி. கடிதம்



நேற்றைய தினம் (30.05.2022) பதற்றத்தை உண்டாக்கக் கூடிய அளவிற்கு அதிர்ச்சியையும், சந்தேகத்தையும் எழுப்பியுள்ள எச்.டி.எப்.சி. வங்கி விவகாரத்தில் என்ன நடந்தது என்பதை விசாரித்து உண்மையை வெளிக்கொண்டு வர உங்களின் உரிய மற்றும் உடனடித் தலையீட்டை நான் வலியுறுத்திக் கோருகிறேன்.

எச்.டி.எப்.சி. வங்கியின் சில நூறு வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்குகளில் இருப்புத் தொகை திடீரென்று பல லட்சங்களாகவும், மேலும் சில வாடிக்கையாளர்களின் கணக்கில் பல கோடிகளாகவும் அதிகரித்தன. இவ்வகையில் அதிகரித்துள்ள மொத்த தொகை ரூ.1300 கோடியாகும். வங்கி நிர்வாகத்திடமிருந்து இதுவரையில் அதிகாரப்பூர்வமான எந்த அறிக்கையும் வெளியிடப்படாத நிலையில், புரிந்து கொள்ள முடியாத இந்த விவகாரத்திற்கு, தொழில்நுட்ப கோளாறுதான் காரணம் என்று வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பக் கோளாறு சீர் செய்யப்படும் வரை, அப்பாவி வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுக்க முடியாத வகையில் அவர்களின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டு அவர்கள் இரட்டை தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விவகாரத்தின் விளைவுகள் அறிய முடியாதவை அல்ல; இது தொடர்பான சந்தேகங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. பதில் அளிக்கப்படாத கேள்விகளும், சந்தேகத்திற்கு உரிய தொடர்புகளும் உள்ளன. கண்ணுக்கு புலப்படாத மேலும் பல விஷயங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

வங்கித் துறையின் நம்பகத்தன்மை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தற்போது எழுந்துள்ள பிரச்சினை இனிவரும் காலங்களில் பல்கிப் பெருகக் கூடியது ஆகும். எச்.டி.எப்.சி. வங்கி நிர்வாகத்திடமிருந்து உடனடியாக நீங்கள் விளக்கம் கோர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். முறைகேடுகள் இருப்பின், அவற்றை வெளிக்கொண்டு வர, உண்மை நிலையை உரைத்திட, ஒரு முழுமையான விசாரணையை உடனடியாக நடத்திட வேண்டும். இது குறித்து நிதியமைச்சகம் விரைந்து செயல்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இவ்வாறு கே.சுப்பராயன் எம்.பி. கூறியுள்ளார்.



கலையரசன்

# இலங்கை மக்கள் எழுச்சி வர்க்கப் போராட்டமாக மாறட்டும் !




**1977 ஆண்டு முதல், நவதாராளவாத கொள்கையை, ஆசியா கண்டத்தில், அமலாக்கி வரும் முதல் நாடாக இலங்கை மாறியது.**

இலங்கையில் யார் வேண்டுமானாலும் தொழில் செய்யலாம்; அனைத்துப் பொருட்களையும் தடையின்றி இறக்குமதி செய்யலாம் என்ற நிலை வந்துவிட்டது. எனவே உள்ளூர் பொருளாதாரம் பாதிப்படைந்தது. வெங்காயம், கத்திரிக்காய் போன்ற இலங்கையில் உற்பத்தியான பொருட்கள் கூட இறக்குமதி செய்யப்பட்டு, விலை குறைவாக விற்பனை செய்யப்பட்டன. இதனால் இலங்கை விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். தேயிலை, ரப்பர் போன்ற தோட்டப்பயிர்கள் இலங்கையில் பொருளாதாரத்திற்கு ஆதாரமாக இருந்தது. ஆனால் தேயிலைத் தோட்டங்களை தனியார்மயம் ஆகிவிட்டார்கள். இதனால் தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

இலங்கையில், சுதந்திர வர்த்தக வளையத்தில் உற்பத்தி செய்தால் வரி கிடையாது. தொழிலாளர்ளுக்கு தொழிற்சங்க உரிமைகள் இல்லை என்றார்கள். இதனால் மலிவான ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைத்தார்கள். தொழிலாளர்களுடைய வாழ்க்கைத்தரம் குலைந்தது. சமீபத்தில்தான் இடதுசாரி சக்திகள், தொழிலாளர் மத்தியில் வேலை செய்து, ஓரளவு கூலி உயர்வைப் பெற்றார்கள். இவர்களைவிட மலையக மக்களின் கூலி வெகுக் குறைவு.

இலங்கையை விட மலிவான மனித உழைப்பு கிடைப்பதால், பல ஆடை நிறுவனங்கள் வங்கதேசத்திற்கு இடம் பெயர்ந்தன. எனவே ஆடை மூலம் இலங்கை அரசுக்கு கிடைத்து வந்த வருவாய் குறைந்தது. லெபனான், ஜப்பான், தென் கொரியா, சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்கு தொழிலாளர்கள் வேலைக்காக செல்வது முக்கிய வருவாயாக இருந்தது. ஆனால் சமீப காலங்களில், தொழிலாளர்கள் வங்கி மூலம் பணத்தை அனுப்பாமல், தனியார் நிறுவனங்கள் மூலம் அனுப்பி வைத்தனர். தனியார் மூலம் அனுப்பப்படும் பணத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

மூன்றாவதாக இலங்கையானது, சுற்றுலாவை நம்பியிருந்தது. உலக அளவில் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்து கொண்டிருந்தனர். கொரானா பெருந்தொற்றின் காரணமாக சீனாவிலிருந்து வரும் சுற்றுலா பயணிகள் வருவது நின்றுவிட்டது; ரஷ்யாஉக்ரேன் போரின் காரணமாக, மேற்குலக நாடுகளிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது.

இது போன்றக் காரணங்களால், தமது தேவைக்கு, இறக்குமதியை மட்டுமே நம்பியிருந்த இலங்கை அரசிற்கு, கொடுப்பதற்கு அந்நியச் செலாவணி இல்லாமல் போய்விட்டது. கைவசம் இருக்கும் பணத்தை கடனுக்கு கொடுத்ததனால் பொருளாதாரம் முற்றாக சீர்குலைந்தது. வேறு வார்த்தையில் சொல்வதானால் நவதாராளவாத பொருளாதார கொள்கை யினால் இலங்கை பாதிக்கப்பட்டது. இதனால் மக்கள் எழுச்சி அடைந்து போராடி வருகின்றனர் என்பதை நாம் கவனிக்க தவறிவிடுகிறோம்.

ஏற்கனவே பிரச்சினை வந்த போதெல்லாம் ஆட்சியாளர்கள் தங்களை நாட்டுப்பற்றாளர்களாகவும், தேசியவாதிகளாகவும் காட்டிக்கொண்டு மக்களை ஏமாற்றி நம்பிக்கையைப் பெற்றார்கள். இலங்கை பொருளாதாரத்தை புனரமைப்பதாகச் சொல்லித்தான் மகிந்த ராஜபக்சே ஆட்சிக்கு வந்தார். சில துறைகளை தேசியமயமாக்கினார்; அவைகளில் தனது நண்பர்களையும், உறவினர்களையும் முக்கிய பொறுப்புகளில் வைத்தார்.

தவறான நிர்வாகம், ஊழல் காரணமாக அந்த நிறுவனங்கள் நஷ்டம் அடைந்தன. மகிந்த ராஜபக்சே குடும்பத்தினர் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தனர். தெற்கு இலங்கையிலும், கிழக்கு இலங்கையிலும் பல ஹோட்டல்களை தங்கள் குடும்பத்தினருக்கு கட்டிக் கொண்டனர். நாட்டை வளப்படுத்த அவர்கள் அக்கறை காட்டவில்லை. இதனால் மக்கள் அவர்கள் மீது கோபம் கொண்டனர்.

கடந்த காலங்களில் இதேபோல பிரச்சினை வந்தபோது தமிழ் மக்கள் மீதான போர், விடுதலைப்புலிகளை ஒடுக்குதல் என்று சொல்லி மக்களுடைய கோபத்தை மடை மாற்றம் செய்தனர். இப்போது தமிழ் மக்கள் பலவீனமான நிலையில் உள்ளனர். எனவே கோபத்தை இஸ்லாமியர்கள் மீது காட்டுவதற்காக சில இடங்களில் குண்டு வெடிப்புகளை அவர்களே செய்ததாகவும் சொல்லப்படுகிறது. ஹலால், புர்கா போன்ற பிரச்சினைகள் மூலம் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பைக் கட்டமைத்தார்கள்.

கொரானா காலத்தில் இறந்துபோன இஸ்லாமியர்களை எரிக்க வேண்டும் என்று ஒரு பிரச்சனையை கிளம்பினார்கள். ஆனால் 40, 50 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போரின் விளைவாக மக்கள் களைப்படைந்து விட்டார்கள். இலங்கை, வேறொரு நாட்டைக் காட்டி வெறுப்பை வளர்க்க முடியவில்லை. இனி வருங்காலங்களில் உணவுப் பஞ்சம் கடுமையாக இருக்கும் என்று அஞ்சுகிறார்கள்.

இனப்பிரச்சினையை இப்போது காரணமாகச் சொல்ல முடியாது; மதப் பிரச்சினை எடுபடவில்லை, என்ற நிலையில், சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இணைந்து அரசை எதிர்த்துப் போராடத் தொடங்கிவிட்டனர். இது ஒரு நல்ல மாற்றம்.

1953 ஆம் ஆண்டில் சிங்களர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து ஒரு பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தினர். அதனால் அரசு கவிழ்ந்துவிடும் என்கின்ற நிலைகூட இருந்தது. மந்திரி சபையைக் கூட்ட முடியாமல், இலங்கைக்கு வெளியே பிரிட்டிஷ் கப்பலில் கூட்டினார்கள். அதன் பிறகு 1956 ஆண்டு சிங்களம்தான் ஆட்சி மொழி என்று இலங்கை சட்டம் இயற்றியது. இதனால் சிங்களர், தமிழர் பிரச்சினையை உருவாக்கினர். 1957 ம் ஆண்டில் ஏற்பட்ட பண்டாரநாயகா செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமலாக்க விடாமல் செய்தார்கள். இப்போது இருக்கும், ரணில் விக்ரமசிங்க கட்சியைச் சேர்ந்தவர்கள் புத்த பிக்குகளைத் தூண்டிவிட்டு, சிங்கள பேரினவாதத்தை உருவாக்கினார்கள்.

**தமிழர்கள் பொருளாதாரரீதியாக வலுவாக இருந்தனர். அரசுப் பொறுப்புகளிலும் இருந்தனர். 1971 ம் ஆண்டில் ஜனதா விமுக்தி பெருமானா (JVP) எழுச்சியைச் தொடர்ந்து, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் தரப்படுத்துதல் என்ற கொள்கைமூலம் பின்தங்கிய சிங்கள மாணவர்களுக்கு சிறப்பு மதிப்பெண் கொடுத்து, பல்கலைக்கழகங்களில் முன்னுரிமை கொடுத்தனர். ஆனால் தமிழ் மாணவர்களின் வாய்ப்புகளை பறிப்பதனால், அது சிங்களர்- மீது தமிழர் வெறுப்பை விளைவித்தது.**

இது போன்ற முரண்களை, இன ரீதியாக வேறுபடுத்தினர். கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் குடியேற்றம் நடந்தது. அவர்கள் நிலமற்ற, ஏழை விவசாயிகள். எனவே அந்தப் பகுதிகளில் இப்போது சிங்களர் தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.

1983 ல் ஏற்பட்ட தமிழர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தின் போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தொழிற்சங்க தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதுகுறித்து யாரும் பேசவில்லை.

ஜனதா விமுக்தி பெருமுனா எழுச்சி, இரண்டாவது முறையாக 1989 லும் ஏற்பட்டது. படித்த மத்திய தர வர்க்கத்திற்கு வேலை இல்லை. விரக்தி அடைந்த சிங்கள இளைஞர்கள் போராடினார்கள். அதில் சோவியத் ஆதரவு, சீன ஆதரவு, அமெரிக்க ஆதரவு என எல்லா எண்ணவோட்டம் கொண்டவர்களும் இருந்தனர். அக்கிளர்ச்சியை கூலிப்படையினரைக் கொண்டு அடக்கினர். கல்லூரி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வாக்காளர் பட்டியலை வைத்துக்கொண்டு, பலரைத் திட்டமிட்டு கொன்றனர். எழுச்சி அடங்கிய பின்பும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். சாதிரீதியில் அடித்தட்டு மக்கள் அதிகாரம் கோரி, அந்தப் போராட்டத்தில் பங்குபெற்றனர். அவர்களை அடக்கி வைக்க வேண்டும் என்ற மேல் சாதி வன்மம் வேறொரு காரணம்.

தமிழர்களுக்கு எதிரான போர் என்ற பெயரில் இடதுசாரிகளும் அப்போது கொல்லப்பட்டனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜேவிபி கட்சி, சோவியத், சீன இடதுசாரி ஆதரவுக்குழுக்களைச் சார்ந்தவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். தொழிற்சங்கங்கள் தடை செய்யப்பட்டன. சில தொழில் நிறுவனங்களில் வேலை நிறுத்தம் செய்வது சட்டவிரோதமாக்கப்பட்டது. பல தொழிற்சங்க தலைவர்கள் இன்னமும் சிறையில் இருக்கின்றனர். அது குறித்து யாரும் பேசுவதில்லை. மனித உரிமை அமைப்புகள் தடைசெய்யப்பட்டன. இதனால் ஒட்டுமொத்த இலங்கை மக்களின் வாழ்நிலமை சீரழிந்து போனது.


பாராளுமன்ற கொள்கை பேசியவர்கள் சிங்கள தேசியவாதத்தை முன்னெடுத்தார்கள். அதே சமயம் தமிழ்த் தேசியத்தை ஒத்துக்கொள்ளவில்லை என்றால் ‘துரோகிகள்’ என்று அதே மொழியில் தமிழர் அமைப்புகள் பேசின.

இடதுசாரிகள் பலவீனப்பட்ட நிலையில், இரண்டு தலைமுறை இளைஞர்கள், அரசியல் நீக்கம் அற்றவர்களாக மாறிவிட்டனர். முதலாளித்துவ பொருளாதாரம், இனவாதத்தை பேசும் இளைஞர்களாக மாறிவிட்டனர். இந்த நேரத்தில் இந்த எழுச்சியை இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மத்தியில் இடதுசாரிகள் பொருளாதார பலம் இன்றி, ஆள் பலம் இன்றி பல வழிகளில் இன்னமும் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் நடத்தும் ஊர்வலம் போன்ற செய்திகள், ஊடகங்களில் வருவதில்லை. அப்படியே வந்தாலும், அதை இடதுசாரிகள் நடத்தினார்கள் என்று ஊடகங்கள் எழுதுவதில்லை. இப்போது அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட எந்த நாடும் உடனடியாக மீட்சி அடைந்ததில்லை. வியத்நாமில் 30 ஆண்டு போர் நடந்தது; மக்கள் 30 ஆண்டு வறுமையை அனுபவித்தார்கள். ஈராக் போரினால் அந்த மக்கள் பொருளாதார பாதிப்புக்குள்ளானார்கள். இலங்கைப் போரினால், ஆளும் வர்க்கம் இலாபம் அடைந்தது. ஆனால் உழைக்கும் மக்களுக்கு எந்த பலனும் இல்லை.

கடந்த சில ஆண்டுகளாகவே , ஊடகங்கள் போரைத் தவிர வேறு எந்த செய்தியையும் பேசவில்லை. ஜனநாயக உரிமைகள் குறித்த விவாதங்களே எழவில்லை. வடக்கு மாநிலத்தில் தமிழர்கட்சிகள் தமிழர் சிங்களர் ஒற்றுமையை விரும்பவில்லை. கிழக்கு மாநிலத்தில் தமிழர் சிங்களவர் ஒற்றுமை ஏற்பட்டு வருகிறது. இலங்கை மக்கள் மென்மேலும் ஒன்றுபட்டு ஜனநாயக உரிமைகளுக்காக, வாழ்வாதாரத்திற்காக குரல் எழுப்பி வருவது பாராட்டுக்கு உரியதாகும்.

**(நெதர்லாந்தில் வசிக்கும், இடதுசாரி தமிழ் எழுத்தாளரான கலையரசன், சிந்தனையாளர் பேரவையில் மே 26 அன்று ‘இலங்கையில் நடப்பது என்ன?’ என்ற பொருளில் பேசினார். அவரின் உரையை பீட்டர் துரைராஜ் எழுத்து வடிவத்தில் கொடுத்துள்ளார்)**




## மாயாண்டி பணிநிறைவு விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

கிருஷ்ணன்கோவிலில் கிருஷ்ணாபுரம் மின்சாரவாரிய சிறப்புநிலைமுகவர் எ.மாயாண்டி அவர்களின் பணிநிறைவு விழா நடைபெற்றது. செயற்பொறியாளர் திருநாவுக்கரசு தலைமை வகித்தார். முனியாண்டி வரவேற்றார். சிபிஐ மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ். எம்.பி., மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி., மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், வி.பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ., ஏம்பளாயீஸ் பெடரேசன் மாநில தலைவர் மணிகண்டன் உள்பட பலர் வாழ்த்தி பேசினர். அப்பொழுது ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கப்பட்டது.




# கடலலைகள் மீதெழுந்த விடுதலைத் தீ 1946

**1946 இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு தீர்க்கமான , தீரமான நிகழ்வு நிகழ்ந்தது.**

ஃபிப்ரவரி 1946.. பம்பாய் கடல் பகுதி, அப்போதிருந்த பிரிட்டிஷ் கடற் படைப் போர்க் கப்பல்கள், தகவல் தொடர்பு நிலையங்கள், போர்த் தளவாட நிலையங்கள் எனக் கொலபா என்னும் பகுதியில் அவை நிறைந்து செயலாற்றின.

ஆங்கில, உயர் கல்வி கற்றிருந்தவரே ராயல் பிரிட்டிஷ் நேவி என்னும் கப்பல் படையில் சேர்க்கப் பட்டிருந்தனர். தவிரவும், சுதந்திரக் கனல் காற்றில் பரவியிருந்த தருணம் ஆகையால், கடற் படையில் சேர்ந்திருந்த இளம் வீரர்களுக்கும், பயிற்சி மாலுமிகளுக்கும் அதன் தாக்கம் இருக்கத்தானே செய்யும். கூடுதல் நிகழ்வாக, ஐ.என்.ஏ. எனப்படும், இந்தியன் நேஷனல் ஆர்மி யில் சேர்ந்தவர்கள் மீதான வழக்குகள் டில்லி செங்கோட்டையில் நடைபெற்று வந்தது. காங்கிரஸ், இடதுசாரி அமைப்புக்களை, விவசாய இயக்கங்களை சார்ந்த பலர் அரசியல் கைதிகளாகச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தனர்.

இந்தச் சூடு கனலாக இளம் கப்பல் படை வீரர்கள் மத்தியில் உயிர்த்திருந்தது. தீயாக மாற ஒரு உரசல், தீப்பொறி தேவைப்பட்டது.

இந்தப் பின்னணியில், *** ரேட்டிங்க்ஸ் கப்பல் படை பதவி வரிசையில் அடிமட்ட நிலையிலுள்ளவர்கள், தாங்கள் வேலைக்குச் சேர்ந்தபோது தரப்பட்ட உத்திரவாதங்கள் எதுவும் நிறைவேற்றப் படாததில் ஏமாற்றமும், கோபமும் கொண்டிருந்தனர். அடிப்படை வசதிகள் குறைக்கப் பட்டதும், தரக் குறைவாக நடத்தப் பட்டதும், இனவெறி ஏளனங்கள் தாக்கியதும், ஏர்கனவேயே இந்திய விடுதலையின் பால் ஈர்ப்புக் கொண்டிருந்த இளம் கப்பல் படை வீரர்கள், தாங்கள் பணியாற்றும் கப்பல்களை மிதக்கவிட்டு வேலை நிறுத்தம் செய்வதாகவும் அறிவித்தனர். கொலபாவிலிருந்த கப்பல் படைத் தகவல் நிலையம் மற்றும் பள்ளி.. ஹெச்.எம்.ஐ.எஸ்.. தல்வார்... வரை செய்தி பரவி..'' மரப் பொந்தில் வைத்த தீ, காட்டையே வேக வைத்தது.

போராட்டம் செய்த இளம் கப்பல்படை வீரர்கள் சில நிபந்தனைகளை பிரிட்டிஷ் அரசிடம் வைத்தனர். அதில் அப்போது புரட்சிகரமாகச் செயல்பட்ட “ ஆஸாத் ஹிந்த் ஃபௌஜ்” கிஞீகிஞ் பிமிழிஞ் திளிஹியி என்னும் அமைப்பைச் சேர்ந்த சிறையிலிருந்தவர்களையும், 416 அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டனர்.

வேலை நிறுத்தம் கடல் பரப்பில் மட்டுமல்லது அஞ்சல், தந்தி, பஞ்சாலை, ஏன் சில படைப் பிரிவுகளின் மத்தியிலும் செல்ல ஆரம்பித்தது. படை வீரர்கள் மனதில் அரசியல் உணர்வா? சுதந்திர வேட்கையா? பிரிட்டிஷ்காரர்களை எஜமானர்களாக ஏற்காத மன நிலையா? ஆட்சியாளர்களை அச்ச அலைகள் தாக்க ஆரம்பித்தன. இதற்கு சிகரம் வைப்பது போல் இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தேறியது;

கப்பல்களில் பறக்க விடப் பட்ட வெள்ளை நிற பிரிட்டிஷ் அடையாளக் கொடியை இறக்கி விட்டு அங்கே மூன்று கொடிகளைப் பறக்க விட்டனர். காங்கிரஸின் மூவர்ணக் கொடி பச்சை நிற முஸ்லிம் லீக் கொடி, கம்யூனிஸ்டுகளின் செங்கொடி என பரந்து பட்ட இந்திய நிலப்பரப்பின் அனைத்து மக்களையும் எதிரொலித்த புரட்சிகரமான நிகழ்வு அது.

வானதிர மூன்று கோஷங்களும் வெளிப்பட்டன : “ வந்தே மாதரம், ஆசாத் பாரத், அல்லாஹ்..ஹூ அக்பர், இன்குலாப் ஜிந்தாபாத்..

இந்தப் பேரெழுச்சி நடந்து கொண்டிருந்த போது, பிரிட்டிஷ் அரசு ஐ.என்.ஏ. தலைவர்கள் மூவரை டில்லி செங்கோட்டையில் தேசப்பிரிவினைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்தனர். மூவரின் பெயர்கள்: ப்ரேம் குமார், **(HINDU )** ஷா நவாஸ் கான், **(ISLAM)** குருபக்ஷ் சிங் தில்லான் **(SIKH )**

இதிலிருந்து நாம் என்ன அறிகிறோம். நாடு காக்க இனம், மதம் எதுவும் குறுக்கே நிற்க வில்லை.

வெள்ளையனுக்கு விஷயம் புரியத் துவங்கியது. விபரீதம் வருமென்றும் புலப்பட ஆரம்பித்தது. இந்த சூறைக்காற்றை நிறுத்தியாக வேண்டுமென்ற முனைப்போடு செயல்படத் துரிதப்பட்டனர். சரணடையச், சமரசம் ஏற்படப் பலவழி முனைப்புக்களும் பிரிட்டிஷாரால் காட்டப் பட்டது.

இந்திய அரசியல்வாதிகளும் ஒரு பெரியஆயுதம் தாங்கிய படைவீரர் போராட்டம் மூலம் வரும் விடுதலை அல்லது அதிகார மாற்றம் என்பதில் விருப்பமற்றிருந்தனர்.

ப்ரமோத் கபூர் குறிப்பிடுகிறார்: இந்த எழுச்சிபேதங்களற்ற எழுச்சிக் கனலை இந்திய அரசியல்வாதிகள் கட்டுக்கோப்பாய் மேலெடுத்துச் சென்றிருந்தால், பிரிவினையின் போது, இவ்வளவு கோரக் கொடூர மத்வெறிக் கொலைகள் நிகழ்ந்திருக்காது என்று. விடுதலை வீரர் அருணா அஸஃப் அலியும் இதையே வலியுறுத்திச் சொல்கிறார். அனேகமாக இன்றுவரை தொடரும் மதவெறி நாசங்களும் ஓரளவு தடுக்க அல்லது குறைக்கப் பட்டிருக்கலாம்.

சுதந்திர இந்தியாவில் கூட விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் சொல்லப்படும் போது, பெருமைப் படுத்தப்படும் போது 19 ஆம் நூற்றாண்டில் நடந்த வேலூர் சிப்பாய்களின் எழுச்சிப் போரோ, 1946ல் பம்பாயில் நடந்து பரவிய கடல் படை வீரர்களின் போரோ சரியான இடம் பெறுவதில்லைதான்.

முதலில் நாம் வேலூர் சிப்பாய்க் கலகம், 1857 சிப்பாய்க் கலகம், 1946 கப்பல் படைக் கிளர்ச்சி எனக் கூறாது, அவற்றை நம் நாட்டின் விடுதலைப் போராட்ட அங்கங்களாகப் புரிந்து கொண்டு நாட்டிற்கும் கூறுவோம். **THEY ARE NOT MUTINY, BUT WAR-WAR OF FREEDOM.**

– ராமானுஜம்



-க.முத்தியாலு

# இன்றும் எம் நெஞ்சங்களில்...




**தமிழக தொழிற்சங்க இயக்கத் தோழர்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர், மத்தியதர வர்க்கத்தினர் என எல்லோருடைய நெஞ்சிலும் நீங்காத இடம் பிடித்தவர் தோழர் ஜெகன்.**

திருத்துறைப்பூண்டி அருகே காரியாப்பட்டி என்ற குக்கிராமத்தில் பிறந்தார். பள்ளிப்பருவத்திலேயே சாதியக் கொடுமைகளைக் கண்டு மனம் குமுறியவர்.பெரியாரின் கருஞ்சட்டை மாநாட்டில் கலந்து கொண்டவர். விவேகானந்தா கல்லூரியில் பட்டப்படிப்பை முடிக்கும் போது சோசலிசக் கருத்துக்களில் நாட்டம் கொண்டார்.

1952ல் அன்றைய தபால் தந்தி இலாகாவில் தொலைபேசி இயக்குனராக பணி நியமனம். கடலூரில் பணியாற்றியபோது தோழர் சிரில் இவரது மனதில் கம்யூனிசக் கருத்துகளை விதைத்தார்.

கடலூரில் பணியாற்றிக் கொண்டிருந்த போது அப்போதைய சோசலிஸ்ட் கட்சித் தலைவர் லோகியாவின் பேச்சைக் கேட்கச் சென்றார். மொழிபெயர்ப்பாளர் வராததால் இவர் மொழிபெயர்த்தார். இவரது மொழிபெயர்ப்பில் அகமகிழ்ந்த லோகியா, அடுத்து பேச இருந்த சிதம்பரம் கூட்டத்திற்கும் மொழிபெயர்க்க அழைத்துச்சென்றார்.

1963 ஆம் ஆண்டு தமிழ் மாநில தொலைத்தொடர்பு ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். தொலைத் தொடர்பில் மாநில செயலாளராக இருந்தாலும், தபால் தந்தி ஊழியர், மத்திய அரசு ஊழியர், அரசுப் பணியாளர், வங்கி, இன்சூரன்ஸ் போன்ற மத்தியதர ஊழியர் இயக்கங்கள் அனைத்திலும் பங்கு கொண்டார்.

1987 இல் கல்லூரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்த கூட அனுமதி மறுக்கப்பட்ட போது, அரசின் அடக்குமுறைக்கு எதிராக, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆதரவாக அரசின் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தோழர் ஜெகன் தலைமையில் 57 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

1974ல் ரயில்வே தொழிலாளர் போராட்டத்தின் போது சென்னை ஐ.சி.எப். சங்கத்தின் பொதுச்செயலாளர் தட்சிணாமூர்த்தியை கைது செய்யாமல் இருக்க சங்க அலுவலகத்தில் தங்க வைத்து பாதுகாத்தார்.

ரயில்வே குடியிருப்புகளில் இருந்து தொழிலாளர் குடும்பங்களை காலி செய்யுமாறு காவல்துறை மிரட்டியபோது, தபால் தந்தி தொழிலாளர்களை திரட்டிச் சென்று தடுத்து நிறுத்தி காலி செய்யாமல் காத்தார்.

புது கல்லூரி ஆசிரியைகள்,இலண்டன்இரப்பர்தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சிம்சன், டிவிஎஸ் தொழிலாளர்கள், எல்.ஐ. சி., வங்கி தொழிலாளர்கள் என தமிழகத்தில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் பங்கு பெற்று முன்நின்று போராடியவர்; வழிகாட்டியவர். தபால்தந்தி தொழிலாளர்களை திரட்டிச் சென்று ஆதரவு இயக்கம் நடத்தியவர்.

1960 ஜூலை 12 மத்திய அரசு ஊழியர்களின் மாபெரும் பொது வேலைநிறுத்தம் துவங்கியது. புதுக்கோட்டையில் பணியாற்றிக் கொண்டிருந்த தோழர் ஜெகன் மற்றவர்களுடன் சிறையிலடைக்கப்பட்டார். வெளிவந்தாலும் இலாகா அவரை வேலை நீக்கம் செய்தது.

**வேலை நிறுத்தத்திற்கு முன்பு தையல் காரர்களிடம் சட்டை தைக்க துணி தந்திருந்தார் ஜெகன். இப்போது தையல்காரரிடம் “சட்டை வேண்டாம்; நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்” என்கிறார் ஜெகன். தையல்காரர் காரணம் கேட்கிறார். சட்டை தைக்க வந்த போது வேலையில் இருந்தேன், இப்போது வேலையும் இல்லை, கையில் காசும் இல்லை என்கிறார். தையல் கூலி வேண்டாமென்று சட்டையை கொடுத்ததோடு மட்டுமல்லாமல், தையல்காரர்கள் சங்க கூட்டம் நடத்தி போராட்ட நிவாரண நிதி வசூலித்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கினர்.**

இந்த நிகழ்ச்சி தான் அவரது உள்ளத்தை தைத்தது. கூட்டங்களிலும், முழக்கங்களிலும் “ஒருவன் அல்ல தொழிலாளி; அது ஒரு வர்க்கமடா” என்று முழங்கவும் மேலும் ஊக்கத்தோடு செயல்படவும் உந்துதல் செய்த நிகழ்வு இது.

மகளிரை தொழிற்சங்க இயக்கங்களில் பங்கேற்க வைப்பதிலும், நிர்வாகப் பொறுப்பிற்கு கொண்டு வருவதிலும் அவர்களது செயல்பாட்டிற்கு உதவுவதிலும் அக்கறை காட்டியவர். மார்ச் 8 ஆம் நாள் மகளிர் தினத்தை தவறாமல் நடத்த தூண்டுகோலாக விளங்கினார்.

1983 மார்ச் 5, 6 ஆகிய நாட்களில் தமிழக சென்னை தொலைபேசியில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான பெண்களை திரட்டி அப்போதைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் கோமதி சீனிவாசன், மங்கலம் சம்பத், மைதிலி சிவராமன், சரஸ்வதி சீனிவாசன், மின்னி ஜார்ஜ், தனம், ஏ.டி.ருக்மணி ஆகியோர் கலந்து கொண்ட சிறப்பான மாநாடு. ஆயிரக்கணக்கான பெண்கள் பாரிமுனையில் பேரணியாக சென்றது வரலாற்று சிறப்பான நிகழ்வு.

ஆங்கிலத்தில் நல்ல புலமை படைத்தவர். அகில இந்திய மாநாடுகள், இலாகா அதிகாரிகளுடன் உத்தரவுகள் பற்றிய விவாதம் தமிழல்லாத பிற மாநிலத்தவருடன் பேசுவது தவிர மற்ற நேரங்களில் தமிழில் மட்டுமே பேசுவார்.

நல்ல எழுத்தாளர். ஜனசக்தி, நியூ ஏஜ் இதழ்களிலும், தினமணி போன்ற இதழ்களிலும் அவரது கட்டுரைகள் இடம்பெற்றன. ஆங்கிலத்தில் வந்த டெலி பிளாஷ் இதழை தமிழில் ஒலிக்கதிர் என பெயர் சூட்டி அனைவரும் பாராட்டும் வகையில் கொண்டுவந்தார். தொழிற்சங்கம், பொருளாதாரம், இலக்கியம், அரசியல் என்று எல்லாம் நிறைந்ததாக கொண்டுவந்தார்.

தோழர் ஜெகன் நடந்து சென்று கொண்டிருந்தபோது பாதையில் ஒரு தொழுநோயாளி தனது கையில் உணவு பொட்டலம் வைத்துக்கொண்டு பிரிக்க முடியாமல் தவிப்பதை பார்த்து, அதைப் பிரித்துக் கொடுத்து அவர் உண்ண வழிசெய்த மனிதநேய பண்பாளர்.

தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்கள் இருவரை அறிமுகம் செய்த பெருமைக்குரியவர் தோழர் ஜெகன்.

புதுக்கோட்டையில் தங்கம் தனிப்பயிற்சி கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தவர் அனந்தகிருஷ்ணன். மேடையில் பேசத் தயங்கிய அவரை அழைத்து மேடையில் ஏற்றி பேச வைத்தவர் தோழர் ஜெகன். அவர் வேறு யாருமல்ல. தலை சிறந்த பேச்சாளரான குமரி அனந்தன். மற்றொருவர் மேடையில் ஆர்ப்பரித்து முழங்கும் இந்திய அரசின் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் தோழர் ஜெயகாந்தன்.

சங்கத் தலைவர்களை கேள்வி கேட்பதே குற்றம் என்று இருந்தபோது, கேள்வி கேளுங்கள், தயங்காதீர்கள் என்று ஊக்கப்படுத்தி அவர்களது கேள்விகளுக்கும், ஐயங்களுக்கும் விளக்கம் அளித்தார்.

ஒரு கம்யூனிஸ்ட் தனக்கு தெரிந்ததை மற்றவர்களுக்கு கற்பிக்க வேண்டும். அதேபோல் மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணமாக திகழ்ந்தார்.

காரைக்குடியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது தோழர் ஜீவா போன்றவர்களோடு கலை இலக்கிய பெருமன்றம் கண்டார். அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக மாநில செயலாளராக பணியாற்றினார். சோவியத் கலாசாரக் கழகத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டவர்.

பல்லாண்டு காலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினராகவும், தமிழ் மாநில ஏஐடியூசி மாநில செயலாளர்களில் ஒருவராகவும் செயல்பட்டார்.

ஜாதி இல்லை, மதம் இல்லை என்பதை தனது சொந்த வாழ்க்கையில் கடைபிடித்து காட்டிய தலைவர். மிகச்சிறந்த கம்யூனிஸ்டாக, பன்முகத் தன்மை வாய்ந்த தலைவராக, தமிழக அரசியல் தொழிற்சங்க இயக்கங்களில் நீக்கமற நிறைந்திருந்த தோழர் ஜெகன் ஜூன் 7, 2006 இல் தனது சிந்தனையை நிறுத்திக்கொண்டார்.


இரவா புகழ்பெற்ற அனைவரின் நெஞ்சங்களிலும் நிலைத்து நீடிக்கிறார்.

தொடர்புக்கு: **94446 66646**

# ஓடையைத் தூர்வாரக் கோரி கையெழுத்து இயக்கம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மற்றும் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் ஆரல்வாய்மொழி கிளைகள் சார்பில் பல வருடங்களாக துர்நாற்றம் வீசும் ஓடையை தூர்வார கோரி அழகிய நகர் பகுதியில் கையெழுத்து இயக்கம் அருள் குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த கையெழுத்து இயக்கத்தில் ஸ்டாலின், பெருமாள், சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அம்பேத்கர் கலையரங்கம் முன் ஆரம்பிக்கப்பட்டது, இதில் வனஜா, தங்கவேல், பெருமாள், புனிதன் வேலு ஆனந்தம் மற்றும் பல இளைஞர்கள் கலந்து கொண்டு வீடு வீடாக கையெழுத்து வாங்கினர்.

# ஆளுமைகளை ஆர்.எஸ்.எ



-ஆர்.எஸ்.யாதவ்

**நமது மாபெரும் ஆளுமையாளர்களை அபகரிக்க ஆர்எஸ்எஸ் / பாஜகவும் தந்திரமான வழியைப் பின்பற்றுகின்றன. பகத் சிங்கைப் புகழ்ந்து பாடியும், சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றுபவர்கள் போலவும், சுதந்திரத்திற்குப் பிறகு பல பத்தாண்டுகளாகவும் யாரை அவமதித்து வருகிறார்களோ அந்தக் காந்திஜியைக்கூட இப்போதெல்லாம் வழிபடுவதாகக் காட்டிக் கொள்கிறார்கள்.**

**சுவாமி விவேகானந்தர்:** வெகு காலத்திற்கு முன்பே ‘நான் ஒரு சோஷலிஸ்ட்’ என்ற தனது சிறு பிரசுரத்தில் தன்னை ஒரு சோஷலிஸ்டாக, இந்தியாவில் முதன் முதலாக அழைத்துக் கொண்டவர் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தரை அபகரித்துச் சொந்தம் கொண்டாட வேண்டுமானால் ‘சோஷலிச’த்தைத் தாங்கள் நம்பும் கொள்கையாக ஏற்கும் துணிவை அவர்கள் பெற வேண்டும். சோஷலிசத்தை ஏற்க அவர்கள் தயாரா? அப்படி இல்லை என்றால், சுவாமி விவேகாந்தர் ஆதரித்துப் பிரச்சாரம் செய்த கொள்கைகள் மற்றும் தத்துவத்துடன் தங்களுக்கு ஏதோ நெருக்கம் இருப்பதாகச் சொந்தம் கொண்டாட முயற்சிக்கக் கூடாது.

1893 செப்டம்பர் 11ல் அமெரிக்க மண்ணில் மதங்களின் பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது சிங்கம்போல முழங்கி அவர் விடுத்த வலிமையான அழைப்பு, அனைத்து மதங்களின் அடிப்படையான ஒற்றுமையை வலியுறுத்தியது; ஒருவரது சொந்த மதத்தின் பெருமையை மட்டும் வலியுறுத்தி பிற மதங்களைப் பழிக்கும் அன்றைக்கு நிலவிய போக்கைக் கடுமையாக விமர்சனம் செய்தது.

மதங்களின் இணக்கத்தில் ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க.வுக்கு நம்பிக்கை இருக்கிறதா? இல்லை, அவர்களால் அது முடியாது. பிற மதங்களைப் பின்பற்றுபவர்களை, குறிப்பாக முஸ்லீம்களை, இழிவுபடுத்துவதுதான் அவர்களின் மிக அடிப்படையான உத்தி; அதனைத் தங்கள் தேர்தல் ஆதாயத்திற்காக மக்களைப் பிளவுபடுத்தப் பயன்படுத்துகின்றனர்.

இந்தஇடத்தில்சிந்தையைக்கிளரும்சுவாமிவிவேகானந்தரின் வாக்கை நினைக்காமல் இருக்க முடியாது. “ஒரு கிருஸ்துவர், இந்து அல்லது புத்த மதத்தவராக வேண்டாம்; அன்றி ஓர் இந்துவோ அல்லது பௌத்தரோ கிருஸ்தவராக மாற வேண்டாம். ஆனால் ஒவ்வொருவரும் பிறரது நல்லுணர்வை உள்வாங்க வேண்டும், அதே நேரத்தில் தங்கள் நம்பிக்கையின் தனித்துவத்தையும் பாதுகாக்க வேண்டும்; மற்றும் ஒவ்வொருவரும் அவரவர் சொந்த வளர்ச்சி விதிகளின்படி வளர வேண்டும்.

அனைத்து மதங்களும் மிகமிக உயர்வான பண்பு நலன்களுடன் அமைந்த ஆண்களையும் பெண்களையும் உருவாக்கியுள்ளது. இந்த நிதர்சனமான சாட்சியத்தின் முன்னால், எவரொருவராவது தனது சொந்த மதம் தனித்துவமாக நீடிக்கவும், பிற மதங்கள் அழியவும் கனவு காண்பாராகில், அவர்களுக்காக எனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து நான் பரிதாபப்படுகிறேன்.”

**சுவாமி விவேகானந்தரின் இந்த மேன்மையான கருத்தை உள்வாங்கி தன்வயமாக்க பாஜக &ஆர்எஸ்எஸ் தயாரா? சிறுபான்மையினர் மற்றும் தலித்கள்பால் வெறுப்பு அணுகுமுறையைக் கைவிட அவர்கள் தயாரா? இல்லை, அவர்கள் தயாரில்லை.**

ஓர் இஸ்லாமிய நண்பருக்குச் சுவாமி விவேகானந்தர் எழுதிய கடிதத்தை நாம் நினைவுபடுத்திக் கொள்ளலாம். இந்தியாவின் இரு பெரும் சமூகத்தினரிடையே ஒற்றுமையை வலியுறுத்தி அவர் எழுதினார்: “நமது சொந்த தாய் மண்ணிற்காக, இந்துயிசம் மற்றும் இஸ்லாம் எனும் இரண்டு பெரும் முறைமைகளின் சங்கமம், வேதாந்த மூளையும் இஸ்லாமிய உடலும்தான் ஒரே நம்பிக்கை.”

மீண்டும் நாம், சிகாகோவில் நடைபெற்ற மதங்களின் உலக நாடாளுமன்றத்தில் சுவாமி விவேகானந்தர் இந்தியாவின் உண்மையான பிரச்சனையை மிகக் கூர்மையாகச் சுட்டிக் காட்டி உரைத்ததைப் பார்க்கலாம்: “இந்தியாவில் தொண்டை வரள பல லட்சக்கணக்கான மக்கள் உணவுக்காகக் கதறித் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பசியால் துடிக்கும் மக்களுக்கு மதத்தை வழங்குவது பெரும் அவமரியாதை. பசிக்கு உணவு அளிக்க முடியாத கடவுள், எனக்குச் சொர்க்கத்தில் நிலைத்த பேரின்பத்தை அளிப்பார் என்று நான் நம்பவில்லை” என்று அவர் பிரகடனம் செய்தார்.

இன்று, பிரதமர் உட்பட பாஜக ஆர்எஸ்எஸ் தலைவர்கள் தாங்கள் அயோத்தியில் ‘பாவ்ய’ ராம் மந்திர் எழுப்பி வருவதாகத் தொடர்ந்து தற்பெருமை அடித்துக் கொள்கிறார்கள், ஏதோ அப்படிக் கட்டுவது வீதிகளில் வேலைதேடி அலையும் கோடிக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பையும் வாழ்வாதாரத்தையும் அளித்துவிடும் என்பதைப் போல. 120 ஆண்டுகளுக்கு முன்னதாகவே சுவாமி விவேகானந்தர் இந்தியாவுக்குத் தேவைப்படுவது உணவே தவிர தேவாலயங்களோ அல்லது கோயில்களோ அல்ல என உறுதிபட முழங்கினார்.

நம் நாட்டு மக்கள் உயரும் விலைவாசி, வேலைவாய்ப்புக் குறைதல், வருமானம் குறைதல் மற்றும் வேலைஇல்லாத் திண்டாட்டம் கடுமையாக உயர்வது போன்ற பிரச்சனைகள் காரணமாக துன்பங்களில் ஆழ்ந்துள்ளனர். இப்பிரச்சனைகளைக் களையத் தீவிரமான நடவடிக்கை எடுப்பதில் அரசு தோல்வியடைந்துள்ளது. உண்மையில் அரசு பின்பற்றும் கொள்கைகளால் இப்பிரச்சனைகள் மேலும் கடுமையாகின்றன.

எனவே இந்த உண்மையான பிரச்சனைகளிலிருந்து மக்களின் கவனத்தை அவர்கள் அயோத்தியில் பிரம்மாண்ட இராமர் கோயில் மீது திசை திருப்புகின்றார்கள். அவர்களைப் பின்பற்றுவோர் மதுராவில் ‘கிருஷ்ண ஜன்ம பூமி’ என்றும், வாரணாசியில் ‘ஞானவாபி’ என்றும், தாஜ் மகால் மீதே ஆபத்தான உரிமைகளைக் கோரும் அளவு புதிய பிரச்சனைகளைத் தூண்டிவிடுகின்றனர்.



ஆர்எஸ்எஸ் பாஜக கூட்டத்தினர் வேறுபட்ட சமூகங்களுக் கிடையே பிளவை ஏற்படுத்த புதிய பிரச்சனைகளைத் தொடர்ந்து உண்டாக்குவார்கள், தங்கள் பிரச்சாரத்தையும் தொடரவே செய்வார்கள். அவர்கள் சுவாமி விவேகானந்தர் போன்ற நமது பெருமக்களின் புகழைத் திருட்டுத்தனமாக அபகரிக்க குயுக்தியாகக்கூட முயற்சிப்பர். என்ன ஒரு பித்தலாட்டம்!

முஸ்லீம் ஆட்சியின்போது பெருமளவு மதமாற்றம் நடைபெற்ற தாக அபத்தமான அனைத்து வகையான குற்றச்சாட்டுகளையும்

# கம்யூனிஸ்டுகள் மக்கள் சுமையை சுகமான சுமையாக கருதி கடைசி மூச்சு உள்ளவரை சுமப்போம்!

## டி.எம்.மூர்த்தி உரை!

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், ஏஐடியூசி தொழிற்சங்கமும் இணைந்து நடத்திய மேதின பொதுக்கூட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம் தேவிபட்டணத்தில் நடைபெற்றது. தோழர்கள் மோ. ஏசையா, பி.சக்திவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். கட்டிட சங்க தலைவர் நாகையா கொடியேற்றி பேரணியை துவக்கி வைத்தார். பொதுக்கூட்டத்தில் ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,**

நாம் எதற்காக மே தினத்தை கொண்டாடுகிறோம் என்று அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். 133 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முதலாளி வர்க்கத்திடம் நான் 8 மணி நேரம் தான் வேலை செய்வேன் என்று கூறிய நாள்தான் மே தினம்.

முதலாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கை தரம் தாழ்ந்து கொண்டே செல்கிறது இது எதனால் ஏற்படுகிறது என்று 1848 ஆம் ஆண்டு அரசியல் பொருளாதாரத்தை மிகப்பெரிய ஆய்வு செய்த தோழர்கள், பொருளாதார மேதைகள் காரல் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார்கள். உலகத்திலேயே அதிக மொழிகளில் வெளி



யிடப்பட்டுள்ள முதல் நூல் பைபிள், இரண்டாவது நூல் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கைதான். இந்தப் புத்தகம் இன்றளவிலும் அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் உலகத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று 1864 ஆண்டு உலக தொழில் சங்கம் என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். இதன் மூலம் உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளிலும் தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்கள். இந்த சங்கம் வைத்த முதல் கோரிக்கை தான் தொழிலாளி என்றால் 8 மணி நேரம் வேலை 8 மணி நேரம் உறக்கம் 8 மணி நேரம் இந்த சமூகத்தோடு சேர்ந்து வாழ்வதற்கு என்று தொழிலாளிகள் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்பதுதான். இந்த முழக்கத்தை முன்னெடுத்து முதல் போராட்டமாக 1871 பாரிசில் பெரும் புரட்சி நடைபெற்று தோற்கடிக்கப்பட்டது.

1886 மே மாதம் 1ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் கட்டிட தொழிலாளர்கள், பஞ்சாலை தொழிலாளர்கள், மற்றும் அனைத்து தொழிலாளர்களும் ஒன்றிணைந்து மிகப்பெரிய பேரணியை நடத்தினார்கள். அந்தப் பேரணியில் காவல்துறையினர் நான்கு பேரை சுட்டுக் கொன்றார்கள். நான்கு பேரை எதற்காக கொன்றார்கள் என்று ஒரு மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களால் முன்னெடுத்து நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்து சுமார் 5 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அதில் ஒருவர் மர்மமான முறையில் சிறையிலேயே உயிரிழந்தார். மீதமுள்ள நான்கு பேரையும் தூக்கிலிட்டார்கள்.

அதில் ஒரு தொழிலாளி தூக்கிலிடும் போது கூறிய வார்த்தைகள்...


நீ என் குரல்வளையை நெரித்து அதன் மூலம் ஓர் அமைதியை ஏற்படுத்திவிடலாம் என்ற என்னத்தில் என்னை கொள்ளலாம், ஆனால் இதுவே ஒரு பெரும் ஓசையாக உன் காதை கிழிக்கும்! அந்த நாள் நிச்சயமாக வரும், அன்று தொழிலாளர் வர்க்கம் வெற்றி பெறுவோம்!!

என்று நம்பிக்கையோடு கூறினான். இந்த வார்த்தைகள் சிக்காகோ நகரில் இந்த நான்கு பேருக்கு நினைவாக அமைக்கப்பட்டுள்ள சிலையின் கீழே எழுதப்பட்டுள்ளது.

இந்தியாவில் சென்னையில்தான் முதன் முதலில் 1923ஆம் ஆண்டு சிங்காரவேலர் மேதினத்தை கொண்டாடினார். நாம் தற்போது நூற்றாண்டு பொதுக்கூட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.


1945 மே மாதம் ஒன்றாம் தேதி நடைபெற்ற மேதின கூட்டத்தில் புரட்சியாளர் ஸ்டாலின் உரையாற்றுகிறார். அப்போது நாம் பின் வாங்குவதற்கு இனி ஒரு அங்குலம் கூட இடம் இல்லை, அதனால் முன்னேறி தாக்குங்கள் என்று கூறினார். முன்னேறினார்கள், தாக்கினார்கள், வென்றார்கள். ரஷியா மட்டும் வெல்லவில்லை, இந்த உலகத்தின் மனிதகுலமே வென்றது. உலகத்தில் மனிதகுலத் திற்கு எதிரான பாசிச சக்தி தோற்கடிக்கப்பட்டது. இடியமின், முசோலியின் போன்ற மக்களால் தோற்கடிக்கப்பட்ட பாசிச சக்திகள், சர்வாதிகாரிகள் வரலாற்றில் இடம்பெற முடியாது. ஆகவேதான் மக்கள் விருப்பத்திற்கும் நலன்களுக்கும், நியாயமான கோரிக் கைகளுக்கும் எதிராக ஒரு ஆட்சி நடத்தி வென்றுவிட முடியாது. அதற்கு எடுத்துக்காட்டாக தான் தற்போது இலங்கையில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. கொஞ்ச நாளைக்கு முன்புவரை ராமஜென்ம பூமி என்று மக்களைப் பிளவுபடுத்தி கொண்டிருந்தது. தற்போது காசி, தாஜ்மஹால், மதுரா கிருஷ்ணர் கோவில் என்று மக்களை பிளவுபடுத்தி கொண்டே இருக்கக்கூடிய ஒரு மதவெறி கும்பல் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்திற்கு வந்து இருந்தார். அப்போது மோடி இருந்த அதே மேடையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் தமிழ் நாட்டிற்கு தரவேண்டிய ஜிஎஸ்டி வரி இழப்பீட்டுத் தொகை சுமார் 20 ஆயிரம் கோடி கொடுக்க வேண்டும். தமிழ் மொழி ஒரு பிரதான மொழி, தமிழ் மொழியை அலுவல் மொழியாக மாற்ற வேண்டும் என்று பேசினார்.



**விஞ்ஞான தொழில்நுட்ப புரட்சியின் பாய்ச்சலை மனிதகுலம் முழுவதற்கும் பயன்படுத்தி முன்னேற்றம் அடைவது விஞ்ஞான சோசலிச சமுதாயத்தில் மட்டுமே சாத்தியமாகும்.**
**– ஏங்கல்ஸ்**

# ள அபகரிக்கும் ல். - பா.ஜ.க.




அவர்கள் கூறுவார்கள். அந்த அபத்தங்களுக்கு மாறாக, “எதிர்கால பாரதம்“ என்ற தனது கட்டுரையில் சுவாமி விவேகானந்தர் எழுதுவார் : ”முகமதிய ஆட்சியை ஏழைகளும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒரு விடுதலை அனுபவமாக உணர்ந்தனர். அப்படித்தான் நம் மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர் முகமதியர்கள் ஆனார்கள். இந்த மக்கள் அனைவரும் வாள் முனையிலும் பயமுறுத்தியும் கொண்டு செல்லப்பட்டார்கள் என நினைப்பது வெறும் பைத்தியக்காரத்தனம்.”

**உச்சத்தில் வெறுப்புப் பிரச்சாரம் :** ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக சங்பரிவார் கூட்டம் மற்ற மதத்தைப் பின்பற்றுபவர்கள் குறிப்பாக முஸ்லீம்களுக்கு எதிராக வெறுப்புப் பிரச்சாரத்தை வெட்கமின்றி நடத்தி வருகின்றனர். அவர்களுடைய சீட கோடிகள் ‘தர்மத்தின் மாநாடு’ என்ற பெயரில் 2021 டிசம்பர் 17 முதல் 20வரை ஹரித்துவாரில் ஒரு கூட்டமும், 2022 ஜனவரி 30ல் பிரயாக்ராஜ் இடத்தில் மற்றொன்றும் நடத்தப்பட்டன:

அதன் ஒரே நோக்கம் மத நம்பிக்கை அடிப்படையில் மக்களிடையே பகைமை மற்றும் பிளவுபடுத்துவதுதான். ஹரித்துவாரில் பேசியவர்களின் விஷமத்தனமான மற்றும் வகுப்புவாத ஆத்திரமூட்டும் பேச்சுகளைத் தவிர முஸ்லீம்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என அறைகூவல் அழைப்பும் விடுத்துள்ளனர். பிரயாக்ராஜில் பேசியவர்கள் இந்தியா ஏற்கனவே ’இந்து ராஷ்ட்டிராதான்’ எனப் பிரகடப்படுத்தினர்.

ஏதாவது பிற மதத்தைச் சேர்ந்த சில அமைப்புகள் அத்தகைய சொற்பொழிவுகளையும் அறிவிப்புகளையும் வெளியிட்டிருந்தால், காவல் துறை மற்றும் தேசியப் புலனாய்வு முகமை இந்நேரம் அவர்களைத் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்திருக்கும். ஆனால் ‘தர்ம சன்சத்’ என்று அழைத்துக் கொள்பவர்கள் ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவுக்கு நெருக்கமானவர்கள் ஆயிற்றே. எனவே அவர்களுக்கு ‘மேலிட’ப் பாதுகாப்புக் கிடைக்கிறது. இப்படிப்பட்ட நடத்தையையும் கொள்கையையும் இன்னமும் பிரச்சாரம் செய்து ஆட்டம் போட முயற்சி செய்யும் ஆர்எஸ்எஸ் பாஜக கும்பல், சுவாமி விவேகானந்தர் மற்றும் அவர் கொள்கைகளை மதித்துப் போற்றுகிறோம் என்பது ஏமாற்று பொய் பித்தலாட்டம் தவிர வேறில்லை.

**காந்திஜி:** ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜக தேசத்தின் சூழ்நிலையை நஞ்சாக்கி, முஸ்லீம்கள் மற்றும் இதர சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை நடத்தி வருகின்றன. அவர்கள் காந்திஜியையே அபகரிக்க முயல்கிறார்கள்; மகாத்மா காந்திஜி கொல்லப்பட்டது வேறு யாராலும் அல்ல, இந்துத்துவக் கோட்பாட்டைப் பின்பற்றும் ஒருவராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்துக்களுக்கு இந்தியாவின் மீது சிறப்பு உரிமை இருப்பதாக ஆர்எஸ்எஸ் கோருவது போல அல்லாமல், காந்திஜி எந்த மத நம்பிக்கை உடையவரானாலும் மக்கள் அனைவருக்கும் தேசம் மற்றும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்திலும் சம உரிமை இருப்பதாக நம்பினார். காந்தியின் நீதிபோதனை சார்ந்த பார்வை மற்றும் அவர் அரசியலில் பின்பற்றியது இரண்டும் இந்த அனைவரையும் உள்ளடக்கிய இந்தியக் கருத்தாக்கத்தை உருவகப்படுத்தியது. இது தொடர்பாக 1945ல் பதிப்பிக்கப்பட்ட அவரது கட்சியின் “ஆக்கபூர்வமான திட்டம்” பற்றிய சிறு பிரசுரத்தை நாம் பரிசீலிக்கலாம். அந்தத் திட்டத்தின் முதல் அம்சம் “வகுப்பு ஒற்றுமை”.

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய சில மாதங்களுக்குப் பிறகு 1915 ஏப்ரலில் வேறுபட்ட பல்வேறு மதப் பின்னணியிலிருந்து வந்த மக்களிடையே டெல்லியில் ஒரு கூட்டத்தில் உரையாற்றினார்.

காந்தியை உருவாக்கிய அவரது குருநாதர் கோபால கிருஷ்ண கோகலே புனாவில் சில வாரங்களுக்கு முன்புதான் இறந்தார். காந்தி கூறினார் : “கோகலே ஓர் இந்து, ஆனால் சரியான முன் மாதிரி இந்து. ஒரு முறை இந்து சன்னியாசி ஒருவர் அவரிடம் வந்து ஒரு யோசனையை முன் வைத்தார்; அது, இந்து அரசியல் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதுடன், முகமதியர்களை அடக்கி வைக்கும்; தன்னுடைய யோசனையைப் பல்வேறு மதரீதியான காரணங்களுடன் விரிவாக முன் வைத்து வற்புறுத்தினார்.

பின்வரும் வார்த்தைகளில் கோகலே பதில் கூறினார்: “ஓர் இந்துவாக இருக்க வேண்டுமானால், நீங்கள் விரும்புவதுபோல நான் நடந்தே ஆக வேண்டும் என்றால், தயவு செய்து, ‘நான் ஓர் இந்து அல்ல’ எனப் பதிப்பித்து வெளியிடுங்கள் !” என்றார்.

**காந்திஜி கொல்லப்பட்ட சில வாரங்களில் அவரைப் பின்பற்றுவோர் குழு ஒன்று அடுத்துச் செய்ய வேண்டியது என்ன என்பதை விவாதிக்கச் சேவா கிராமத்தில் சந்தித்தது. இந்த விவாதங்களில் ஆர்எஸ்எஸ் அமைப்புக் குறித்த அம்சமும் வந்தது; அது, காந்திஜியைக் கொன்ற கொலையாளி கோட்ஸே ஓர் ஆர்எஸ்எஸ் உறுப்பினர் என்பதால் மட்டுமே அல்ல; ஆர்எஸ்எஸ் அமைப்பின் சர்சங்க்சாலக் (முதன்மைத் தலைவர்) கோல்வால்கர், காந்திஜி கொலைக்கு அடுத்த வந்த சில நாட்களில் விஷமத்தனமான வகுப்புவாத உரைகளை நிகழ்த்தி இருந்தார் என்பதன் காரணத்தாலேயே சேவாகிராமக் கூட்டத்தில் விவாதத்திற்கு வந்தது.**

1948 மார்ச் மாதம் சேவாகிராமத்தில் நடைபெற்ற காந்தியர்கள் கூட்டத்தில் வினோபா பாவே உணர்ச்சி மேலிட மனம் வெதும்பிக் கூறினார்: “நான் பிறந்த மராட்டிய பிராமண வகுப்பு இப்போது மறைந்து விட்டாலும், என் சக சாதியினர் செல்வாக்கில் இருக்கும் ஓர் அமைப்பு ஆழமான நம்பிக்கை இன்மைக்கு ஆளாகி விட்டது”. ஆர்எஸ்எஸ் அமைப்பை விமர்சித்துப் பாவே கூறினார்:

“அந்த அமைப்பு நாட்டில் குறுக்கும் நெடுக்குமாக ஆழமாக வேர் ஊன்றி பெரும் திறனுடன் பரவி உறுதியாக நிற்கிறது. அதன் குணம் முழுமையாகப் பாஸிசமாக உள்ளது. அந்த அமைப்பின் உறுப்பினர்கள் மற்றவர்களை நம்புவதில்லை. காந்திஜியின் கொள்கை உண்மையைச் சார்ந்து இருக்கிறது; இந்த நபர்களின் கொள்கை உண்மை அல்லாத பொய்ம்மையைப் பற்றி நிற்கிறது. இந்தப் பொய்ம்மை அவர்களின் உத்தி மற்றும் அவர்களின் தத்துவத்தின் பிரிக்க முடியாத ஒருங்கிணைந்த ஒரு பகுதி”.

“ஆர்எஸ்எஸ் அமைப்பின் இயங்குமுறை எப்போதும் நம்முடைய முறைக்கு எதிரிடையானது. நாம் சிறைக்குச் சென்றபோது, அவர்களது கொள்கை வெள்ளை ஆட்சியின் இராணுவம் அல்லது போலீஸ் படையில் சேர்வதாக இருந்தது. இந்து முஸ்லீம் கலவரம் நடக்கக்கூடிய எந்த இடத்திலும் எப்போதும் அவர்கள் விரைவாக வந்து குதித்து விடுவார்கள். இவர்களது இந்நடவடிக்கைகளில் எல்லாம் அந்த நாளின் ஆட்சி தனக்கு அனுகூலமாக இருக்கக் கண்டது; வெள்ளை ஆட்சி அவர்களுக்கு ஆதரவு தந்து உற்சாகப்படுத்தியது; இப்போது நாம் அதன் பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்” என்றார் வினோபா பாவே.

தமிழில்: **நீலகண்டன்**

---

அதுமட்டுமல்ல தமிழக முதல்வர் ஒன்றிய அரசு என்று பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டது. ஒன்றியம் என்று நாம் ஏன் சொல்கிறோம் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தியா விடுதலை அடைந்தபோது 566 சிறுசிறு நாடுகளாக பிரிந்து இருந்தது அந்த சிறுசிறு நாடுகள் நாங்கள் இந்தியாவுடன் இணைந்து கொள்கிறோம் என்று தான் கூறி இணைக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக ஐதராபாத் நிஜாம் இந்தியாவுடன் இணைய மாட்டேன் என்று சொன்னார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தான் ஆயுதம் தாங்கிய புரட்சியை நடத்தி 4000 கிராமங்களை விடுவித்து விவசாய தோழிலாளர்களிடம் கொடுத்து இந்தியாவுடன் இணைத்தது.

கோவாவில் போர்ச்சுகீஸ்காரர்கள் வெளியேற மறுத்த போது கம்யூனிஸ்ட் கட்சிதான் போராடி அவர்களை வெளியேற்றி இந்தியாவுடன் இணைத்தது.

புதுச்சேரியை பிரெஞ்சுக் காரர்களிடம்மிருந்து விடுவிக்கும் போது நம்முடைய தலைவர் வா.சுப்பையா அவர்களுக்கு மகாத்மா காந்தி அவர்கள் கடிதம் எழுதினார். பிரெஞ்சு இந்தியாவின் விடுதலை உங்கள் கையில் பத்திரமாக இருக்கிறது என்பதால் நான் நிம்மதியாக உறங்குகிறேன் என்று. புதுச்சேரியை விடிவித்தவர்களும் நாம்தான். இப்படி பல நாடுகளை ஒன்று சேர்த்து தான் இந்தியா என்ற ஒரு நாட்டை உருவாக்கினோம். அதனால்தான் ஒன்றிய அரசு என்று முதல்வர் கூறினார்.

ஆனால் ஆளும் பிஜேபி அரசு ஒரே நாடு, ஒரே மதம், ஒரே கடவுள், ஒரே மொழி, ஒரே கொடி, ஒரே கட்சி, ஒரே பிரதமர் அதுவும் நாங்கள்தான் என்று ஆட்சி செய்ய விரும்புகிறது. அழகழகாக பல விதமான வண்ணங்களில் பூத்துக்குலுங்கும் பூந்தோட்டமாக தற்போது இந்தியா உள்ளது. ஆனால் ஆர்எஸ்எஸ் ஒரே கலர் அதுவும் காவி கலர் இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று ஜனநாயகத்தினுள்ளே ஒரு சர்வாதிகாரத்தை செலுத்துகிறது.

பிஜேபி இந்தியா முழுவதும் வெற்றி பெற்று வருவதாக கூறுகிறார்கள். ஆனால் இந்தியா முழுவதும் 37% மட்டுமே வாக்குகள் பெற்று உள்ளார்கள். மீதமுள்ள 63% பிஜேபிக்கு எதிராக வாக்குகள் பதிவாகியுள்ளது.

ஜனசக்தி பத்திரிகையை அனைவரும் கண்டிப்பாக வாங்கி படிக்க வேண்டும், அப்போதுதான் இதுபோன்ற பிரச்சனைகளை நாம் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியும். சமூக வலைதளங்கள் மூலம் நம் முடிவுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல பயன்படுத்த வேண்டும். நமது கட்சியில் அதிகமாக இளைஞர்களையும் மாணவர்களையும் கொண்டு வரவேண்டும்.

நமது கட்சியின் மாநில மாநாடு வருகின்ற ஆகஸ்ட் மாதம் 6, 7, 8, 9 ஆகிய தேதிகளில் திருப்பூரில் நடைபெற இருக்கிறது. 9 ஆம் தேதி அன்று மிகப்பிரம்மாண்டமான செந்தொண்டர் படை பேரணி நடைபெற இருக்கிறது. தொழிலாளர்கள் அனைவரும் சிவப்பு உடை அணிந்து கண்டிப்பாக பங்கேற்க வேண்டும். தொழிலாளர்களே ஒன்று சேர்வோம் திருப்பூரை சிவக்க வைப்போம்.

பொதுக்கூட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ப.சிங்காரவேலு ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரகனி உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். ராமகிருஷ்ணன் நன்றியுரை ஆற்றினார்.

# தமிழக வானிலை ஆராய்ச்சி நிலையத்தை நவீனப்படுத்துக!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:


மாறிவரும் பருவ கால சூழலை காலத்தில் எச்சரிக்க, வானிலை ஆராய்ச்சியில் அதி நவீன நுண் கருவிகளைப் பயன்படுத்திட தமிழக அரசு அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

உலக வெப்பமயம் உயர்ந்து வரும் நிலையில் பனிமலைகள் உருகி கடல் நீர்மட்டம் உயர்ந்து வருவதாக கடந்த பல ஆண்டுகளாக எச்சரிக்கை செய்யப்பட்டு வருகிறது. இதனால் கடந்த காலத்தில் பருவகாலங்கள் முற்றாக மாறி எதிர்பாராத இடர்பாடுகளை ஏற்படுத்தி வருகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் இயற்கை பேரிடர்கள் கூடுதலாவது மட்டுமல்ல, வழக்கத்திற்கு மாறான நிலையில் நாம் எதிர்பார்க்காத சூழலில் கடும் பாதிப்பு அடைந்து வருகிறோம்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் சென்னை கடுமையாக பாதித்தது. கஜா புயல் பாதிப்பால் இரண்டு ஆண்டுகளாக தென்னை உற்பத்தி பெருமளவில் பாதித்தது. கடந்த ஆண்டு ஏற்பட்ட பருவம் தவறிய மழையால் குருவை மற்றும் சம்பா பெருமளவு பாதித்தது. நடப்பாண்டு கூட கோடை பயிரான பருத்தி கூடுதல் அளவில் பயிரிடப்பட்டு வளிமண்டல சுழற்சியின் மழையினால் பெரும் பாதிப்படைந்துள்ளது. இதில் எள், நிலக்கடலை, உளுந்து ஆகியவைகளும் பாதித்துள்ளன. எதிர்வரும் காலத்தில் சூறாவளி காற்றால் பாதிப்பு வரும் நிலையும் உள்ளது. இப்படியான எதிர்பாரா இயற்கை பேரிடர் பாதிப்பால் விவசாயிகள் பொதுமக்கள் வாழ்வு நிலை பாதித்து பொருள் இழப்பு அடைந்து வரும் துன்பம் தொடர்கிறது. இதற்காக அரசுகள் ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய் பேரிடர் நிதியாக செலவிட வேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழக வானிலை ஆராய்ச்சி நிலைய கருவிகளை கொண்டு எதிர்வரும் இயற்கை பேரிடரை காலத்தில் அறுதியிட்டுக் கண்டறிய இயலவில்லை. ஒரு நாள் முன்னர்தான் உறுதியாக அறிய முடிகிறது. ஆனால், அமெரிக்காவில் நாசா மூன்று மாதத்திற்கு முன்னரே வானிலை நிலையை உறுதியாக அறிவிக்கிறது.

எனவே குறைந்தபட்சம் ஒவ்வொரு பருவ காலம் தொடங்கும் முன் எதிர்வரும் வானிலை சூழலை கண்டறிந்து காலத்தில் விவசாயிகளுக்கு அறிவிக்கும் நிலையில் வானிலை ஆராய்ச்சிக்கு அதி நவீன நுண்தொழில்நுட்ப கருவிகளை பெற்று தமிழக அரசு பயன்படுத்திட உடன் அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



**லாப நோக்கு ஒன்றையே குறியாகக் கொண்ட முதலாளித்துவம் உழைப்புச் சக்தியை விலை பொருள் ஆக்கி மூலதனம் குவிப்பதால் வேலையில்லா திண்டாட்டம் வேலையில்லா பட்டாளம் நிரந்தரமாகிறது. - மார்க்ஸ்**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# இடைக்கமிட்டி மாநாடுகள்

**மணிகண்டம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மணிகண்டம் ஒன்றிய 4வது மாநாடு பேரணி பொதுக்கூட்டம் சோமரசம்பேட்டை வாசன் சிட்டியில் இருந்து மணிகண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எம்.ஆர்.முருகன் தலைமையில் நடைபெற்றது. பேரணியை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.சிவா துவக்கி வைத்து உரையாற்றினார்.

கொட்டும் மழையில் நடந்த பேரணியில் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பங்கேற்று ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் தூய்மைப் பணியாளர் சங்க கொடியேற்று விழாவில் கொடியேற்றி சிறப்பித்தார். உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட பொறுப்பாளர் எம்.சுப்பிரமணி பெயர் பலகையை திறந்து வைத்தார்.

பொதுக் கூட்டத்திற்கு அல்லித்துறையில் இருந்து எஸ்.முத்துலெட்சுமி தலைமையில் ஜோதி கொண்டுவரப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் இரா.முத்தரசன் சிறப்புரை நிகழ்த்தினார். முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் மாநகர் மாவட்ட செயலாளர் ஏ.கே.திராவிடமணி, மணிகண்டம் ஒன்றிய செயலாளர் சி.செல்வகுமார், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் க.சுரேஷ், சிபிஐ மாவட்ட பொருளாளர் ஜான்பால், நிர்வாக குழு உறுப்பினர் செக்கி சண்முகம், இடைக் கமிட்டி செயலாளர்கள் பார்வதி, அஞ்சுகம் மற்றும் வீரமுத்து, மாணவர் மன்ற செயலாளர் இப்ராஹிம், இளைஞர் மன்ற செயலாளர் செல்வக்குமார் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் பேரணி பொதுக்கூட்டத்தில் பங்கேற்றனர். எஸ்.முத்தழகு நன்றி கூறினார்.




**வாசுதேவநல்லூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஒன்றிய மாநாடு டி.ராமநாதபுரம் பி.பொன்னுச்சாமி நினைவு அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் தி.சுப்பையா, ஒன்றியக் குழு உறுப்பினர் பொ.ரவிக்குமார், புளியங்குடி நகராட்சி மன்ற உறுப்பினர் எஸ்.பாக்கியம் ஆகியோர் தலைமை வகித்தனர். மூத்த தோழர் எஸ்.சித்திரபுத்திரன் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். மாநில துணைச் செயலாளரும் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் அரசியல் விளக்க உரையாற்றினார்.

ஒன்றிய செயலாளராக பா.வேலு, ஒன்றிய துணைச் செயலாளர்களாக பி. முருகன், த.பாலவிநாயகம் பொருளாளராக எஸ்.சீனிவாசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ப.சிங்காரவேலு, ஏ.பரமசிவம், மாவட்ட குழு உறுப்பினர்கள் இரா.சமுத்திரக்கனி, எம்.எஸ்.கிட்டப்பா, எஸ்.சமுத்திரம், பா.கந்தம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வேடசந்தூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 13வது வேடசந்தூர் ஒன்றிய மாநாடு எழுச்சிகரமாக கொடியேற்றத்துடன் தொடங்கியது. இம்மாநாட்டை மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் துவங்கி வைத்தார். மாநில குழு உறுப்பினர் ஏ.எம். மணி, மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்ட துணைச்செயலாளர் பி.ஆர்.சுதந்திரதேவி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சிவக்குமார், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.வினோத்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். வேடசந்தூர் ஒன்றியச் செயலாளராக ஜி.எஸ். முத்துச்சாமி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.




**ஆத்தூர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 13வது ஆத்தூர் ஒன்றியம் மாநாடு கொடியேற்றத்துடன் தொடங்கியது, இம்மாநாட்டை மாநில நிர்வாககுழு உறுப்பினர் எஸ்.காசி விசுவநாதன் துவங்கி வைத்தார், மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.ராஜாமணி, எஸ்.ஜெயமணி, மாவட்டக்குழு உறுப்பினர் க.பாண்டி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.வினோத்குமார் வாழ்த்துரை வழங்கினார். ஆத்தூர் ஒன்றியத்தின் ஒன்றியக்குழு செயலாளராக ஜெ.இலக்கியராஜ் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

**சங்கரன்கோவில் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா மாநாடு கரிவலம்வந்தநல்லூரில் தோழர் தா.பாண்டியன் நினைவு அரங்கத்தில் சங்கரன்கோவில் நகர செயலாளர் எஸ்.ஆறுமுகம், தாலுகா குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், கிளைச் செயலாளர் ஏ.பழனிமுருகன், ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர், எஸ்.சித்திரபுத்திரன் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார். ஏஐடியுசி மாநில பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி அரசியல் விளக்க உரையாற்றினார். தென்காசி மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கி.பரமசிவம், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தாலுகா செயலாளராக ஏ.கனகராஜ், துணை செயலாளர்களாக ஆர்.மனுவேல்ராஜன், ஏ.பழனிமுருகன், பொருளாளராக எஸ்.வேலாயுதம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

மாநாட்டில் விசைத்தறி கைத்தறி தொழிலாளர்கள் தயாரிக்கும் ஆடைகளுக்கு ஜிஎஸ்டி வரியை ரத்து செய்யவும், விவசாயத்திற்கு பயன்படுத்தும் உரங்கள் விலையை கட்டுப்படுத்த கோரியும், மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை 100 நாளில் இருந்து 200 நாட்களாக உயர்த்தவும், பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நங்கவள்ளி** : இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நங்கவள்ளி ஒன்றியம் 27வது மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு கட்சியின் ஒன்றிய செயலாளர் பழ. ஜீவானந்தம் தலைமை வகித்தார். மாநில துணை செயலாளர் மு. வீரபாண்டியன் துவக்கவுரை ஆற்றினார். மேலும் ஜனசக்தி பொறுப்பாளர் லெனின் வாழ்த்துரை வழங்கினார். நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறும் முறைகேடுகளை தடுக்க வேண்டும், ஹான்ஸ், குட்கா போன்ற புகையிலை பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**சேலம் ஒன்றியம் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேலம் ஒன்றிய 5வது மாநாடு வேடகத்தாம்பட்டியில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.பி.கே.ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். மாநாட்டுக் கொடியினை மூத்த தோழர் ஏ.கோவிந்தசாமி ஏற்றி வைத்தார். ஒன்றிய துணைச் செயலாளர் கே.சேகர் வரவேற்று பேசினார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் ஏ.மோகன் சிறப்புரையாற்றினார். ஊராட்சி ஒன்றிய துணைத்தலைவர் அல்லி ஜெயராமன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் இ.ரவி, உ.கந்தசாமி, எஸ்.கலையரசி சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செயலாளராக வி.ஜெயராமன், துணைச் செயலாளர்களாக எஸ்.பி.கே.ராமச்சந்திரன், எஸ்.தியாகராஜன், பொருளாளராக ஏ.கோவிந்தசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டார்.

சேலம் ஒன்றியம் எருமாபாளையம் ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலையில் காமராஜர் சிலை அருகில் உள்ள பிரிவு சாலையில் மேம்பாலம் அமைக்க வேண்டும்.

சேலம் ஒன்றியம் சன்னியாசிகுண்டு ஊராட்சியில் தேசிய நெடுஞ்சாலையில் பிரிவு சாலையில் மேம்பாலம் அமைக்க வேண்டும். சேலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான சாலை, கழிப்பிடம், சாக்கடை கால்வாய், குடிநீர், தெருவிளக்கு ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டை நிறைவு செய்து மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் உரையாற்றினார்.



**மதுரை மாநகர் தெற்கு**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை தெற்கு பகுதி குழு மாநாடு பழங்காநத்தம் கே.எஸ்.குமார் நினைவகத்தில் தாணுமலையான், பாலன், பாலாஜி தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், பா.ராஜலெட்சுமி, முன்னால் மாநகர் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஏஐடியூசி சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.கே.ராஜன், தபால் ஊழியர் சம்மேளத்தின் சேர்முகபாண்டியன், பகுதி பெறுப்பாளர் இரா.முருகன், வடக்கு பகுதி செயலாளர் இருளாண்டி, மேற்கு பகுதி செயலாளர் ஜனசக்தி என்.ஜீவா, இளைஞர் பெருமன்ற செயலாளர் பழனி முருகன் உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

தெற்கு பகுதி குழு செயலாளராக பா.சுமதி, துணைச் செயலாளராக கு.கணேசன், பொருளாளராக முத்துச்செல்வி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ஓமலூர் – காடையாம்பட்டி**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஓமலூர் – காடையாம்பட்டி – தாரமங்கலம் இணைந்த ஒன்றிய 28வது மாநாடு ஓமலூரில் எஸ்.ஆர்.பெருமாள், கே.கண்ணையன் நினைவு அரங்கத்தில் நடைபெற்றது. அண்மையில் காலமான முன்னாள் ஒன்றிய செயலாளர் கே.கண்ணையன் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் கே.ரங்கநாதன் தலைமை வகித்தார். வி.ஆர். நடராஜன் வரவேற்று பேசினார்.

மாநாட்டை வாழ்த்தி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், எஸ்.தனக்கோட்டி, மாவட்டக்குழு உறுப்பினர் பா.தினேஷ் ஆகியோர் பேசினார்கள். மாவட்ட செயலாளர் ஏ.மோகன் சிறப்புரையாற்றினார்.

ஒன்றிய செயலாளராக எஸ்.எம்.மதியழகன், துணைச் செயலாளராக என்.மோகன்ராஜ், பொருளாளராக பி.வசந்தி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஓமலூர்காடையாம்பட்டிஒன்றியத்தில் கூட்டுறவு பால் சொசைட்டிகளில் விவசாயிகளுக்கு பணம் ஒவ்வொரு மாதமும் நிலுவையில்லாமல் வழங்க வேண்டும்.

ஓமலூர் பேருந்து நிலையத்தில் காய்கறி சந்தையும் செயல்படுகிறது. பேரூராட்சி நிர்வாகம் தினசரி பேருந்து நிலையத்தையும், சுற்றியுள்ள பகுதிகளையும் சுகாதார சீர்கேடில்லாமல் சுத்தம் செய்ய வேண்டும்.

ஓமலூர் – காடையாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிராமப்புறங்களுக்கும் அரசு மினி பேருந்துகளை இயக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




**பரமக்குடி நகர் :** பரமக்குடியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 31 வது மாநாடு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் என்.கே.ராஜன், வெங்கடசாமி, ராஜீ ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்க உரையாற்றினார். மாநாட்டுக் கொடியினை நகர் நிர்வாகக்குழு உறுப்பினர் கே.கே.கோவிந்தன் ஏற்றி வைத்தார்.

நகர செயலாளர் என்.எஸ்.பெருமாள் இயக்க ஸ்தாபன அறிக்கையை முன் வைத்துப் பேசினார்.

நகர செயலாளர் கே ஆர் சுப்பிரமணியன், துணைச் செயலாளர்கள் ஜே ஆர் ஹரிகரன், எம் கோட்டைச்சாமி, பொருளாளராக கே கே ராமதாஸ் ஆகியோர் ஒரு மனதாக தேர்வு செய்யப் பட்டனர். மாவட்டச் செயலாளர் எஸ் முருகபூபதி நிறைவுரையாற்றினார்.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கே சுப்பிரமணியன், கடலாடி கருணாநிதி, ஜீவா, பார்த்திபன், கலைமணி, உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

கைத்தறி நெசவுத் தொழிலை கடுமையான முறையில் பாதித்து வரும் ஜிஎஸ்டி வரி விதிப்பை முற்றிலுமாக நீக்க வேண்டும்

அதே போல விஷம் போல் ஏறி வருகின்ற பருத்தி பட்டு நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

பரமக்குடி தரைப் பாலம் வழியாக எஸ்எஸ் கோவில் வரை உள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த வைகையாற்றில் கிழக்குப் பகுதியில் வண்டியூர் அருகில் மேம்பாலம் ஒன்றை அமைத்திட வேண்டும்.

வைகை ஆற்றின் வடக்கு மற்றும் தெற்கு கரைகளில் உள்ள புறநகர் வழிச்சாலையில் மின்விளக்குகள் அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மதுரை கிழக்கு:** சி.பி.ஐ மதுரை கிழக்கு தாலுகா 25 வது மாநாடு, மேனாள் மாநில செயலாளர் தா.பாண்டியன், தேசிய குழு உறுப்பினர் பி.சேதுராமன், தாலுகா பொருளாளர் எம்.அய்யனார் நினைவரங்கில், மாவட்ட குழு உறுப்பினர் பி.கௌரி தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் பிச்சை கொடி ஏற்றினார்.

மதுரை மாவட்ட புறநகர் செயலாளர் பா.காளிதாஸ் மாநாட்டு துவக்கவுரை ஆற்றினார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் க.மெய்யர் நிறைவுரை செய்தார். இதனைத் தொடர்ந்து கிழக்கு தாலுகா செயலாளர் பி.பூமிநாதன் வேலையறிக்கையினை வாசித்தார். ஒன்றிய செயலாளர் பி.முத்துவேல் வாழ்த்துரை வழங்கினார். சிதம்பரம்பட்டி கிளை செயலாளர் பி.ராமேஷ்வரி நன்றியுரை கூறினார்.

மத்திய, மாநில அரசுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியத்தை நாள் ஒன்றுக்கு ரூ.500 வழங்கி, வேலை நாட்களை அதிகப்படுத்தவும், புறம்போக்குகளில் குடியிருப்போர்களுக்கு உடனடியாக பட்டா வழங்கிட வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




**தளி:** கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதி தளி பகுதி மாநாடு தளியில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்கமாக தளி பேருந்து நிலையம் அருகில் மாநில துணை செயலாளர் மு. வீரபாண்டியன் செங்கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் கோவிந்த் தாக்கல் செய்தார். ஒன்றிய செயலாளராக மாவட்ட கவுன்சிலர் குமார், துணை செயலாளர்களாக ஒன்றிய கவுன்சிலர் விஜி, அம்ரீஷ், பொருளாராக நஞ்சப்பா தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியாக தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தியாகங்களும்

11ம் பக்கத் தொடர்ச்சி >>

>> 10ம் பக்கத் தொடர்ச்சி

வரலாற்றும் குறித்து பேசினார். இந்த மாநாட்டில் மாநில குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**தொண்டாமுத்தூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டாமுத்தூர் ஒன்றிய மாநாடு வேடபட்டி குரும்பபாளையம் கருப்பராயன் கோவில் மண்டபத்தில் நாகராஜ் கணேசமூர்த்தி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளர் வி. எஸ். சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜே.ஜேம்ஸ் ஆகியோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினார். தொண்டாமுத்தூர் விவசாயிகள் நிறைந்த பகுதி, முக்கிய தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது. விவசாயிகள் தங்களது விளை பொருள்களை பாதுகாக்க முடியாமல் அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். எனவே இந்தப் பகுதியில் குளிர்பதன வசதியுடன் கூடிய விவசாய விளைபொருள் பாதுகாப்பு கிடங்கு அமைக்க வேண்டும்.

தொண்டாமுத்தூர் சந்தைப்பேட்டையில் பஸ் நிலையம் கட்டும் பணி நீண்டகாலமாக ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது இதை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

தொண்டாமுத்தூரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் வசதிகள் மிகக்குறைவாக உள்ளது. அதை மேம்படுத்தவும், படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநாட்டில் ஒன்றிய செயலாளராக என். கணேசமூர்த்தி, துணை செயலாளராக வி.பி. ராமசாமி, பொருளாளராக கே.ஆறுச்சாமி ஆகியோர் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை யா.ஒத்தக்கடை** : இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது யா.ஒத்தகடை நகர் குழு மாநாடு, மேனாள் மாநில செயலாளர் தா.பாண்டியன், தேசிய குழு உறுப்பினர் பி.சேதுராமன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், நகர் குழு செயலாளர் குமரேசன் நினைவரங்கம், நகர் குழு உறுப்பினர் சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் முன்னிலையில், மூத்த தோழர் ஏ.பாக்கியம் கொடி ஏற்றி கோஷ முழக்கங்களை எழுப்பினார். இராஜேந்திரன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். நகர குழு உறுப்பினர் ஈஸ்வரன் மாநாட்டினை துவக்கி வைத்தார்.

மாநாட்டில் ஒன்றிய செயலாளராக வே.கார்த்திக், துணைச் செயலாளராக ஆர்.கண்ணன், பொருளாளராக ஜனசக்தி செய்தியாளர் க.பாண்டியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழக அரசும், மாநகராட்சியும் சாலைகளில் மாடுகள் சுற்றி திரிவதை கட்டுப்படுத்த வேண்டும். நியாய விலைக் கடைகளில் எடை குறையாமல் பொருட்கள் வழங்குவது, சாக்கடைகளை சீர் செய்வது, இராஜகம்பீரம் கண்மாய் சீரமைப்பது, கழிப்பட வசதி செய்து கொடுப்பது, சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை முன்பு சாலைகளில் மழைநீர் தேங்கி நிற்பதை அகற்றுவது போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவண்ணாமலை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை நகரப் பேரவைக் கூட்டம் வாரியார் மஹாலில் நடைபெற்றது. சு.கிருஷ்ணராஜ் தலைமை தாங்கினார். கு.பாலாஜி வரவேற்புரை ஆற்றினார். பெ.அன்பு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைச் செயலாளர் பெ.தங்கராஜ் துவக்கவுரை ஆற்றினார்.

நகர செயலாளர் எம்.ஞானவேல் செயலர் அறிக்கையை சமர்ப்பித்தார். நகரச் செயலாளராக கு.பாலாஜி, பொருளாளராக ஆர்.செல்வராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாணவர்/இளைஞர் அமைப்பாளராக எம்.தரணீஹீ தேர்ந்தெடுக்கப்பட்டார். சிபிஐ மாவட்டச் செயலாளர் வி.முத்தையன் நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்புரையாற்றினார். வி.ஆறுமுகம், எம்.ரேணு, பெ.அன்பு வாழ்த்துரையாற்றினர்.



**பவானி :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பவானி ஒன்றிய 30வது மாநாடு மறைந்த தலைவர் தா.பாண்டியன் நினைவரங்கம், பாலன் இல்லத்தில் நடைபெற்றது. மாநாட்டை எஸ்.பி.நஞ்சப்பன், பி.பெருமாள், வி.ஜி.அருள் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர். கட்சியின் கொடியினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன் ஏற்றி வைத்தார்.

கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டு பாட்டுக் குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன் மாநாட்டினை துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார். கட்சியின் ஒன்றிய செயலாளர் கே.எம்.கோபால் வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். ஒன்றிய செயலாளராக வழக்குரைஞர் வி.ஜி.அருள், துணை செயலாளர்களாக ஆர்.கோபாலகிருஷ்ணன், கே.செல்லமுத்து, பொருளாராக ஏ.அபிபுல்ரகுமான் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். பவானி டு ஆப்பக்கூடல் மெயின்ரோட்டில் பண்டார அப்பிச்சி கோவில் அருகில் உள்ள அரசு சாராய கடையினை அகற்றபட வேண்டும்.

சாதாரண ஏழை மக்களுடைய வருமான வரம்பை ரூ.72,000–ல் இருந்து ரூ.1,00,000 மாக உயர்த்திட வேண்டும். பெரியபுலியூர் அரசு ஆரம்ப பள்ளியில் ஓட்டு கொட்டாயில் இயங்கி வரும் அரசு நூலகத்தை மாற்றுவதற்கு மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அரியலூர் :** அரியலூர் நகர கிளை மாநாடு அரியலூர் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. து.பாண்டியன் தலைமை வகித்தார். மாநாட்டில் மாவட்டத் துணைச் செயலாளர் த.தண்டபாணி சிறப்புரை ஆற்றினார். அரியலூர் வடக்குக் கிளைச் செயலாளராக என்.கோவிந்தசாமி, துணைச் செயலாளராக ஏ.கே.துரைராஜ், ஆகியோரும், அரியலூர் கீழத்தெரு கிளைக்கு செயலாளராக து.பாண்டியன், துணைச் செயலாளராக ரா.சுப்பிரமணியன். பொருளாளராக மா. நல்லம்மாள் ஆகியோரும் அரியலூர் மார்க்கெட் தெரு கிளை செயலாளராக சி.பன்னீர்செல்வம் துணை செயலாளராக கி.முகமது யூசப், பொருளாளராக சா.ரா. சாந்தி அவர்களும், புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைநகர் அரியலூர் நகரத்தில் பேருந்து நிலைய வெளி வளாகத்தில் அமைந்துள்ள அண்ணா சிலை ரவுண்டானாவில் ஜெயங்கொண்டம் சாலை பிரிவு, கள்ளங்குறிச்சி சாலை பிரிவு, மார்க்கெட் தெரு சாலை பிரிவு, உள்ளிட்ட முக்கிய சாலை பிரிவு இடங்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திட சிக்னல்களை சீர்படுத்திட வேண்டும்.

## பேறிவாளனை விடுதலை செய்த உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்கிறோம்

### இரா.முத்தரசன் பேச்சு

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில மாநாட்டிற்கு வருகை தந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் செய்தியாளர் சந்திப்பின்போது கூறியதாவது, விலைவாசி உயர்வைக் கண்டித்து மே25 முதல் 31ஆம் தேதி வரை இடதுசாரி கட்சிகள் சார்பில் நாடு தழுவிய கண்டன இயக்கம் நடைபெற உள்ளது. தமிழகத்தில் இடதுசாரி கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். மாநில அரசினுடைய தீர்மானங்களை ஆளுநர் மதிக்கவில்லை. இதை உச்ச நீதிமன்றம் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. தண்டனை காலத்திற்கும் அதிகமாக சிறையில் இருந்த பேறிவாளன் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதற்கு தமிழக அரசும், பேறிவாளன் குடும்பமும் சட்டரீதியாக மேற்கொண்ட முயற்சி பயனளித்துள்ளது. இந்த தீர்ப்பை வரவேற்கிறோம்.

அதே போல் விசாரணை இல்லாமல் பல ஆண்டுகளாக விசாரணை கைதிகளாக இருக்கும் இஸ்லாமியர்களையும் விடுதலை செய்ய வேண்டும். கர்நாடக மாநிலத்தில் ஆட்சி செய்யும் ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் அங்கமான பாஜக அரசானது தந்தை பெரியார், பகத்சிங், நாரயணகுரு ஆகியோர்கள் குறித்த பள்ளி பாடங்களை அகற்றியுள்ளது. அதற்கு பதில் ஆர்எஸ்எஸ் தலைவர்களின் வரலாறு குறித்த பாடங்களை சேர்க்க முயற்சி செய்து வருகிறது. இது கண்டிக்கத்தக்கது. வருங்காலத்தில் காந்தியின் பாடத்தையும் எடுத்து விடுவார்கள்.

உக்ரைனிலிருந்து அழைத்து வரப்பட்ட மருத்துவ கல்லூரி மாணவர்கள் அனைவரையும் அந்தந்த மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் சேர்த்து அவர்களது படிப்பைத் தொடர்ந்து படிக்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு முத்தரசன் கூறினார். அப்போது மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# தொடர் மழையால் பாதிப்பிற்குள்ளான பருத்தி சாகுபடியாளர்களுக்கு தமிழக அரசு உதவ வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பருத்திக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையை விட, கூடுதலாக கடந்த ஆண்டு விவசாயிகள் பருத்தியை விற்பனை செய்திட வாய்ப்பு கிடைத்ததாலும், நிகழாண்டு பருத்தி தட்டுப்பாட்டால் மேலும் கூடுதல் விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கூடுதலாக பருத்தி சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் கடந்த இரு மாதங்களாக வளிமண்டல சுழற்சியால், விட்டுவிட்டு பொழியும் பருவம் தவறிய மழையால், இளம் செடிகள் மழைநீர் தேங்கி வேர்கள் அழுகியும், பிழைத்தவை வளர்ச்சி குன்றியும், இடை உழவு செய்ய முடியாமலும், பார் அணைக்க முடியாமலும் உள்ளது. இதனால் களைச்செடிகள் கூடுதலாக பெருகி வளர்ந்துவிட்டன. பல விவசாயிகள் உரங்கள் மற்றும் மருந்துகள் வைத்த பின்னும் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பருத்தி சாகுபடியில் சுமார் 70 சதம் அளவில் இப்படியான பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் வளர்ந்த பருத்தி செடிகள் மழையினால் வயதை விட கூடுதலாக வளர்ந்து சப்பைகள் கொட்டி வருகின்றது. இதில் பெரிய அளவில் மகசூல் குறையும் நிலை உள்ளது. இதுபோல் நிலக்கடலை, எள், உளுந்து மகசூலும் மழையினால் பெரியளவில் பாதித்துள்ளன.

இந்த பாதிப்பு மேலும் கூடுதலாகும் வாய்ப்பு உள்ளது. ஏனெனில் மழை தொடர்வதும் காலத்தில் தண்ணீர் திறக்கவும் வாய்ப்புள்ளதால் மேலும் பாதிப்பு கூடுதலாகும் சூழலில் இவைகளை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு உரிய உதவிகள் செய்திட தமிழக அரசு அவசர நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 73. கல்லும் புல்லும்

**கற்பென்ப கண்டுதான் கொள்வது வீணர்க்கு**
**விற்பது கற்பிலை காண்.**

கற்பெனப் படுவது நல்லவற்றை அறிவால் கற்றுக் கொண்டு, அதனைக் கடைப்பிடிப்பதாகும். ஆண்மகனுக்குப் பெண்ணை விற்று விடுவது கற்பாகாது.

**கல்லுமற்பப் புல்லும் கணவனாம் கேளுங்கள்**
**கல்நெஞ்சன் காட்டு மது.**

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன் என்று கூறப்படும் சொற்றடர் பெண்களைக் கீழ்மைப் படுத்தி அடிமை கொள்ள ஆண்களால் உண்டாக்கப் பட்டதாகும்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

கோயில் மனையில் குடியிருப்போரின் வாழ்வாதாரப் பிரச்சனை குறித்து தோழர் இரா.முத்தரசன் அவர்களின் கட்டுரை மிக தெளிவான விளக்கத்தை அளித்துள்ளது. மேலும் இது குறித்த மாநாடு நடத்தப்பட்டு அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வது நலம்.

– **கண்ணகி**, குப்பாண்டம்பாளையம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

தொடர்ச்சியாக தத்துவக் கட்டுரைகளை அளித்து வரும் எஸ்.தோதாத்ரி அவர்களின் பணி சிறப்பானது. இந்த வகையில் ‘மீமாம்சம்‘ குறித்த கட்டுரையில் “இந்த தத்துவமானது பொருளை ஏற்றுக் கொண்டாலும் பின்காலத்தில் ஒரு வகையான கருத்துமுதல்வாத நிலைப்பாட்டிற்கு வந்தது” என்று கூறியுள்ளது சரியானது.

– **பரமேஸ்வரன்**, கணபதிபாளையம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

மே 29 – ஜூன் 04 ஜனசக்தியில் பரமசிவம் அவர்களின், “கல்குவாரி சுரங்கங்களை முறைப்படுத்தி மக்களையும் உயிர் ஜீவன்களையும் பாதுகாக்குமா அரசு” என்ற கட்டுரையில் இன்றைய சுற்றுச்சூழலில் மண்வளம் சிதைக்கப்படுவது குறித்து கவலை கொண்டுள்ளது பாராட்டுக்குரியது.

**– பிரபு சேகர்,**
நெய்காரப்பட்டி.

**ஆசிரியர் ஜனசக்தி,**

சுழலும் உலகம் பகுதியில் வரும் உலகச் செய்திகளில் ஏகாதிபத்தியங்களால் சீர்குலைக்கப்பட்ட நாடுகளைப் பற்றி அரிய ஏதுவாக உள்ளது.

இதை எதிர்த்து சமர் புரியும் இடதுசாரிகளின் பணி மனிதகுலத்திற்கு தேவையானது.

**– தனகோடி,**
நெடும்பாக்கம்.

காஞ்சிபுரத்தில்

# கோயில் மனையில் குடியிருப்போர் சங்க வாழ்வுரிமை கூட்டம்



தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கம் சார்பில் 9 கோயில் குடியிப்புகளின் பிரிதிநிதிகள் கூட்டம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அ.மி.பிரவாளவர்ண சுவாமி திருக்கோயில் வசந்தநகர் குடியிருப்போர் நலசங்கம், அ.மி.பணாமுடீஸ்வரர் ஆலய அடிமனை குடியிருப்போர் சங்கம், அ.மி.அறம்வளர்த்த ஈஸ்வரர் கோயில் மனை குடியிருப்போர் சங்கம், அ.மி வன்னீஸ்வரர் முத்தீஸ்வரர் கோயில்மனை குடியிருப்போர் சங்கம்,அ.மி.காடுகாளியம்மன் மற்றும் ஆனந்தருத்ரேஸ்வரர் கோயில்மனை குடியிருப்போர் சங்கம், அ.மி. திருமேற்றளீஸ்வரர் திருக்கோயில் வீட்டுமனை வாடகைதார ர்கள் சங்கம், அ.மிகச்சபேஸ்வரர் கோயில் அரசன் தோட்டத்தெரு வாடகைதாரர்கள் சங்கம்,அ.மி கச்சபேஸ்வரர் நகர் கோயில்மனை குடியிருப்போர் சங்கம், மாதனம்பாளையத்தெரு குடியிருப்போர் சங்கம், நிர்வாகிகளை சந்தித்து 19.6.2022 அன்று சென்னையில் நடைபெற உள்ள கோயில்மனை குடியிருப்போர்/ கடைகள் வைத்திருப்போரின், வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு நடைபெறுவதன் நோக்கம்பற்றி விரிவாக எடுத்துரைத்து, அதில் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். இதில் தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கத்தின் மாநிலதலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், மாநில பொருளாளர் எஸ்.ஏழுமலை, மகளிர் அணி அமைப்பாளர் போரூர் ஆர்.பூங்கொடி, எஸ்.கண்ணன், என்.சத்தியமூர்த்தி, ஆதிகேசவன், பிரபாகரன், சுப்பையா, விநாயகம், சுரேஷ், சதீஸ் மற்றும் காஞ்சிரபுத்தைச் சேர்ந்த ஏ.மூர்த்தி, ஜெ.கமலநாதன், பி.பி.சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கேஸ் இணைப்பு பெற்ற அனைவருக்கும்

# மண்ணெண்ணெய் வழங்கிடுக!

● இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள ஆர்.வி.பி. மன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர குழு கூட்டம் நடைபெற்றது. துரைச்சாமி தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். நகர குழுவில் நசீர், அஹமத், அஸ்லாம், கண்ணன், திருநாவுக்கரசு ஆகியோர் சேர்க்கப்பட்டனர். நிர்வாகக் குழு உறுப்பினர்களாக ஜனசக்தி உசேன், சுப்ரமணியன், தங்கமணி, சவுக்கத்அலி, மரியாஜ், சின்னத்துரை, நல்லுசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகிகளை வாழ்த்தி திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் உரை நிகழ்த்தினார்.

மணப்பாறையில் உள்ள கேஸ் இணைப்பு பெற்ற அனைவருக்கும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும், மணப்பாறையில் இருந்து கோட்டாட்சியர் அலுவலகம் வரை நகரப்பேருந்து இயக்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பவானியில் கிளை செயலாளர்கள் கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பவானி நகர கிளைச் செயலாளர்கள் கூட்டம் பவானி கட்சி அலுவலகத்தில், பவானி நகர்மன்ற துணைத் தலைவர் மணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் மாதேஸ்வரன், பவானி நகர செயலாளர் பாலமுருகன், மாவட்டக்குழு உறுப்பினர் சந்திரசேகர், நகர துணை செயலாளர் சுரேஷ்குமார், நகர பொருளாளர் விஸ்வநாதன், ஏஐஓய்எப் நகர தலைவர் முகமது அலி, நகர செயலாளர் தாமோதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




தூர்வாரும் பணிகளில் முறைகேடு

# பொதுப்பணித்துறையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளில் நடைபெறும் முறைகேட்டைகண்டித்து நாகை சாலை பொதுபணித்துறை உபகோட்டம் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணை தலைவர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., தலைமையேற்று நடத்தினார்.ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், கே.ராஜா சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு, கே.பாலு, எம்.முருகேசன், கோ.ஜெயபால், டி.பி.சுந்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள், தொழிலாளர்கள் கலந்துகொண்டு பொதுப்பணித்துறை நிர்வாகத்தை கண்டித்து கண்டன முழக்கமிட்டனர். துறையின் உபகோட்ட பொறியாளர் அவர்கள் போராட்ட இடத்திற்கு வருகை தந்து முறைகேடு நடைபெறாமல் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்று உத்திரவாதம் வழங்கியதால் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக அறிவித்தனர்.

# இரும்பு மற்றும் மூலப்பொருட்களின் விலையை கணிசமாக குறைக்க வேண்டும்

## ஏஐடியூசி மாநாட்டில் தீர்மானம்

கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கம் 4 வது மாநாடு மே 29 அன்று கோவை காட்டூர் தியாகிகள் நிலையத்தில் நடைபெற்றது.

சங்க கொடியை வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன் ஏற்றிவைத்தார். வழக்கறிஞர் எஸ். ராதாகிருஷ்ணன் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். அஞ்சலி தீர்மானத்தை சங்கத்தின் செயலாளர் எம். ராமச்சந்திரன் முன்மொழிந்தார், சங்கத்தின் துணை பொதுச்செயலாளர், ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் சி. தங்கவேல் வரவேற்புரை வழங்கினார்.

தமிழ்நாடு ஏஐடியூசி இன் மாநில பொது செயலாளர் டி.எம். மூர்த்தி மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆறுமுகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சங்கத்தின் பொதுச்செயலாளர் கே.எம். செல்வராஜ் அரசியல் இயக்க அமைப்பு நிலை குறித்து அறிக்கை முன்வைத்துப் பேசினார். சங்கத்தின் பொருளாளர் ஏ.சுப்பிரமணியன் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார்.

மாநாட்டில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் சங்க மூத்த தோழர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சமீபகாலமாக தொழில்துறையின் முக்கிய இடுபொருளாக விளங்கக் கூடிய இரும்பு, அலுமினியம், செம்பு, ரப்பர் உள்ளிட்ட மூலப்பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

இதனால் தொழில் தேக்கம் அடைந்துள்ளது. தொழில்தேக்கத்தின் காரணமாக தொழிலாளர்கள் வேலை இழப்பிற்கு ஆளாகிறார்கள். எனவே, தொழில்துறையின் மூலப்பொருளான மேற்கண்ட பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்தவும், விலைகளை குறைக்கவும் ஒன்றிய அரசு தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை கணிசமாக குறைப்பதோடு அவற்றின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்தவும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலாளர் நல சட்டங்களான 44 சட்டங்களை சுருக்கி நான்கு தொகுப்புகளாக புதிய சட்ட தொகுப்புகளை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. அதை திரும்பப் பெற வேண்டும்.

வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியானது தொழில்துறை உற்பத்தி ஆற்றலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

ஆனால் அதன் பயனும், லாபம் அபரிமிதமான ஆதாயங்களையும் நிர்வாகங்களும் உயர் அலுவலர்களும் தமதாக்கிக் கொள்கின்றனர். உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கு உரிய ஆதாயங்கள் கிடைக்கப் பெருவதில்லை என்பதோடு, அவர்கள் மீது மேன்மேலும் கூடுதலான வேலைப் பளு திணிக்கப்படுகிறது.

எனவே, இதனை மாற்றி தொழிலாளர்களுக்கு உரிய ஆதாயங்கள் கிடைக்கப் பெறும் வகையில் தொழிலாளர்களின் வேலை நேரம் குறைக்கப்பட்டு, வார ஓய்வு அதிகரிக்கின்ற வகையில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் சட்டப்படி புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உரிய சட்ட பாதுகாப்பு வழங்க வேண்டும்.

தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் வீட்டுவசதி முக்கியமானதாக உள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் இணைந்து தொழிலாளர்கள் வீட்டுவசதி திட்டம் உருவாக்கி செயல்படுத்த வேண்டும். என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மணப்பாறை – மதுரை சாலையில் உள்ள

# மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்ற சிபிஐ கோரிக்கை

மணப்பாறை – மதுரை சாலையில் உள்ள மதுக்கடையை அருகில் அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், தனியார் கேட்டரிங் கல்லூரியும் இயங்கி வருகிறது. டி.எஸ்.பி. மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலகத்திற்கு செல்லும் பாதை அருகில் மதுகடை உள்ளது.

இந்த மதுக்கடை துவங்கும்போதே இங்கு துவங்க கூடாது என பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். கடந்த அரசு எதிர்ப்புகளை கடந்து இந்த இடத்தில மதுக்கடையை துவங்கியது. துவங்கிய நாளிலிருந்து இன்றுவரை விபத்துகள் ஏற்றப்டு வருகிறது. தமிழக அரசு உடனடியாக இந்த மதுக்கடையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்.

இவ்வாறு மணப்பாறை வட்டாட்சியரிடம் சிபிஐ நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், சுப்பிரமணியன், சௌக்கத் அலி, நல்லுசாமி ஆகியோர் அளித்துள்ள மனுவில் கூறிவுள்ளனர்.

# தியாக சீலர் பாலதண்டாயுதம் நினைவேந்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாகர்கோவில் மாநகரம் சார்பில் தியாக சீலர் பாலதண்டாயுதத்தின் நினைவேந்தல் நிகழ்வு நாகர்கோவில் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சிபிஐ மாவட்ட பொருளாளர் தா. சுபாஷ் சந்திரபோஸ் தலைமை வகித்தார். மாநகரச்செயலாளர் ஆர். இசக்கி முத்து, துணைச் செயலாளர் ஜி.ஐயப்பன், ந.நாகராஜன், சுரேஷ் குமார், பேராசிரியர் சுந்தரம், சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ்.இசக்கிமுத்து துணைச் செயலாளர் சிரிகுமார், ஏ.ஐ.டியு.சி மாவட்டபொருளாளர் எஸ்.அனில்குமார் ஏ.ஐ.ஒய்.எப். மாவட்டச்செயலாளர் சஜீவ், ஏ.ஐ. டி.யு.சி. மாவட்டச்செயலாளர் ராஜ் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மதுரை சத்தியமூர்த்தி நகர் பொதுமக்கள் உண்ணாவிரதம்



மதுரை சத்தியமூர்த்தி நகர் அருகே உள்ள பவர் ஹவுஸ் மெயின் ரோட்டில், சிபிஐ மற்றும் சத்தியமூர்த்தி நகர் மதுரை மேற்கு ஒன்றியம் பொதுமக்கள் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் பி.வீராங்கன் தலைமையில் கே.வீரபுத்திரன் முன்னிலையில் நடைபெற்றது.

2017 ஆம் ஆண்டு காட்டுநாயக்கர் சமூக மக்களின் ஐந்து தெருப் பிரதிநிதிகளாக 10 பேரை தேர்வு செய்து சத்தியமூர்த்தி நகர் தலைவர் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன் பின்னர் ஐந்து ஆண்டுகள் முடிந்தும் புது நிர்வாகம் தேர்வு நடைபெறவில்லை என்றும், உடனடியாக ஐந்து தெருவில் புதிய பிரதிநிதிகளை தேர்வு செய்யக்கோரியும், அருள்மிகு ஸ்ரீ உச்சிமாகாளியம்மன் கோயில் திருவிழாவினை நடத்த வலியுறுத்தியும், 150 க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

# "காதலன் காரல் மார்க்ஸ்" குறும்படம் கோவையில் திரையிடல்




தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்கோவை மேற்கு கிளை நடத்திய மாமேதை கார்ல் மார்க்சின் 204வது பிறந்தநாள் விழா கோவை, வெங்கிட்டாபுரம், விஸ்வகர்ம மஹாலில் நடைபெற்றது. இந்த விழா கவியரங்கம், ஓவியக் கண்காட்சி, சிறப்புரை, குறும்படம் வெளியீடு, கலந்துரையாடல் என்று அமையப்பெற்றது. எல்.ஜானின் வரவேற்புரையைத் தொடர்ந்து, கவியரங்கம் நடைபெற்றது. கலியரங்கத்தில் ஆதிரை ஜென்னி பற்றியும், உஷா ஏங்கல்ஸ் பற்றியும், நான்சி கோமகன் ஜென்னி பற்றியும் கவிதை வாசித்தனர். பார்வையாளர்களிடம் கவிதைகள் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து கலிஞர் கோவை காமு அவர்கள், கார்ல் மார்க்ஸ்ன் வாழ்க்கையை மிகச்சுருக்கமாக எடுத்துரைத்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் சிறப்புரையாற்றினார்.

# மக்களைக் கவர்ந்த மக்கள் கலைவிழா




சாத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 12 ஆவது மாநிலமாநாட்டில் முதல் இருநாட்களின் இரவும் மக்கள் கலைவிழா நிகழ்ச்சிகளால் அழகுபெற்றன. மக்கள் கலைஞர்கள் பங்கேற்று தங்களின் அற்புதமானத் திறமைகளால் நிகழ்ச்சிக்கு மேலும் மேலும் மெருகூட்டினர்.பாடல், நடனம், உரைவீச்சு, பாராட்டரங்கம் என்று பல்வேறு நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தன.

கலைமாமணி தஞ்சை சின்னப்பொண்ணு, தமிழிசைப்பாடகர் மதுரை ராஜா முஹம்மது, புதுச்சேரி சித்தன் ஜெயமூர்த்தி, கலைமாமணி கோவில்பட்டி அமலபுஷ்பம், திண்டுக்கல் வெண்ணிலா, அறந்தைபாவா உள்ளிட்ட இசை ஆளுமைகள்,நீடாமங்கலம் சந்திரசேகரன், ஆரல் விக்டர், பாண்டிச்சேரி ஆதிராமன், ஐ.தர்மசிங் என பெருமன்றப் பாடகர்களும் இசையால் அரங்கில் நிரம்பி வழிந்தார்கள். குறிப்பாக ஜெய்மூர்த்தியும், கன்னியாகுமரி மாவட்டத்தின் வந்தனம் கலைக்குழவும் தங்களின் இசைக்குழுவோடு இசையை வழங்கினார்கள்.இசை நிகழ்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கதாக இராஜபாளையம் உமாசங்கர் குழுவினர் வழங்கிய சேர்ந்திசை நிகழ்ச்சி இருந்தது. நம் இசைமேதை எம்.பி.சீனிவாசன் காலத்து சேர்ந்திசை மரபை மீண்டும் நினைவூட்டியது இந்நிகழ்ச்சி .

கோவை முனைவர் திலீப்குமார் அவர்களின் மாற்றுக்களம் குழுவினர் வழங்கிய நாடகம், பேராசிரியர் அ.மங்கை ஒருங்கிணைக்க திருங்கை ரேவதி அவர்களின் தனி நடிப்பில் அமைந்த வெள்ளைமொழி நாடகம் இரண்டும் நாடக அரங்கில் ஜொலித்தன.

நம் பெருமன்றக் கலைஞர் நினைவில் வாழும் கலைமாமணி கைலாசமூர்த்தி அவர்களின் தூத்துக்குடி மண்ணிலிருந்து அவரால் உருவாக்கப்பட்ட கலைஞர்கள் ஷஹா கலைக்குழு, கைலாசமூர்த்தி கலைக் குழு என்னும் பேனர்களில் வழங்கிய நாட்டார்க் கலை நிகழ்வுகள். முனைவர் அழகு பாரதியின் ஒருங்கிணைப்பில் மதுரை இப்டா குழுவினர் வழங்கிய நிகழ்வுகள். தர்மபுரி பம்பை இசைக்குழுவின் பம்பை இசை, தண்டபாணி குழுவினரின் மக்களிசை. பெரம்பலூர் தோழர் கண்ணதாசன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற கிராமியக்கலைஞர்கள் வழங்கிய நிகழ்வுகள் , சிவகாசி தமிழிசையகம் வழங்கிய சிலம்பமும் பறையும் என நிகழ்வுகள் ஒவ்வொன்றும் தனித்துவமாய் அமைந்தன.

உரைவீச்சில் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் மு.அப்துல் சமது இருவரும் சிறப்பானதொரு உரையினை வழங்கினர்.

பெருமன்றத்தின் மூத்த ஆளுமைகள் கவிஞர் சிற்பி பால சுப்பிரமணியம், கவிஞர் பரிணாமன், வழக்குரைஞர் ப.பா.மோகன், எழுத்தாளர் ஸ்ரீதரகணேசன், ஆகியோருக்குப்பாராட்டு விழா நடைபெற்றது. பேராசியர்,நா,இராமச்சந்திரன், முனைவர் இரா.காமராசு, வி.சிவராமன் , வழக்குரைஞர் செல்வராஜ் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். இரா.முத்தரசன் மருத்துவர் அறம் இருவரும் கலைஞர்களுக்கு சிறப்பு செய்தனர்

நிகழ்ச்சியை தோழர்கள் எச்.ஹாமீம் முஸ்தபா, மு.சி.ராதாகிருஷ்ணன், நாணற்காடன், இரணியன் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்தனர்

# போக்குவரத்துத் தொழிலாளர்களின் 14வது ஊதிய ஒப்பந்தம் விரைவாக இறுதிப்படுத்த வேண்டும்

## ஏஐடியூசி நிர்வாக குழு கூட்டத்தில் தமிழ்நாடு அரசுக்கு வலியுறுத்தல்

கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் செயல்பட்டு வரும் ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் நிர்வாக குழு கூட்டம் தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் சங்கத் தலைவர் டி.தங்கராசு தலைமையில் நடைபெற்றது. கௌரவத் தலைவர் கே.சுந்தரபாண்டியன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பொதுச்செயலாளர் டி.கஸ்தூரி நடைபெற்ற பணி கள் குறித்து பேசினார்.

மாநில துணைத் தலை வர் துரை.மதிவாணன், ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

போக்குவரத்துத் தொழிலாளர்களின் தொழிலாளர்களின் 14வது ஊதிய ஒப்பந்தம் மூன்று வருடமாக இழுத்தடிக்கப்பட்டு வருகிறது,

தற்போது நடைபெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து, விரைவாக ஒப்பந்தத்தை இறுதிப்படுத்த வேண்டும்.

திமுக தேர்தல் வாக்குறுதி அடிப்படையில் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

### விவசாய தொழிலாளர் குறைதீர்க்கும் கூட்டம் நடத்த

# ஆட்சியரிடம் கோரிக்கை

தருமபுரி மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழில். இதனை சார்ந்து கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு எனப் பணியாற்றும் ஆண், பெண் விவசாய தொழிலாளர்கள் நான்கு லட்சத்திற்கு மேல் தினகூலி அடிப்படையில் வேலை செய்து தின சம்பளம் பெற்று சில நாள் வேலை கிடைக்கும் பலநாள் வேலை கிடைக்காது. இந்த நிலைமையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் இவ்வாண்டு புதிய வேலை அட்டை வழங்காமல் இருக்கின்றனர்.

அறுபது வயது அடைந்த விவசாய தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்ட அட்டையின் ஒய்வு ஊதியம் வழங்குவதில்லை. நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு கால்நடைகள் வளர்க்க கடன் வழங்குவதில்லை. இப்படி விவசாய தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க சம்மந்தப்பட்ட அலுவலரிடம் மனு அளித்தாலும் உரிய பதில் கிடைப்பதில்லை.

எனவே, இதன் மீது நடவடிக்கை எடுத்து தருமபுரி மாவட்டத்தில் மாதம் ஒரு முறை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் விவசாய தொழிலாளர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த வேண்டும் என தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பில் கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள மனுவில் மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தெரி வித்துள்ளார்.

### கோவையில் முற்றுகைப் போராட்டம்

# பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வழங்கிடுக!

பழிவாங்கப்பட்ட தொழிலாளர் களுக்கு வேலை வழங்கக்கோரி ஏ.ஐ.டி.யூ.சி. மற்றும் தூய்மைப்பணி தொழிலாளர்கள் சங்கத்தினர் கோயம் புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 29வது வார்டில் தூய்மை பணியாளராக வேலை செய்து வரும் கலைவாணி, பணியாளராக வேலை செய்துவரும் ராமசாமி ஆகிய இருவரும் தின கூலி தொழிலாளர்களாக 13 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபடுகின்ற காரணத்தால் மாநகராட்சி நிர்வாகம் இவர்களுக்கு வேலை மறுத்து வந்துள்ளது. ஒரு மாத காலமாக வேலை மறுக்கப்பட்ட நிலையில் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கக்கோரி ஏ.ஐ.டி.யூ.சி. கோவை மாவட்ட ஜீவா முனிசிபல் தொழிலாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதார துப்புரவு மற்றும் பொது பணி தொழிலாளர் சங்கம் நிர்வாகிகள் மே 30 அன்று முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்திற்கு என். செல்வராஜ் மற்றும் தமிழ்நாடு செல்வம் ஆகியோர் தலைமை தாங்கினர். சி.செல்வராஜ், மருதாசலம், புவனேஸ்வரி மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வார்டு கிளை சங்க நிர்வாகிகள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வடக்கு மண்டல தலைவர் கதிர்வேல் நேரில் வந்து சமரசத்தில் ஈடுபட்டார்.




# குடிமனை பட்டா கேட்டு ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் மனு

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வருவாய் தீர்வாயம்(ஜமாபந்தி) நிகழ்ச்சி திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. வரம்பியம், பூசலாங்குடி, பிச்சன்கோட்டகம் ஆகிய ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகள் மூலமாக வரம்பியம் ஊராட்சியில் 1995 ஆம் ஆண்டும், பூசலாங்குடி மற்றும் பிச்சன்கோட்டகம் ஊராட்சிகளில் 2002ஆம் ஆண்டும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளுக்கு வீட்டு மனைக்கான இடம் தேர்வு செய்தும் இதுநாள் வரை பட்டா வழங்கபடவில்லை. வரம்பியம் ஊராட்சியில் 38 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உடனடியாக பட்ட வழங்க வேண்டும், இடத்தினை அளந்து பயனாளிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவினை திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் திருத்துறைப்பூண்டியில் நடைபெற்று வரும் வருவாய் கிராம ஜமாபந்தி நிகழ்வில் கலந்துகொண்டுள்ள வருவாய் தனிதுணை ஆட்சியரிடம் வழங்கினார். மனுவினை பெற்றுக்கொண்ட ஆட்சியர் உரிய நடவடிக்கையை எடுப்பதாக உறுதியளித்தார். இந்நிகழ்வின்போது திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.மகாலிங்கம், கோ.ஜெயபால், அ.குமரேசன் ஆகியோர் உடனிருந்தனர்.





### ரயத்து வாரியாக மாற்றம் செய்து நிலப்பட்ட வழங்கக் கோரி

# பாபநாசத்தில் உண்ணாவிரதம்

அரையபுரம் தட்டுமால் படுகை, கிராம விவசாயிகளுக்கு உச்சநீதிமன்றத் தீர்ப்பின் படி ரயத்து வாரியாக மாற்றம் செய்து சாகுபடிச் செய்யும் விவசாயிகளுக்கு காலதாமதமின்றி நிலப்பட்டா வழங்க வேண்டும். அரசலாறு தென்கரையில் தடுப்புச்சுவர் கட்டித் தர வேண்டும், பாபநாசம் படுகை, அரையபுரம் தட்டுமால் படுகை சாலையை முனீஸ்வரன் கோயில் முதல் சுடுகாடு வரை தார்சாலையாக மாற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பாபநாசம் அண்ணா சிலை அருகில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. உண்ணாவிரதத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி தொடங்கி வைத்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக் குழு உறுப்பினர் தர்மராஜன் தலைமை வகித்தார். இதில் ஒன்றியச் செயலாளர் கனகராஜ், விவசாயத் தொழிலாளர் சங்கம் பரமசிவம், இந்தியக் கம்யூ மாவட்ட நிர்வாகக் குழு தில்லைவனம் உள்பட பலர் பங்கேற்றனர்.

### சாதி, ஆணவ படுகொலையை தடுக்க

# தனி சிறப்பு சட்டம் இயற்றக்கோரி ஆர்ப்பாட்டம்




விருதுநகரில் சாதி, ஆணவ படுகொலையை தடுக்க தனி சிறப்பு சட்டம் இயற்றக்கோரி தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னனி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மற்றும் முற்போக்கு அரசியல் கட்சிகளின் சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ததீஒமு பாண்டியன் தலைமை வகித்தார். தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், ததீஒமு மாவட்ட செயலாளர் எம்.முத்துக்குமார், ஆதித்தமிழர் கட்சி சுந்தர்ராஜன், தமிழ்புலிகள் கட்சி வீரப்பெருமாள், விசிக சக்திவேல், தலித் விடுதலை இயக்கம் பீமாராவ், ஐந்திணை மக்கள் கட்சி தர்மராஜ், தமிழ்நாடு அருந்ததியர் சங்க சேகர், வனவேங்கை ஈஸ்வரன் ஆகியோர் பேசினார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், மாவட்ட குழு உறுப்பினர் காதர்மைதின் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# தாருகன் பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள். பல்வேறு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் என்றாலும்.இந்த கட்டுரை ஆக்கத்திற்காக, நூலாசிரியர் பல்வேறு களப் பணிகளை மேற்கொண்டு கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பது இந்நூலின் சிறப்பாகும். ஒருவகையில் என் நூலின் பொதுவான தன்மையே, புத்தகங்களுக்கு அப்பால் உள்ள செய்திகளை சேகரித்து எழுதியது என்பது தான். இதனால் கிடைத்த அனுபவங்களையும் புத்தக படிப்பின் பலனாகவே எடுத்துக் கொண்டேன். நாட்டார் வழக்காறுகள் வழி பண்பாட்டு வரலாற்றை உருவாக்க வேண்டும் என்ற என் கருத்தை என் பிற நூல்களிலும் கூறியிருக்கிறேன். அதன் தொடர்ச்சியே இது. என நூலாசிரியர் கூறியுள்ளார்.




கேரள வாய்மொழி மரபிலும், பாட்டுகளிலும் கண்ணகி தொடர்பான வழக்காறுகள் உள்ளன. இவற்றில் தாருகன் பாண்டியன் ஒப்பீடு தொன்மமாக உள்ளது. ஒருவகையில் இது திரிபுகளுடன் கூடிய சிலப்பதிகாரக் கதையின் பாதிப்புள்ள தாருகன் கதை. பாண்டியன் பற்றிய செய்திகளும் அப்படியே. பாண்டியனிடம் உள்ள வெறுப்பு தாழ்மையுடன் இணைத்து காட்டப்பட்டுள்ளது. மற்றும் கேரளத்தில் கண்ணகி கொற்றவை வுடன் இணைந்த காலத்தில் சிலப்பதிகாரம் மூலக்கதை பல்வேறு பிரிவுகளுடன் வட்டார ரீதியாக மாற ஆரம்பித்தது. 15ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இது நடந்திருக்கலாம். கேரளத்தில் வைதிக ஆதிக்கம் தீவிரமான பின் சிலப்பதிகாரக் கதையின் பல பகுதிகள் வட்டார ரீதியான வடிவங்களுடன் மாற்றமடைந்தன. இக்காலத்தில் கண்ணகி வழிபாட்டுடன் மழை வேண்டுதல், பஞ்சம், வெப்பநோய் பரவுதலை தடுத்தல் போன்றவற்றுடன் இணைக்கப்பட்ட நம்பிக்கை ஆழமாக இருந்தன. மலபார் வரலாற்றை எழுதிய லோகனும் பழம் கொற்றவையே காளி அல்லது துர்க்கை என்பதில் சந்தேகமில்லை, இவற்றில் கண்ணகி வழிபாட்டின் சாயல் உண்டு. வட கேரளத்து சீர்மக்கவு கோவில்கள் கண்ணகிக்கு உரியவை என்கிறார்.

தமிழகத்தை விட கேரள மரபில் கண்ணகி தொடர்பான வாய்மொழி செய்திகள் அதிகம் கிடைக்கின்றன. அவற்றை முழுவதும் தொகுப்பதன் மூலம் அம்மானை ஒப்பிட்டு ஆராய முடியும் என்கிறார் நூலாசிரியர்.

சில செய்திகளை புதிய கோணத்தில் நூலாசிரியர் வாசகர்களுக்கு அளிக்கிறார். இதில் உள்ள பல்வேறு கட்டுரைகளை படித்து அறிய, இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம். **– சமரன்**

**நூலாசிரியர் : அ. கா. பெருமாள்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 126 விலை: ரூ.130**

## நூல் நயம்

# ஆண்டைகளின் ஆதிக்கத் திமிரை அடக்கிய சிங்கம்: சி.கே.மாணிக்கம்

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் உரிமைக்கான போராட்டங்களை தொடர்ந்து பதிவு செய்து வரும் என்.எஸ்.பிரதாப் சந்திரன், ஆண்டைகளின் ஆதிக்கத் திமிரை அடக்கிய சிங்கம் சி கே மாணிக்கம் என்ற நூலையும் படைத்துள்ளார். சென்னையை ஒட்டிய செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய ஒன்றுபட்ட மாவட்டமாக செங்கல்பட்டு மாவட்டம் திகழ்ந்தது. அம் மாவட்டத்திற்குட்பட்ட பொன்னேரி தாலுக்கா மீஞ்சூர் பகுதியில் உள்ள அச்சரப் பள்ளம் என்ற கிராமத்தில் பிறந்தவர் சி.கே. மாணிக்கம் .தான் பிறந்த ஊர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஜமீன்தார்கள்,




நிலச்சுவான்தார்கள், பண்ணையார்கள் தலித் மக்களை அடிமைகளாக பாவித்து எல்லா வகையிலும் அடக்கி ஒடுக்கினார்கள் .இதை அறிந்த சி கே மாணிக்கம் அடக்குமுறைகளை எதிர்த்தும், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராட்டக் களத்தில் குதித்தார் .உழைப்பாளி மக்களுக்கு உரிமைக் குரல் கொடுக்க பொன்னேரி பகுதியில் இயற்கையாகவே ஒரு தலைவராக உருவானார். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏரி, குளங்கள் இருந்ததால் நீர்ப்பாசனம் பெருகி விவசாயம் தழைத்தோங்கியது. தஞ்சை மாவட்டத்தில் விவசாய சங்கம் அமைத்த தோழர் சீனிவாசராவ் அவர்களின் பாதையில் தமிழ்நாடு முழுவதும் விவசாய சங்கம் அமைப்பு ரீதியாக வீறுகொண்டு எழுந்தது .

கீழத் தஞ்சையில் நடைபெற்ற போராட்டங்களை போல, செங்கல்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக பொன்னேரி தாலுகாவில் நடைபெற்ற நில மீட்புப் போராட்டம், உப்பளத் தொழிலாளர் போராட்டம், கூலி உயர்வுப் போராட்டம், வீட்டுமனை கோரி போராட்டம், கோயில் நுழைவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களுக்கு தலைமை ஏற்று சி.கே. மாணிக்கம் நடத்திய போராட்டங்களை இந்த நூலில் சிறப்பாக பதிவு செய்திருக்கிறார் நூலாசிரியர் என்.எஸ்.பிரதாப் சந்திரன்.


தற்போதைய சூழ்நிலையில் பொன்னேரி பகுதியில் கடல்வளம், நீர் வளம், நில வளம் இவற்றையெல்லாம் கார்ப்பரேட்டுகள் ஆக்கிரமித்து தலித் மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பின்றி ,சிறுசிறு காண்ட்ராக்ட் கூலிகளாக செயல்படும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது அரசாங்கம் . இந்த கொடூர நிலையை எதிர்த்து போராட இந்த தலைமுறை இளைஞர்கள் தம் முன்னோர்களான சி கே மாணிக்கம் போன்ற தலைவர்களின் போராட்ட குணங்களை அரிய இந்த நூல் துணை புரியும். **– அம்பத்தூர் துரைசாமி**

**நூலாசிரியர் : என் எஸ் பிரதாப் சந்திரன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 80 விலை: ரூ.70**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்




## கொலம்பிய அதிபர் தேர்தல்:

# இடதுசாரி வேட்பாளர் குஸ்தவோ பெட்ரோ முன்னிலை

கடந்த மே 29 அன்று கொலம்பிய அதிபர் பதவிக்கான முதல் சுற்றுத் தேர்தல் நடைபெற்றது. கொலம்பிய தேர்தல் முறைப்படி, முதல் சுற்றில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றவராவார். எந்த ஒரு வேட்பாளரும் முதல் சுற்றில் 50 சதத்திற்கு அதிகமாக வாக்குகளைப் பெறாத நிலையில் இரண்டாவது சுற்று தேர்தல் நடைபெறும். முதல் சுற்றில் அதிக வாக்குகளைப் பெறும் இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் இரண்டாவது சுற்றில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். ஜூன் 19 அன்று நடைபெறவுள்ள இரண்டாவது சுற்று தேர்தலில் இடதுசாரி வேட்பாளரான குஸ்தவோ பெட்ரோ மற்றும் ரோடோல்போ ஹெர்னாண்டஸ் ஆகிய இருவருக்கும் இடையே நேரடிப் போட்டி நிலவுகிறது. இந்தத் தேர்தலில் 39 மில்லியன் கொலம்பியர்கள் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவர்.

ஜூன் 19 அன்று நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றில், குஸ்தவோ பெட்ரோவின் வெற்றி வாய்ப்பு உறுதி என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். அவர் தனது 17வது வயதிலேயே வி–19 எனும் கொலம்பிய புரட்சிகர இயக்கம் ஒன்றில் உறுப்பினராகச் சேர்ந்து, சமுதாய மாற்றத்திற்காக தொடர்ந்து போராடி வருபவர். ஆயுதங்கள் வைத்திருந்தார் என்ற குற்றத்தின் அடிப்படையில் 1985 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 18 மாதம் சிறை தண்டனை ஏற்றவர்.

மாற்றத்தை விரும்பும் கொலம்பிய வாக்காளர்களின் பேராதரவைப் பெற்றவராக பெட்ரோ உள்ளார். பெரும் பாலான கருத்துக் கணிப்புகளும் கொலம்பிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக பெட்ரோ திகழ்கிறார் என்று கூறுகின்றன. நவீன தாராளமயம் கொலம்பியாவைச் சிதைத்து விடும் என்பதே தேர்தல் பிரச்சார களத்தில் பெட்ரோவின் முதன்மையான முழக்கமாக இருந்து வருகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறும் அவர், பெரும் பணக்காரர்களாக இருக்கும் 4000 நபர்கள் மீது வரி விதிப்பு அதிகப்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளித்துள்ளார்.

பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்சினைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்பதுடன் 15 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் வேளாண் சாகுபடி மீட்டுருவாக்கம் செய்வதற்கான வேளாண் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்று குஸ்தவோ பெட்ரோ தெரிவித்துள்ளார்.

## கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக

# ஆப்கன் பெண்கள் போராட்டம்

ஆப்கன் தலைநகரான காபூலில் கடந்த மே 29 அன்று கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கான உரிமைகளை வலியுறுத்தியும், அவற்றின் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் தலிபான்களுக்கு எதிராக முழக்கமிட்டவாறு ஆப்கன் பெண்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

கல்வி அமைச்சகத்தின் முன்பு திரண்ட அப் பெண்கள் ‘கல்வி எனது உரிமை’ என்று முழக்கமிட்டனர். ஊர்வலத்தை தடுத்து நிறுத்திட தலிபான் காவல்துறையினர் விரைந்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களிடமிருந்த மொபைல் போன்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். தலிபான், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதில் இருந்து பெண்களின் உரிமைகள் மீது எண்ணற்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதனை எதிர்த்து அண்மை காலத்தில் மிகச் சிறிய அளவு என்றாலும் தொடர் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கியுள்ளன.

## தேர்தல் முடிவுகள் குறித்து

# ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடு

அண்மையில் வெளியான தேர்தல் முடிவுகள் குறித்து ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

முற்போக்காளர்களும், சுயேட்சைகளும் புதிய அரசாங்கத்தில் முக்கியப் பங்காற்றுவார்கள் என்று ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி முன்பே அறிவித்திருந்தது. இந்த அறிக்கை வெளியாகும் நேரத்தில் தொழிலாளர் கட்சி ஆட்சியில் பொறுப்பேற்று இருக்கும். துல்லியமான பிரதி நிதித்துவ நிலவரம் குறித்து சில நாட்களில் உறுதிப் படுத்தப்படும்.

பருவகால மாற்றத்தைச் சமாளித்திட உடனடி நடவடிக்கைகள் தேவை என்பதை வாக்காளர்கள் தெளிவான தீர்ப்பின் வாயிலாக உரக்கச் சொல்வி விட்டார்கள். தற்போதைய பருவகால அறிவியலின் தேவைக் கேற்ப 2030ஆம் ஆண்டிற்கான மேம்படுத்தப்பட்ட இலக் குகளை நிர்ணயிக்க வேண்டும் என வாக்காளர்கள் விரும்பு கிறார்கள்.

தேர்தலில் முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை இரு அவை களிலும் பெற்றுள்ள கிரீன்ஸ் கட்சிக்கு ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்கள் பெற்றுள்ள வெற்றியானது சட்டங்களின் மூலம் முற்போக்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வர வழிவகுக்கும். செனட் சபையிலும் அதிகார சமன்பாட்டை ஏற்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

கிரீன்ஸ் மற்றும் சுயேட்சைகள் பெற்றுள்ள மகத்தான வெற்றி இருகட்சி முறைக்கு பலத்த அடியாக விழுந்துள்ளது. இந்தப் புதிய சூழலில் ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி பின்வாங்காமல் இருக்க, உழைக்கும் வர்க்க செயல்திட்டத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்க கம்யூனிஸ்ட்களும் முற்போக்காளர்களும் அணி திரள வேண்டும். வெகுமக்களை அமைப்பாக அணிதிரட்டி தீவிரமாகப் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் ஏகபோக சக்திகளை முறியடித்து தொழிலாளர்கள் நிலையை மேம்படுத்திட புதியதொரு வாய்ப்பு உருவாகியுள்ளது.

சுற்றுச்சூழல், வீட்டுவசதி, ஊதிய உயர்வு, பல் சிகிச்சை உள்ளிட்ட சுகாதாரம், வேலை வாய்ப்பு, உரிய அதிகாரம் கொண்ட ஊழலுக்கு எதிரான ஆணையம் ஆகியவை மீதான முற்போக்கான கொள்கைகளுக்கு ஆதரவாக வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். பெண்கள் மீதான தாக்குதல்களைத் தவறாகக் கையாண்ட விதம் மற்றும் பெண்களுக்கு எதிரான கொள்கைகளின் எதிர்விளைவாக நாடாளுமன்றத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகரிப்பதில் வியப்பேதும் இல்லை. நாடாளுமன்றத்தில் பாலின சமத்துவம் மேம்பட்டு வருவதை ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

ஆஸ்திரேலியாவின் ஜனநாயக விரோத தேர்தல் முறையை கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது; தேர்தல் முறையில் மாற்றங்களைக் கோருகிறது. சிறிய அரசியல் கட்சிகளின் பங்கேற்பையும் அனுமதிக்கக் கூடிய, உத்வேகமூட்டக்கூடிய ஜனநாயக ரீதியிலான விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறையை நடைமுறைப்படுத்திட புதிய நாடாளுமன்றத்திற்கு அறைகூவல் விடுக்கிறோம்.

சுயேட்சைகள் மற்றும் கிரீன் கட்சியினரை தேர்ந் தெடுப்பது மற்றும் அரசாங்கத்தை மாற்றுவது மட்டுமே மக்க ளுக்கான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்துவிடாது; ஆஸ்திரேலிய சமூக அமைப்பின் முதலாளித்துவ தன் மையை மாற்றிவிடாது.

எனினும், மக்கள் ஒன்றுபட்டு அமைப்பாகத் திரண்டால் உண்மையான மாற்றங்களை வென்றெடுக்க முடியும் என்பதை இந்தத் தேர்தல் எடுத்துக் காட்டுகிறது. தற்போதைய புதிய சூழலில் உழைக்கும் வர்க்க மக்களின் நலன்களை வென்றெடுப்பதற்கான சீர்திருத்தங்களைக் கொண்டுவர வெகுமக்கள் இயக்கங்களைக் கட்டமைத்து பலப்படுத்துவது அவசியமாகும். இரு கட்சி முறைக்கு எதிராக வாக்களித்த மக்கள் அனைவரும் ஸ்தூலமான மாற்றத்தை உருவாக்கிட போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது. இவ்வாறு ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.






& டி.எம்.மூர்த்தி



# வாய்தா! வாய்தா!! வாய்தா!!!

**வாய்தா திரைப்படத்தை பார்த்துவிட்டு வெளிவந்தபோது ஒரு உணர்வு கொந்தளிப்பில் நான் சிக்கி இருந்தேன். இதோ தீர்வு வந்துவிட்டது என்று நம்பி ஒவ்வொரு முறையும் கிடைக்க விடாமலேயே தட்டிப் பறித்துக் கொண்டிருக்கிற சமூக அவலத்தை நேரடியாகப் படம் விளக்கியிருந்தது. அது, எனது 43 ஆண்டுகால தொழிற்சங்க வாழ்க்கையை எனக்குள்ளேயே இன்னொரு திரைப் படம் போல ஓட்டியது.**

1979ல் மகாலட்சுமி மில்லில், 130 கேஷுவல் தொழிலாளரை நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற தீர்ப்பை விளக்கி பேசியதுதான், எனது முதல் வாயிற் கூட்டம். பல்லாண்டுகாலம் அந்த பிரச்சனை இழுத்து, அந்த ஆர்பிட்ரேஷன் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்படவில்லை என்பதால் செல்லாது என்று எதிர் வழக்கு நிர்வாகம் போட்டுஞ் அதன்மீது ஆண்டுக்கணக்கில் விவாதம் நடந்தது. கடைசியில் மில்லே மூடப்பட்டுவிட்டது.

செங்குன்றம் அருகே இருக்கும் அலமாதியில், ஒன்றிய அரசுக்கு சொந்தமான கால்நடைப் பண்ணை ஒன்று உள்ளது. அதில் பணி செய்த நூற்றைம்பது தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தனர். தோழர் சி.கே.மாதவன், சங்கத் தலைவராக இருந்தார். அவர் வழக்கை நடத்தி தொழிலாளிக்கு சாதகமாகத் தீர்ப்பு வந்தது. அதன் மீது நிர்வாகம் மேல்முறையீடு செய்தது. சிகெஎம் மறைந்த பின்பு, தோழர் ஜெகன் தலைவர் பொறுப்பேற்றார். அவர் காலத்திலும் வழக்கு நடந்தது. அவரது மறைவுக்கு பின்பு நான் பொறுப்பேற்றேன். இப்போதும் நடக்கிறது. 25 லிருந்து 30 வயதுக்குள்ளாக இருந்த அன்றைய வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் சரி பாதிக்கு மேல் இறந்துவிட்டனர். இந்த வழக்குகளைப் பற்றிய கூட்டங்களில் ஏதாவது தீர்வு வந்துவிடாதா என்று அவர்கள் கண்களில் நிறைந்திருந்த ஏக்கம் என் நெஞ்சில் இருந்து அகலவில்லை. தொழிலாளர் நீதிமன்றத்தில் இருந்து உச்சநீதிமன்றம் வரை வழக்கு ஏறி இறங்கிக் கொண்டே இருக்கிறது. இன்னும் முடியவில்லை.

கீழடிக்கு அருகே இருக்கும், சிலைமான் ருக்மணி மில்லில் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்க மறுத்ததால், 35 ஆண்டுகளுக்கு முன்பு தோழர் பி.டி.நாராயணன் அவர்களும் நானும் வழக்கு நடத்தினோம். வழக்கு வெற்றிதான். ஆனால் பல மேல்முறையீடுகள். 2001ல் மில் மூடப்பட்டது. 11கோடி ரூபாய் கடன் கொடுத்திருந்த ஸ்டேட் வங்கி, இயந்திரங்களையும் ஒரு பகுதி நிலத்தையும் ஏலம் விட்டு சுமார் 70 கோடி வரை வசூலித்து இருக்கிறது. மிச்சமுள்ள 27 ஏக்கர் நிலத்தையும் ஏலம் விட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகையும் தனது கடனுக்குப் போதாது என்று சொல்கிறது. தீர்ப்புப்படி பணிக்கொடை கொடுக்க முன்னுரிமை தர வேண்டும் என தொழிலாளர்கள் சார்பில் சங்கம் தொடுத்த வழக்கு நடந்து கொண்டே இருக்கிறது. மிகப்பெரும்பாலான தொழிலாளர்கள் இறந்து விட்டனர். அவர்களது குடும்பங்கள் ஏதாவது பணம் கிடைத்து விடாதா என்ற பெரும் எதிர்பார்ப்போடு சங்க அலுவலகத்திற்கு இன்னும் வந்து செல்கிறார்கள். என்னையும் அவ்வப்போது தொலைபேசியில் அழைத்து பேசுவார்கள்.

இதெல்லாம் எந்த திரைப்படத்திலும் இதுவரை வந்ததில்லை. #வாய்தா திரைப்படம் அதனை ஆழமாகத் தொட்டிருக்கிறது.

**ஆதிக்க சக்திகள், சாதி வெறி சக்திகள், பெரும் பணக்காரர்கள், அதிகாரத்துக்கு வர எதையும் செய்யத் துணிந்த பாதகர்கள், ஆளும் வர்க்கத்தை சார்ந்த வழக்கறிஞர்கள், எந்த மனசாட்சியும் குற்ற உணர்ச்சியும் இன்றி, தமது பேதங்களை எல்லாம் மறந்து, சாமானியர்களை நசுக்குவதற்கு சட்டென்று சமதளத்தில் ஒன்று சேர்வது, மிகுந்த கலைநயத்தோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.**

சாதி கடந்த காதல், சாதி கடந்த நட்பு, நீதிக்காக போராடும் வழக்கறிஞர்கள் என இன்றைய சமூகத்தில் ஆரோக்கியமான பகுதிகள் வாழ்வதையும் எடுத்துரைக்க படம் தவறவில்லை.

சலவைத் தொழிலாளியாக பேராசிரியர் மு.ராமசாமி வாழ்ந்து காட்டியிருக்கிறார். அவரது பெரும் நடிப்பு திறமைக்கு வர்ணனை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவரது வாய் துடுக்கு மிக்க மனைவியாகவும், சாதிக்குரிய வேலையை செய்து வருடக் கூலியை வணங்கிப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தனது கணவனும் மகன்களும் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையைத் தேக்கிக் கொண்டு, அது நிறைவேறாத போது அவர்கள் மீதே வெடித்துச் சிதறி கோபத்தை கொட்டுபவராக வரும் பெண் பாத்திரம் மிக வலிமையானது. அதில் நடித்தவர் பெயர் கூட தெரியவில்லை மிகச்சிறப்பாக, நடிப்பு என்றே தெரியாத வகையில், தனது கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

தறிப்பெட்டியில் (நூல்) கண்டுகளை நிரப்பும் பெண் தொழிலாளியாக கதாநாயகி. தனது காதலைச் சொன்னால் காதலனுக்கு மரணம் நிச்சயம் என்று உணர்ந்து சொல்லவும் முடியாமல் மருகும் போது ஜொலிக்கிறார்.

விசைத்தறி தொழிலாளியாக, சாதியின் பெயரால் சமூகம் நிகழ்த்தும் இழி செயல்களை ஏற்கப்பொறாதவராய், அதனால் அந்தத் தொழிலையே புறக்கணிக்க நினைப்பவராய், சாதிய அடுக்குகளின் வன்மத்தை உணர்ந்து வேறு சாதிப் பெண் வெளிப்படுத்தும் காதலை ஏற்க தயங்குபவராய், புறம் தள்ள முடியாமல் அதற்கு இணங்குபவராய், இழிவுபடுத்த வருடம் மோதுவதற்கு உள்ளம் துணிந்தவராய், நீதிமன்ற படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கும் தந்தைக்கு துணை நிற்பவராய் பன்முக உணர்வுகளை வெளிப்படுத்தும் கதாநாயகனாக புகழ் மகேந்திரன் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

இது தனிநபர் பராக்கிரமங்களை இயற்கைக்கும், எதார்த்தத்திற்கும் மாறாக வெளிப்படுத்தாத இயல்பான கலைப்படைப்பு. அவமானங்களையும் வலியையும் தாங்கிக் கொண்டே தீரவேண்டிய, அதனால் எழும் துயரத்தையும் வெளிக்காட்ட முடியாத, அதேநேரத்தில் மனிதனாகத் தான் மதிக்கப்பட வேண்டும் என்ற விழைவை அடக்கமாக வெளிப்படுத்துகிற சிக்கலான கதாபாத்திரம். அறிமுக நிலையில் இது போன்ற வலுவான கதாபாத்திரம் வேறு நடிகர்களுக்கு கிடைத்திருக்கிறதா எனத் தெரியவில்லை. தன்னைக் காதலித்தவளுக்கு திருமணம் என்ற செய்தி வரும்போது, மிகக்குறைந்த ஒளி கொண்ட காட்சி அமைப்பில் ஒரே ஒரு கண்ணில் மட்டும் வெளிச்சம் பட, அந்த ஒரே கண் வழியே தனது உணர்வுகள வெளிப்படுத்தும் காட்சி ஒன்று போதும். புகழ், அடுத்த தலைமுறையிலும் பேசப்படும் நடிகராக மென்மேலும் வளரட்டும்.

அருமையான படப்பிடிப்பு. பகல், மாலை, முன்னிரவு, நள்ளிரவு என வானத்தின் ஜாலங்களையும், மலை முகடுகளின் பேரழகையும், மனிதர்களின் எண்ண ஓட்டங்களையும், உடல் மொழியையும் முகச் சுளிப்புகளையும், ஏன் சீமைக்கருவேல புதர்களையும் கூட துல்லியமாக, பார்ப்பவர்களின் மனதில் பதியும் வண்ணம் காமரா காட்சிப்படுத்தி இருக்கிறது.

துருத்திக் கொள்ளாத இயல்பான இசை காட்சிகளுக்கு கூடுதல் அழுத்தம் சேர்க்கிறது. இரண்டு பாடல்கள் கேட்கச் சுகமாக இருந்தன. பலமுறை கேட்பதற்கு வாய்ப்பு வந்தால் நிச்சயம் நெஞ்சில் நிற்கும்.

இயக்குநர் மகிவர்மனுக்கு சல்யூட்!

கட்டாயம் பார்த்து விடுங்கள். இது போன்ற படங்களின் வருகையை இப்படத்தின் வெற்றி கூடுதலாக்கும்.












வலை வீச்சு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 04.06.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# எங்கே எனது வேலை?

## தமிழ்நாடு முழுவதும் இளைஞர் பெருமன்றம்

# முற்றுகைப் போராட்டம்







**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் வேலையின்மைக்கு எதிராக தொடர்ந்து போராடி வருகிறது.**

எந்த காலக்கட்டத்திலும் இல்லாத அளவிற்கு வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் சமூகவிரோத செயல்களும் கலவரங்களும் நடக்க கூடிய அபாயம் உருவாகியுள்ளது. இத்தகைய சூழலில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக்குழு ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவதாக கூறிவிட்டு படித்த பட்டதாரி இளைஞர்களை பக்கோடா விற்றாவது பிழைப்பு நடத்துங்கள் என்று கூறிய மோடி அரசை கண்டித்து,

எங்கே எனது வேலை என்ற முழக்கத்தோடு முதலில் தமிழ்நாடு முழுவதும் கையெழுத்து இயக்கமும், பின்னர் பெருந்திரள் ஆர்ப்பாட்டமும் நடத்தினர். தற்போது மே.31ந்தேதி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் எங்கே எனது வேலை? தமிழக வேலைவாய்ப்பில் தமிழக இளைஞர்களுக்கே முன்னுரிமை வழங்கு என்ற முழக்கத்தோடு முற்றுகைப்போராட்டம் நடத்தப்பட்டது. இப்போராட்டங்களில் ஏராளமான இளை ஞர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு பணியிடங்களில் தமிழக இளைஞர்களுக்கு 90 சதவீதம் வழங்கு!

தமிழ்நாடு அரசு பணியிடங்களை தமிழக இளைஞர்களுக்கே முழுமையாக வழங்கிடு!

ஒன்றிய, மாநில அரசு துறைகளில் உள்ள காலிப்பணியிடைங்களை முழுமையாக நிரப்பிடு!

வேலைபெறும் உரிமையை அடிப்படை உரிமையாக்க சட்டம் நிறைவேற்றி!

நகர்ப்புற வேலைஉறுதியளிப்பு திட்டத்தை முழுமையாக அமுல்படுத்திடு!

ஒய்வு பெறும் அரசு பணியாளர்களின் வயது வரம்பு 60 ஆக உயர்த்தியதை மீண்டும் 58 ஆக மாற்றிடு!

தனியார்துறையில் இடஒதுக்கீட்டுக்கு சட்டம் நிறைவேற்று!

தற்காலிக, ஒப்பந்த, அவுட்சோர்சிங் முறையை தவிர்த்து பணிநியமனங்களை நிரந்தரமாக்கு!

சிறு மற்றும் குறுந்தொழில்களை தொடங்க இளைஞர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்கு!

குறைந்தபட்சம் மாத ஊதியம் 21ஆயிரம் என சட்டம் இயற்றிடு!

பெண்களுக்கு சமவேலைக்கு சமஊதியத்தை உத்திரவாதப்படுத்து!

போலிசான்றிதழ் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புகளை பறிப்பவர்கள் மீதும் உடந்தையாக உள்ள அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடு!

மாவட்டந்தோறும் நில அமைப்பு, மனித மற்றும் வளங்களுக்கு ஏற்றவாறு புதிய தொழில்களை தொடங்கிடு!

கிருஷ்ணகிரி ஓசூரில் நடைபெற்ற முற்றுகைப்போராட்டத்திற்கு மாவட்டதலைவர் எஸ்.யோகிநாராயணா தலைமை தாங்கினார். மாநிலசெயலாளர் க.பாரதி, மாவட்டசெயலாளர். எஸ்.ஆதில் மாவட்டதுணைச்செயலாளர்கள் சக்தி, சி.அன்பரசன் ஆகியோர் கோரிக்கைவுரையாற்றினர்.

கோவை மாநகரில் நடைபெற்ற முற்றுகை போராட்டத்திற்கு இளைஞர் பெருமன்ற மாவட்டத்தலைவர் எம். மணிகண்டன் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர் மௌ.குணசேகரன், இளைஞர் பெருமன்ற மாநிலத் துணைச் செயலாளார் வே.வசந்தகுமார், இளைஞர் பெருமன்ற தேசியக்குழு உறுப்பினர் கலை.அஸ்வினி ஆகியோர் கோரிக்கைவுரையாற்றினர்.

திருப்பூர் மாநகரில் நடைபெற்ற முற்றுகைப்போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் எஸ்.தெய்வசிகாமணி தலைமை தாங்கினார்.

நாமக்கல் குமாரபாளையத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டத்தலைவர் கே.கணேஷ்குமார் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநிலசெயலாளர் சீ.தினேஷ் கோரிக்கைவுரையாற்றினார்.

சேலம் மாநகரில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் இரா. ரமேஷ் தலைமை தாங்கினார். அகில இந் திய பொதுச்செயலாளர். இரா.திருமலை கோரிக்கைவுரையாற்றினார்.

திருப்பத்தூர் மாதனூரில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் டி.முரளி. மாவட்டசெயலாளர். எஸ்.சதிஸ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

அரக்கோணத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாணவர் பெருமன்ற மாநிலத் துணைத்தலைவர் ஆ.பிரகாஷ் தலைமை தாங்கினார்.

செங்கல்பட்டில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டத்தலைவர் சேகு வேராதாஸ் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் எம்.பார்த்தீபன் மாநிலத் துணைத்தலைவர் மோ.வெங்கடேசன் ஆகியோர் கோரிக்கைவுரையாற்றினர்.

சென்னையில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டத்தலைவர். கோட்டி சுரேஷ் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர். த.கு.வெங்கடேசன் கோரிக்கைவுரையாற்றினார்.

கடலூர் பண்ருட்டியில் நடைபெற்ற முற்றுகைப்போராட்டத்திற்கு எம்.அருண் தலைமை தாங்கினார் என்.பாலச்சந்தர் கோரிக்கை வுரையாற்றினார்.

மயிலாடுதுறையில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் எம். பிரபாகரன் தலைமை தாங்கினார்.

நாகையில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு எம்.கார்த்திகேசன் தலைமை தாங்கினார்.

தஞ்சாவூரில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் ச.சுதந்திரபாரதி மாவட்டத் தலைவர் காரல் மார்க்ஸ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

திருச்சி ரயில் நிலைய முற்றுகைப் போராட்டத்திற்கு மாநகர் மாவட்டசெயலாளர் எம்.செல்வக்குமார் தலைமை தாங்கினார். மாநகர் மாவட்டத் தலைவர் முருகேசன் புறநகர் மாவட்டத்தலைவர் எச்.அப்துல் காதர் ஆகியோர் கோரிக்கைவுரையாற்றினர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் எம்.வினோத் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் எஸ்.பத்மநாபன் கோரிக்கைவுரையாற்றினர்.

தேனி மாவட்டத்தில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் இரா.தமிழ் பெருமாள் தலைமை தாங்கினார். மாநிலக் குழு உறுப்பினர் ஆ.கௌரி மாவட்டத் துணைச்செயலாளர் சரவணபுதியவன் கோரிக்கைவுரையாற்றினர்.

மதுரை மாநகரில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.பழனிமுருகன் புறநகர் மாவட்ட செயலாளர் கே.கிருஷ்பாக்கியம் ஆகியோர் தலைமை தாங்கினர்.

தூத்துக்குடியில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர் எஸ்.சந்தனசேகர் தலைமை தாங்கினார்.

நெல்லையில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்திற்கு மாவட்டத்தலைவர் முத்துக்கிருஷ்ணன், மாவட்டசெயலாளர் எஸ்.சுரேஷ் மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.பி.பாலன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

தென்காசியில் நடைபெற்ற முற்றுகைப்போராட்டத்திற்கு மாவட்டசெயலாளர். எஸ்.குத்தாலிங்கம் தலைமை தாங் கினார். மாநிலநிர்வாககுழு உறுப்பினர் டி.இசக்கிதுரை கோரிக்கை வுரையாற்றினர்.

கன்னியாகுமரியில் மாவட்டசெயலாளர் சஜேஸ் தலைமையில் முற்றுகைப்போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டங்களில் கலந்து கொண்ட இளைஞர்களை பல்வேறு இடங்களில் கைது செய்து மாலையில் விடுவித்தனர்.

எஸ்.கணேசன் - க.கோட்டீஸ்வரி
இல்லத் திருமண
வரவேற்பு
மணமகன்
க. பாரதி சுப்பையா BE, MBA
Senior Manager iDeCK Bangalore
மணமகள்
இரா. ஐஸ்வர்யா B.Tech., ME.,
வரவேற்பு நாள்
08.06.2022 புதன்கிழமை மாலை 7.00 மணி முதல்
இடம்
லே ராயல் பார்க்,
168, காமராஜர் சாலை, புதுச்சேரி
திருமண வரவேற்பு விழாவில் அனைவரும்
கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த
அன்புடன் அழைக்கின்றோம்
ஜனசக்தி ஊழியர்கள்
தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு
தமிழ்நாடு பத்திரிகையாளர் ஒருங்கிணைப்பு சங்கம்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.